
வாழ்வியல்

அனுபவ பகிர்வு

12237



கலாபூஷணம் வீ. என். சந்திரகாந்தி

வலிகாமம் தெற்கு பிரதேச சபை

பொதுசன நூல்நிலையம்

சுன்னாகம்/ உடுவில் / ஏழாலை

முக்கிய அறிவித்தல்

நீங்கள் எடுத்துச் செல்லும் புத்தகத்தில் கீறுதல், வெட்டுதல், கிழித்தல், அழித்தல், அழுக்குப் படியவிடல் மற்றும் ஊறுபாடு களைச் செய்யவேண்டாமென மிகத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும்போது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச்சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன் ஊறுபாடு களுக்கு நூலகப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும்.

வாழ்வியல்

இது நூலகம்
சேர்ந்தது பிரதேச
அ அலுவலகம்
உடுவில்.

அனுபவ பகிர்வு

பாகம் - I

பொது நூலகம்
வல். கெற்று உடுவில்
12237
894.8114

வெளியீடு :
தி/ஜெயகாந்தி கலைகலாச்சார விளையாட்டு
மேம்பாட்டு கழகம்.
572A ஏகாம்பரம் வீதி
திருக்கோணமலை
026-2224706

நூல் விபரப்பட்டியல்

வெளியீடு :- 05

நூல் :- வாழ்வியல் - அனுபவபகிர்வு

இலக்கிய வகை :- கட்டுரை

ஆசிரியர் :- கலாபூஷணம் வீ.என்.சந்திரகாந்தி.

572A ஏகாம்பரம் வீதி

திருக்கோணமலை.

பதிப்புரிமை :- திருமதி செல்வச்சோதி சந்திரகாந்தி (071-1262527)

முதற்பதிப்பு :- 28.12.2016

கட்டுரைகள் கணனி மயப்படுத்தலும், அட்டைப்பட வடிவமைப்பும்

:- திரு.ச.சதீஷ்காந்தன்

அச்சுப் பதிப்பு :- A.R.Traders, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை.

விலை :- 250/= (தபால் செலவு தனி)

V.N.Chandragandi (HNB PLC Main Branch. Trincomalee.)

Account No : 031020435441

Email Address : vnchandragandi@gmail.com

ISBN No: 978-955-98979-0-3

பக்கம் :- 150

சொற்கள்: 21562 (கட்டுரைகள்)

நூல்கள் கிடைக்குமிடம் :- இல. 572A ஏகாம்பரம் வீதி, திருகோணமலை.

தொ. பே. 071-9392190

(ஒரு நூலினை கொள்வனவு செய்வதானது புதிய நூல் ஒன்றின் பிரசுரத்திற்கு வழிவகுப்பதாகும்)

எமது நூலகம்
மட்டக்களப்பு பிரதேச சபை
கல்வி அலுவலகம்
உடுவில்.

உள்ளே.....


I. சமர்ப்பணம்.

II. கட்டுரைகளின் விபரம்

III. அணிந்துரை

IV. கவிஞர் தாமரைத்தீவான் பார்வையில்

V. எனதுரை



சமர்ப்பணம்.

இடம் விட்டு இடம் பெயர்ந்து அல்லல்படும் நிலையிலும்...

தான் பிறந்த மண் மேல் பற்றும்...

இனத்துக்கான சுதந்திர வேட்கையும்...

சமூக தொண்டும் பற்றுறுதியும்...

உற்றார் உறவினரை பேணலும்...

இவை உடைத்தான எம் புலம் பெயர்

மக்களுக்கு...

இந் நூல் சமர்ப்பணம்!

12237

கட்டுரைகள் பிரசுரமான பத்திரிகைகள் திகதிகள்

1. நிகழ்காலத்தில் வாழ்தல்
மலைமுரசு வாரமலர் - 19.07.2014 – 25.07.2014 13
2. அனுசரித்து போதலும் முரண்படுதலும்.
மலைமுரசு வாரமலர் - 09.08.2014 – 15.08.2014 16
3. 'குழுவும் குரோதமும்''–''கோஷ்டியும் மோதலும்''
மலைமுரசு வாரமலர் - 16.08.2014 – 22.08.2014 20
4. திறமையும் புகழும்
மலைமுரசு வாரமலர் - 23.08.2014 – 29.08.2014 24
5. சிந்தித்தலும் நிந்தித்தலும்
மலைமுரசு வாரமலர் - 30.08.2014 – 05.09.2014 28
6. அர்ப்பணிப்பும் அபகரிப்பும்
மலைமுரசு வாரமலர் - 06.09.2014 – 12.09.2014 32
7. உறவுகளும் பிளவுகளும்.
மலைமுரசு வாரமலர் - 12.12.2015 – 18.12.2015 36
8. நட்பும் எதிர்ப்பாலாரும்
மலைமுரசு வாரமலர் - 11.10.2014 – 17.10.2014 41
9. கண்ணனை சந்திப்போமா?
மலைமுரசு வாரமலர் - 18.10.2014 – 24.10.2014. 45
10. வெற்றியும் தோல்வியும்'ஒரு மாற்று சிந்தனை.
வீரகேசரி வாரமலர் - 01.02.2015 49
11. ''தலைமைத்துவமும் சமூகமும்" ஒரு மாற்றுச்சிந்தனை.
வீரகேசரி வாரமலர் - 15.02.2015 54
12. எம்மை நாமே தேற்றுவோமாக!
மலைமுரசு வாரமலர் - 16.01.2016 – 22.02.2016 59
13. முகநூல் என்கின்ற சமூகவலைத்தளம்
மலைமுரசு வாரமலர் - 23.01.2016 – 29.02.2016 64
14. அன்பை சம்பாதித்தல்.
மலைமுரசு வாரமலர் - 30.01.2016 – 05.02.2016 69
15. பகையை விலைக்கு வாங்கல்
மலைமுரசு வாரமலர் - 06.20.2016 – 12.02.2016. 74
16. முயற்சி திருவினையாக்கும்.
மலைமுரசு வாரமலர் - 13.02.2016 – 19.02.2016. 79
17. சிந்தனை செய் மனமே!.
மலைமுரசு வாரமலர் - 20.02.2016 – 26.02.2016. 84

18. பக்கசார்பும் நடுவுநிலைமையும்.
மலைமுரசு வாரமலர் - 27.02.2016 – 04.03.2016. 89
19. முதுமையிலும் ஆனந்தமாக வாழலாம்.
மலைமுரசு வாரமலர் - 05.03.2016 – 11.03.2016 94
20. முகநூலின் மறுபக்கங்கள்
மலைமுரசு வாரமலர் - 12.03.2016 – 18.03.2016 99
21. ஆசியும் சாபமும்
மலைமுரசு வாரமலர் - 09.01.2016 – 15.01.2016 104
22. கொலையும் தற்கொலையும்
மலைமுரசு வாரமலர் - 26.03.2016 – 01.04.2016 109
23. அன்னதானமும் சிரமதானமும்.
மலைமுரசு வாரமலர் - 02.04.2016 – 08.04.2016 114
24. மாதரும் மன ஓர்மமும்.
மலைமுரசு வாரமலர் - 09.04.2016 – 15.04.2016 119
25. சமூக நோக்கு.
மலைமுரசு வாரமலர் - 16.04.2016 – 22.04.2016 124
26. ஜனனம் திட்டமிடப்பட்டதா ? விபத்தா ?
மலைமுரசு வாரமலர் - 23.04.2016 – 29.04.2016 129
27. என் வழி தனி வழி
மலைமுரசு வாரமலர் - 24.01.2015 – 30.01.2015 134
28. உயர்வும் தாழ்வும்
மலைமுரசு வாரமலர் - 07.02.2015 – 13.02.2015 138
29. விஞ்ஞானம் எதனைத்தேடுகின்றது
மலைமுரசு வாரமலர் - 14.02.2015 – 20.02.2015 142
30. உல்லாசமும் மகிழ்ச்சியும்
மலைமுரசு வாரமலர் - 21.02.2015 – 27.02.2015 146

அணிந்துரை

வாழ்க்கையினை ஒரு வட்டம் என்கின்றனர் பலர். எனக்கு அதில் உடன்பாடு இல்லை. பல்வேறு பரிணாமங்களை கொண்ட வாழ்வியலை வெறுமனே ஒரு தள உருவமொன்றுக்குள் வரையறை செய்தல் கடினம். தவிர 'மீண்டும் நிகழல்' என்ற பொறிமுறை மட்டுமே வாழ்வாகாது.

வாழ்க்கையினை 'கோளமானது' என்று கூறவியலும். பல்வேறு அனுபவங்கள், இரகசியங்கள், சூட்சுமங்கள் போன்றவற்றை உள்ளீடாய் கொண்ட கோளம் போன்றது வாழ்வு. ஆயினும் வாழ்க்கை ஒரு கலை என்பதில் கருத்து மாறுபாடுகள் இருக்க முடியாது. கலை என்பது அனுபவித்து உணரக்கூடிய தன்மை கொண்டது. ஒரு இனிப்பினை மென்று சுவைப்பது போல வாழ்க்கையும் சுவைக்கப்பட வேண்டியதே.

ஆனால் இதனை எவ்வாறு செய்வது? இன்றைய அவசர உலக இயங்கியலில் வாழ்க்கையினை மனிதர்கள் 'வாழ்வாங்கு வாழ்க்கையாக' வாழ்கிறார்களா என தேடினால் அதற்கு விடை இல்லை என்பதாயே உள்ளது. சுருக்கமாக கூறின் இன்றைய உலகத்தினருக்கு அதற்கும் ஒரு பிரத்தியேக வகுப்பு தேவைப் படுகிறது. யார் கண்டது எதிர்காலத்தில் 'வாழ்க்கை பாடம்' கல்லூரி களிலும் வகுப்புக்களிலும் கற்பிக்கப்படலாம்.ஏனெனில் காலத்தின் தேவை அது.

இன்றைய காலத்தில் பல்வேறு வகையான நூல்கள் வெளி வந்து கொண்டிருக்கிற போதிலும் வாழ்வியல் தொடர்பான நூல்கள் வெளிவருதல் மிக அரிதாகவே உள்ளது. அந்த வகையில் பிரபல எழுத்தாளர் வீ.என்.சந்திரகாந்தி அவர்களின் 'வாழ்வியல்' அனுபவ பகிர்வு. காலத்தின் தேவை அறிந்து வெளி வருகின்ற நூலாகவே கொள்ளப்படுகிறது.

இந்த நூல் முழுக்க முழுக்க எழுத்தாளர் எதிர்கொண்ட அனுபவங்

களின் அடிப்படையிலேயே எழுதப்பட்டுள்ளது. எழுதுவோனுக்கும் அறிவுரை கூறுவோனுக்கும் அதற்குரிய தகுதி வேண்டும் எனக்கூறுவர். ஏனெனில் தகுதியின்றி எதுவுமே அமைவதில்லை எங்கும். அந்த நோக்கில் பார்க்கையில் எழுத்தாளர் வீ.என்.சந்திரகாந்தி அவர்கள் அதற்கு தகுதியுடையவரே என்பதில் மாற்றுகருத்துக்கள் ஏதுமில்லை.

மக்களை ஈன்று வையத்துள் வாழ்வாங்கு தன் மக்களின் வாழ்வியலை உயர்த்திய பின்னர் தன் மனையாளுடன் ஓய்வு காலத்தினை இனிதே கழித்துக்கொண்டிருக்கும் பண்பாளர். தான்கண்ட, பெற்ற அனுபவங்களை மற்றவருடன் பகர்ந்து கொள்ள வேண்டுமென்ற தொலைநோக்கில் 'மலைமுரசு' வார இதழில் தொடராய் வெளிவந்த 'வாழ்வியல்' தொடரின் தேர்வு செய்யப்பட்ட கட்டுரைகளை இந்த புத்தகத்தில் தொகுத்து ள்ளார்.அவரின் நோக்கும் செயலும் போற்றுதலுக்கு உரியவை என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

புத்தகத்தில் இடம்பெறும் கட்டுரைகளும் கூட நமது வாழ்வியலை செம்மைப்படுத்த தேவையான தலைப்புக்களே. உதாரணத்துக்கு 'நிகழ்காலத்தில் வாழுதல்'. மனித வாழ்வு நிலை தடுமாறுவதற்கு பிரதான காரணம் மனிதரில் பெரும்பாலானோர் இறந்த காலத்தினை நினைத்து வருந்துவதும் எதிர்காலத்தினை நினைத்து பயம் கொள்வதுமாகும். தேவையற்ற இந்த தடுமாற்றத்தினை தொலைத்து இன்றைய வாழ்வினை இனிதே வாழ யாவரும் பழகி கொண்டால் அந்த வாழ்வே இனிய நந்தவனம்தானே.இந்த நிகழ்காலத்தில் வாழுதல் என்ற கருத்தினையே யோகிகளும் முனிவர்களும் மகான்களும் தங்களின் உபதேசங்கள் மூலம் வலியுறுத்தி வந்துள்ளனர்.அந்த உயரிய தத்துவம் இந்த நூலில் முகப்பு கட்டுரையாக இடம் பெற்றுள்ளது சாலச்சிறந்ததாய் அமைவதுடன் இந்த புத்தகம் பற்றிய எதிர்பார்ப்பினையும் அதிகரிக்கும் எனலாம். ஏனெனில் ஒரு வீட்டின் தலைவாசலை பொறுத்தே அந்த வீட்டின் அங்க இலட்சணங்கள் அமைவது நாங்கள் கண்கூடே காணும் அனுபவம். இதனை போன்றே ஏனைய கட்டுரைகளும். ஆக மொத்தத்தில் முப்பது கட்டுரைகளும்

ஓர் ஆரத்தின் முத்துக்கள் போன்றவையே.

கட்டுரைகளின் அமைப்பியலும் கூட ஓர் சிலையின் செதுக்குதல் போல நேர்த்தியாய் அமைந்துள்ளதை நாம் காணலாம். முதலில் தலைப்பினை பற்றிய அறிமுகம் அதன் பின்னர் வாழ்வியலில் அதன் தாக்கம் பின்னர் அதனுடன் தொடர்புடைய அனுபவ தேடலும் பகிர்வும் இறுதியில் அறிவுரை என இந்த கட்டுரைகளின் போக்கு அமைந்துள்ளது. இவரின் மொழியாள்கை எளிமையாய் அமைவதுடன் பாடசாலை மாணவர்களுக்கும் சராசரி மனிதர்கள் யாவரும் படித்து புரிந்து கொள்ள கூடிய வகையில் அமைந் துள்ளது இந்த புத்தகத்தின் வெற்றியாக அமைகிறது. படிப்பவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையில் எழுதுவதிலேயே ஓர் படைப்பின் நிலைபெறுகையும் பேசப்படும் தன்மையும் தங்கி இருக்கிறது.அதனை இந்த நூலில் நாம் காண முடியும்.

இந்த காலத்துக்கு தேவையான படைப்பு ஒன்றினை வெளிக் கொணரும் எழுத்தாளர் வீ.என். சந்திரகாந்தி அவர்களின் முயற்சியை பாராட்டுவதுடன் அவர் மென்மேலும் இது போன்ற படைப்புக்களை தர வேண்டும் என மொழிந்து அன்னாரின் இந்த நூல் அகிலமெங்கும் பேசப்படவேண்டுமென எல்லாம் வல்ல இறைவன் தாழ் பணிந்து நிறைவு செய்கிறேன்.

என்றும் அன்புடன்
லலிதகோபன்-தி

44/2B, கிருஸ்ணபுரம்
திருக்கோணமலை

கவிஞர் தாமரைத்தீவான் வாழ்த்துரை.

வென்றிடும்!

சந்திரகாந்தி அண்ணல்
தமிழ் உச்ச எழுத்துக்காரர்!
தந்தனார் கணக்கு நூற்றைத்
தாண்டும் டல் கட்டுரைகள்!

ஒவ்வொன்றும் ஒவ்வோர் ஆய்வு,
உயர்ந்த நற்சிந்தனைகள்!
எவ்வித குறைபாட்டுக்கும்
இடமில்லை முரசில் கண்டோம்!

'உள்ளுவதெல்லாம் (மிக்க)
உயர்வுள்ளல் ' எனும் குறட்பா! (596)
வள்ளுவம் போற்றி உண்மை
வாய்ப்புறத் தீட்டியள்ளார் !

நடுநிலை எழுத்துக்காரர்
நாவ்வர் இவ்வாறிருத்தல்
விடுபடும் எழுத்துச்சிக்கல்,
வென்றிடும் தமிழுந்தானே!

'தாமரைத்தீவான்'
44/18, கிருஷ்ணாபுரம் மட்டிக்களி.
கண்டி வீதி / திருக்கோணமலை

எனதுரை

எனது எழுபது வருடகால வாழ்க்கைப் பயணத்தில் நான் எதிர்கொண்ட சவால்கள்..... அடைந்த வெற்றிகள்..... சறுக்குண்ட போதுகள்.... இவையெல்லாம் அனுபவங்களாக எனது ஆழ் மனத்தில் பதிந்தமை தான் இந்த நூலுருவாக்கத்துக்கு காரணமெனலாம். மத்தியட்சமும் நேர்மையும் சிந்தனையின் செழுமைக்கு மிக மிக அவசியமான வையாகும். தீர்மானம் எடுப்பதற்கும் கருத்துக்கள் கூறுவதற்கும் ஒரு தகுதி வேண்டுமல்லவா?

இந்த நூலில் உள்ளடங்கியுள்ள எனது அனுபவங்களெல்லாம் அந்த தகுதியின் அடிப்படையில் உருவானவைதான்! அதனால் தான் எனது அனுபவங்களை பல தரத்தில் உள்ளவர்களும் பயன்தரும் வகையில் என்னால் முன்வைக்க முடிந்துள்ளது.

காலமானது தரித்து நிற்பதில்லை.... அது ஓடிக்கொண்டே இருக்கின்றது. அவ்விதமே எமது வாழ்கை பயணத்துக்கும் ஒய்வு கிடையாது. வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வருகின்றது.... இன்பமும் துன்பமும் வாழ்வின் இருபக்கங்கள்.... எதையும் ஏற்பதற்கும் எதிர்கொள்வதற்கும் நாம் தயாராக இருக்கவேண்டும்.

இனி உண்மை எது?.... மாயை எது?..... என்ற புரிதல் ஒவ்வொருவருக்கும் கட்டாயமாகும். அதேபோன்று நீதி நியாயம் பற்றிய அறிவு இல்லாமல் சமூகத்துடன் இணைந்து வாழமுடியாது... பிறருடன் அனுசரித்து போக வேண்டும்.... மற்றவர்களுடன் இணைந்து நன்மைகள் செய்ய வேண்டும்.

திறமையை எப்போதும் வளர்த்துக்கொள்ளவேண்டும். நல்ல சிந்தனை உயர்ச்சி தரும்..... அர்ப்பணிப்புடன் வாழவேண்டும்.... உறவுகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நட்பு போல எதுவும் இல்லை...

இறைநம்பிக்கை மிக மிக அவசியமாகும். அப்போதுதான் தலைமைத்துவ பண்பு உருவாகும்.

வாசிப்பு இன்று அரிதாகிவிட்டது. முகநூலின் பயன்பாடு அதிகரித்துவிட்டது. பயன்தரும் வழியில் அதில் ஈடுபாடுகாட்டவேண்டும். நண்பர்ளை வளர்த்துக்கொள்ள வேண்டும். பகையை தவிர்க்க வேண்டும். பக்க சார்பை தவிர்த்தல் கட்டாயம்.

குடி.... கூத்தி போன்ற தீய பழக்கங்களை தவிர்த்தால் ஆரோக்கியமாக இருக்கலாம். பிறர் வாழ்த்த நாம் வாழவேண்டும்.

மாதர்கள் மன ஓர்மத்துடன் வாழவேண்டும். சமூக தொண்டுகள் அனைத்து கவலைகளையும் போக்கடிக்கும்.

எங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இருக்கின்றது. விஞ்ஞானம் எதனை தேடுகின்றது? நாமும் அதனை தேடி உணர்ந்தால் நிச்சயமாக உல்லாசமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழமுடியும்!

அன்பு வாசகர்களே!

நான் மேலே தொட்டுக்காட்டிய விடயங்கள் இனி கட்டுரை வடிவில் தொடர்வதை காண்பீர்கள் இரு வருடங்கள் நான் வாராந்தம் தொடர்ச்சியாக 104 கட்டுரைகளை மலைமுரசிலும் வீரகேசரியிலும் வரைந்துள்ளேன். இது சாதாரண காரியமல்ல. இவற்றை குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் படித்து பயன்பெறுமாறு வேண்டுகின்றேன்.

அன்புடன்

திருமலை.வீ.என்.சந்திரகாந்தி.

01

நிகழ்காலத்தில் வாழ்தல்

வெளிநாட்டில் பிறந்து வளர்ந்த தமது பதின்மூன்று வயதேயான மகளுக்கு தாம் பிறந்த ஊரைக்காட்ட வேண்டும் என்ற ஆர்வத்தில் பெற்றோர் அவளை இந் நாட்டுக்கு அழைத்து வந்தனர். 'வான்' ஒன்றை வாடகைக்கு அமர்த்தி வடக்கு கிழக்கில் அவரது உறவினர்கள் எங்கெல்லாம் தங்கியிருக்கிறார்களோ அங்கெல்லாம் அழைத்துச் சென்றார்கள். அந்தச் சிறுமியும் உறவினர்கள் அனைவரையும் ஆர்வத்துடன் சந்தித்து அவர்கள் மீதான தனது பாசத்தை பரிமாறிக் கொண்டாள்.

விடுமுறை முடிவடைந்து வெளிநாடு திரும்புவதற்காக விமான நிலையத்தில் நின்ற போது அச் சிறுமி பெற்றோரிடம் கேட்ட கேள்வி.....

'உங்களுடைய உறவினர்கள் எல்லாம் ஏன் கவலை தோய்ந்த முகத்துடன் இருக்கின்றார்கள்?' என்பதே!

உண்மை அதுதான்! எமக்கு அது விளங்குவதில்லை. அதற்கு காரணம் நாமும் அதே நிலைக்கு உட்பட்டிருப்பதுதான்!

எமது பெரும் தவறே கடந்த காலத்தில் வாழ்வதுதான்! எமது வாழ்க்கையில் நாம் பல் தவறுகளை இழைத்திருப்போம், பல தோல்விகளை சந்தித்திருப்போம், பல துன்பங்களை அனுபவித்திருப்போம்....

தொடர்ச்சியான எண்ண அலைகள் தான் மனமாக உருவெடுக்கின்றது..

நாம் கடந்த காலத்தின் துன்ப அனுபவங்களை நினைத்துக் கொண்டிருந்தால் எமது மனமும் அதைச் சார்ந்துதான் இருக்கும்..... அதன் தொடர்ச்சியாக அகத்தில் உள்ளது முகத்தில் தெரியும்!

சரி..... அந்த தவறை சரிசெய்து கொண்டு வாழ்க்கையில் முன்னேறுவோம் என்று உறுதி எடுத்தால்..... எமது உறவுகளும் நட்புகளும் தமது நிலைப்பாட்டிலிருந்து மாறாது...!

'நீ என்னை அப்படியெல்லாம் பழிவாங்கினாய் தானே..... நான் கேட்டும் உதவி செய்ய மறுத்தாய் தானே....' என்றெல்லாம் எமக்கு பழைய சம்பவங்களை நினைவூட்டிக் கொண்டே இருப்பார்கள்!

பாருங்கள்..... எமது வாழ்க்கை நீருக்குள்ளால் நெருப்பைக் கொண்டு போவது போல் அல்லவா இருக்கின்றது!

என்றாலும் எல்லாமே எமது கையில்தான் இருக்கின்றது. கடந்த கால சம்பவங்களைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருப்பதை அறவே நிறுத்தி அவற்றை அனுபவங்களாகவும் எமது வெற்றிக்கான படிக்கட்டுக்களாகவும் கொள்ள வேண்டும்.

எமது அடுத்த தவறு எதிர்காலம் பற்றிய கவலைகளாகும். எனது எதிர்காலத்தை என்னால் எப்படி நல்லபடியாக உருவாக்கிக்கொள்ள முடியும்? எனது பெற்றோரை எப்படி பராமரிப்பேன்?, எனது பெண் சகோதரங்களை எப்படி கரைசேர்ப்பேன்.... எனது பணமுடையை எப்படி சமாளிப்பேன்.... எதிர்காலத்தில் எனக்கு உதவி செய்ய யார் உளர்?

இப்படியெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் கூட எமது மனம் இடிந்து சோர்ந்து விடும். அந்த மனத்தை வைத்துக்கொண்டு எதைத்தான் சாதிக்க முடியும்?

எமது வெளிநாட்டு உறவுகளை எடுத்துக்கொள்வோம். அவர்கள் வாழ்க்கை எவ்வாறான வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றது.... கணவன் வேலையால் வீடு திரும்பினால் மனைவி வேலைக்கு ஓடுகிறாள்... பிள்ளைகள் பாடசாலை விட்டு வீடு திரும்பினால் பெற்றோர் வீட்டில் இல்லை.... தாமே தத்தம் காரியங்களை செய்ய வேண்டும். கடந்த காலத்தைப் பற்றியோ எதிர் காலத்தைப்பற்றியோ சிந்திக்க அவர்களுக்கு நேரம் இல்லை....! அப்படி சிந்தித்தால் எதிரே வரும் வாகனத்தில் தலை போய்விடும். அல்லது இரயில்வே தண்டவாளத்தில் உடல் சிக்கிக் கொள்ளும்!

அப்படியெல்லாம் நேராமல் அவர்கள் வெற்றிகரமாக தமது வாழ்க்கையை முன்னெடுக்கிறார்கள்!

அங்குதான் நீங்கள் ஒரு உண்மையை புரிந்து கொள்ள வேண்டும்....

அவர்கள் கடந்த கால சிந்தனைகளில் மூழ்காமலும் எதிர்காலத்தை முன்னிட்ட கவலைகளில் தோயாமலும் நிகழ்காலத்தில் வாழ்கிறார்கள்.

ரமணமகரிஷி பற்றி அறியாதவர்கள் இருப்பது அரிதிலும் அரிது. பெற்றோர்கள், தமது குழந்தைச் செல்வங்களுக்கு அவருடைய வரலாற்றையும் சாதனைகளையும் பற்றி அவசியம் கூற வேண்டும்.

ரமணமகரிஷி தனது 17 வயதில் திருவண்ணாமலையில் அமைந்துள்ள அருணேஸ்வரர் ஆலயத்திற்கு புறப்பட ஆயத்தமானார். அவரது பெற்றோர் சகோதர சகோதரிகள் அவர் துறவறம் புறப்படுவதை விரும்பமாட்டார்களாதலின் தனது பயணத்தை இரகசியமாகவே வைத்துக்கொண்டார். தனது தமையனாரிடம் தான் ஒரு விசேட வகுப்புக்கு செல்வதாக கூறினார். தமையனாரும் அவரிடம் ஐந்து ரூபாவை கொடுத்து பாடசாலையில் தனது கட்டணத்தை செலுத்தும்படி கேட்டுக்கொண்டார். அவரும் பயணச் செலவுக்கு மூன்று ரூபா போதுமானதென கருதி மிகுதி இரண்டு ரூபாவையும் 'தன்னைத் தேட வேண்டாம்' என ஒரு கைத்துண்டையும் விட்டுச்சென்றார்.

ரமணமகரிஷி அருணேஸ்வரர் ஆலயத்திற்கு சென்றடைந்தபோது மீதி இருந்த பணம் தனக்கு அவசியப்படாது என தீர்மானித்து அதனை ஆற்றில் வீசி எறிந்தார்.

கடந்த காலத்தைப் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் கவலைப்படாத அந்த மகானைத்தான் பாரததேச அனைத்து மதத்தினரும் வெளிநாட்டவர்களும் தெய்வமாக வணங்கினர்!

மலைமுரசு வாரமலர் - 19.07.2014 25.07.2014

02

அனுசரித்து போதலும் முரண்படுதலும்.

எமது வாழ்வின் வெற்றி நாம் மற்றவர்களுடன் எவ்வளவு தூரம் அனுசரித்துப் போகின்றோம் என்பதிலேயே தங்கி உள்ளது. மனித இயல்பே ஒருவருடன் மற்றவர் ஒன்றிப் பழகுவதுதான். அதற்காகத்தான் மற்றவர்களை ஏற்கும் விதத்தில் எமது முகத்தில் எப்போதும் புன்னகை மலர்கின்றது.

நாம் பாதையில் நடந்து செல்லும் போது புதிதாக எம்மை எதிர்கொள்ளும் சிலர்கூட எம்மை பார்த்து புன்னகை புரிவார்கள். அதற்குக் காரணம் அவர்களில் மேலோங்கி நிற்கும் அனுசரித்து போகும் இயல்புதான்! அப்படிப்பட்டவர்கள் விரைவில் எம்முடன் நட்பு பூண்டுவிடுவார்கள். எமது பெயரையும் ஏனைய விபரங்களையும் கேட்டறிந்துவிட்டு மீண்டும் சந்திக்கும் போது நட்பு பாராட்டுவார்கள். எமக்கு உதவிகள் கூட புரிவார்கள்!

நீங்கள் அவதானித்திருப்பீர்கள்..... கடமையில் ஈடுபட்டிருக்கும் 'பொலிஸ்காரர்களில்' சிலர்கூட உங்களை பார்த்ததும் ஏற்கனவே அறிமுகமானவர்கள் போல சிரித்து தலையாட்டுவார்கள். அதற்கான உண்மையான காரணம் அவர்களது அனுசரித்துப் போகும் இயல்புதான்.

சின்னத்திரை நாடகங்களை தினம் தினம் துண்டுதுண்டாகத்தான் ஒளிபரப்புவார்கள். ஆனால் நீங்கள் தினமும் அந்தந்த நேரம் அனைத்து வேலைகளையும் ஒதுக்கிவிட்டு தொலைக்காட்சிக்கு முன் இருப்பீர்கள். அதற்கு காரணம் அந் நாடகங்களில் அனுசரித்துப்போகும் பாத்திரங்களில் உங்களுக்கு இருக்கும் அபிமானம்தான். அவர்களுக்கு ஒரு துன்பம் என்றால் உங்கள் வீட்டு பெண்கள் அழுது கூட விடுவார்கள்.....!

எமது அயலவர்களுடன் நாம் எப்போதும் அனுசரித்துப் போக வேண்டும். எமது சொந்தங்களுடன் அன்னியோன்யமாக பழக வேண்டும். அவர்களுக்கோ எமக்கோ இன்னல்கள் வரும் போது அனைவரும் ஒத்து அவற்றை வெல்ல முன்வரவேண்டும்.

அந் நாட்களில் கிராமங்களில் பணச்சடங்கு என்று ஒரு நிகழ்வு நடைபெறும். ஒரு குடும்பம் பணமுடை காரணமாக கஷ்டப்பட்டால், ஊரவர்கள் ஒன்று கூடி அக் குடும்பத்தலைவனை பணச்சடங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யும்படி ஆலோசனை கூறுவர். கொண்டாட்டம் மூன்று நாட்கள் நடைபெறும். ஒலி பெருக்கியில் சினிமா பாட்டுகள் கூட ஒலிக்கும். ஊரவர்கள் தமது கஷ்டங்களைக் கூட ஒரு பக்கம் ஒதுக்கி விட்டு அக்குடுப்பத்துக்கு இயன்றவரை உதவி செய்வர். அனுசரித்துப் போகும் இயல்பு கிராமங்களில் மிகுந்து காணப்படுவதற்கு இது ஒரு உதாரணம். அதற்கு மேலாக மக்கள் தம் கிராமத்தில் உள்ள பெட்டிக்கடையில் தான் பொருட்களை கொள்வனவு செய்வர். தமது கிராம உற்பத்திப் பொருட்களுக்கே முன் உரிமை கொடுப்பர்.....!

நிறுவனங்கள்...நாடுகள்.....இனங்கள்.....மற்றும் மதங்கள் ஒன்றை மற்றையது அனுசரித்து போனால் அங்கு சமாதானம் நிலவுவதுடன் அவற்றின் பொருளாதார நிலையும் மேலோங்கும்.....!

ஆனால் இன்று நிலைமை என்ன?

உலகில், அனுசரித்து போகும் இயல்பை, முரண்படுதல் என்னும் கிரகணம் கவிந்து கொள்ளும் நிலையே காணப்படுகின்றது.....!

இணையத் தளத்தை திறந்தால் முரண்படுதல் காரணமான திடுக்கிடும் செய்திகள்தான் எமது ஹிருதயத்தை ரணகளமாக்குகிறது

மதங்கள் அனைத்துமே எம்மை வழிநடத்தும் இறைவன் பற்றியே பேசுகின்றன. ஆனால் மத வன்முறைகள் எம்மை கண்ணீர் வடிக்க வைக்கின்றன.....

இனங்கள் அனைத்துமே இறைவனின் படைப்பேயல்லவா...? நடந்து முடிந்த இனவிரோத வன்முறைகளையும், நடந்து கொண்டிருக்கும் இன முரண்பாடுகளையும் ஒரு கணம் சிந்தித்து பாருங்கள்.....

எம்மை ஈன்றெடுத்த பெண்களுக்கெதிராக முரண்படும் ஆண்களைப் பற்றி எதைத்தான் கூறுவது....? பெண்களின் மலரை நிகர்த்த மென்மையான உடலையும் உள்ளத்தையும் கிழித்துப்போடும் முரட்டு ஆண்களால் எத்தனை எத்தனை பெண்கள் அவமானத்திற்கு உட்படுத்தப்படுகின்றார்கள்..... எத்தனை பேர் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள்... எத்தனைபேர் மரணிக்கின்றார்கள்....

ஆண்களின் முரண்படும் இயல்பால் எத்தனை ஆயிரம் 'பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள்' உருவாகிவிட்டன.

இந்த கட்டுரை எழுதபட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில் இஸ்ரேலிய சியோனிச படையினர் காஸா மீது தீவிர தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கின்றன. படையினரின் வெறிச்செயலால் காஸா நகரம் இருளில் மூழ்கியுள்ளதுடன் ஆயிரக்கணக்காண மக்கள் பலி கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த துயரமான நேரத்திலும் இரத்த வெறி பிடித்த இஸ்ரேலிய பெண் 'எம்.பி' ஒருவர், 'பாலஸ்தீன தாய்மார்களை கொன்று குவியுங்கள்' என பேசியுள்ளார். பாருங்கள்..... ஒரு பெண்ணாக இருந்து கொண்டே தாய்மார்களை கொல்லுங்கள் என்று கூறுவதற்கு எவ்வாறான முரண்பாடான மனநிலை வேண்டும்.

எனக்கு மனிதாபிமானமும் கருணை உள்ளமும் கொண்ட இஸ்லாமிய நண்பர் ஒருவர் இருக்கின்றார். அவரிடம் 'அனுசரித்து போதலும் முரண்படுதலும்' என்ற எனது எண்ணக்கரு பற்றியும், காஸா மீதான இஸ்ரேல் தாக்குதல் பற்றியும் கலந்துரையாடினேன்.

அவரது முகத்தில் தெரிந்த வேதனை ரேகைகள் என்னை கவலை கொள்ளச் செய்தன..... அவர் எனக்கு சில செய்திகளை கூறினார்.


'பாருங்கள் நண்பரே .....பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியாகிய காஸாவில் அனைத்து பள்ளிவாசல்களும் தாக்கப்பட்ட நிலையில்

ஒரு பாதிரியார் முன்வந்து முஸ்லீம் மக்கள் தொழுகைகளை தமது தேவாலயத்தில் நடத்தலாம் என கூறியுள்ளார்..... அதே போன்று அழுத்கமவில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை எதிர்த்து நாட்டின் பல்வேறு முஸ்லிம் வாழ் பிரதேசங்களிலும் நடாத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு தமிழ் இந்துக்களும் ஆதரவு வழங்கியுள்ளார்கள்.'

அவர் கூறியவை எனக்கு மகிழ்ச்சியளித்தன. ஆனால் அவர் தொடர்ந்து பேசினார்.....

'நண்பரே..... முஸ்லிம்கள் அனுசரித்துப்போகும் இயல்பினர் தான்..... ஆனால் யாருடன் அனுசரித்து போகவேண்டும் யாருடன் முரண்பட வேண்டும் என்பதை இனி மேல்தான் அவர்கள் கற்க வேண்டும்!'

மலைமுரசு வாரமலர் – 09.08.2014 15.08.2014



03

"குழுவும் குரோதமும்" - "கோஷ்டியும் மோதலும்"

தேசிய பாடசாலை ஒன்றில் உயர்வகுப்பு படிக்கும் அயல் வீட்டு சிறுமி ஒருத்தி காலை விடிந்தும் விடியாததுமாக என்னிடம் ஓடி வந்தாள்... ' அங்கிள்... இப்போதெல்லாம் உலகில் அடாவடித்தனங்கள் மிகவும் அதிகரித்திருப்பதற்கு காரணமானவர்கள் யார்?' என்று அக்கறையுடனும் ஆவலுடனும் கேட்டாள்.

அவளது கற்கை நெறிக்கு என்னிடம் இருந்து சில தகவல்களை அவள் எதிர்பார்த்திருக்கலாம். எனவே பொறுப்புடன் பதில் கூறினேன். ' குழுக்கள்.... கோஷ்டிகள்... கும்பல்கள்! அவை பற்றிய விளக்கத்தையும் கூறினேன்.

இம் மூன்று சொற்களுமே மக்கள் குழுக்களையே சார்ந்ததாயினும் இவற்றுக்கிடையே பாரிய வித்தியாசம் இருக்கின்றது.

'' குழு '' என்பது குறிப்பிட்ட தொரு நல்ல நோக்கத்திற்காக அமைக்கப்பட்டு செயல்படுவதுடன் நோக்கம் பூர்த்தியானதும் கலைந்துவிடும். 'Team','Committee' , 'Group' ஆகிய ஆங்கில சொற்கள் அதன் பொருளை நன்கு விளக்கவல்லது. நடைமுறையில் , விளையாட்டு வீரர்கள் கொண்ட குழு 'Team' என்றும் சங்கங்கள் சார்ந்த நிர்வாக குழு ' committee' என்றும் பாடசாலையில் விளையாட்டு போட்டியில் மாணவர்களை பிரிப்பதானது ' group' என்றும் குறிப்பிடலாம். தமிழ் மொழியில் அனைத்துமே குழுக்கள்தான். இந்த குழுக்கள் நல்ல எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்டாலும் இவற்றுக்கிடையே நிலவும் குரோதம், பகை, பழிவாங்கும் உணர்வு ஆகியன சகிக்க ஒண்ணாதவை!

அண்மையில் நடந்த உலக கால்பந்தாட்ட போட்டியில் ஒரு வீரர் மற்றொரு வீரரை தனது பற்களால் கடித்து குதறியமையை எவரும் மறக்க முடியாது! அதே போன்று சங்கங்கள் , அலுவலகங்கள் , கல்லூரிகளில் குழுக்கள் செய்யும் அட்டகாசங்களால் பலர் படுகாயமடைவதும் உயிராபத்துக்கள் நிகழ்வதும் தவிர்க்க முடியாதபடி உள்ளன!

'இனி, ' கோஷ்டி' என்பது யாது என ஆராயின் , அந்நாட்களில் தெட்சணமூர்த்தி (தவில்) கோஷ்டி , இராசரத்தினம் கோஷ்டி (நாதஸ்வரம்) வைரமுத்து (நாடகம்) கோஷ்டி இன்னமும் பற்பல சின்னமேள கோஷ்டிகள் பற்றி பேசப்பட்டதனை நாம் அறிவோம். அவையாவும் கோயில் திருவிழாக்களில் கொடிகட்டிப்பறந்தவை ! மக்களின் இரசனைக்கும் அன்புக்கும் பாத்திரமானவை!

ஆனால் இந்நாட்களில் கோஷ்டி என்ற சொல் தரும் பொருள் மாறுபட்டதாய் இருப்பது கவலையளிப்பதாக இருக்கின்றது. திருட்டு, போதை பொருள், பாலியல் வல்லுறவு , பழிவாங்கல் ஆகிய நோக்கங்களுக்காக சில அல்லது பல தறுதலைகள் இணைந்து செயற்படுமிடத்து அவர்களை ஒரு கோஷ்டி என ஊடகங்கள் அடையாளப்படுத்துகின்றன. சில மாதங்கள் முன்னர் யாழ்ப்பாணத்தில் பெண் ஒருவரின் தலைமையில் கொள்ளைக்கோஷ்டி ஒன்று நகரையே கலக்கியடித்தது. ஊடகங்களால் குறிப்பிடப்படும் அப்படியான கோஷ்டிகளுக்கு கொள்கை எதுவும் கிடையாது. அவர்கள் எதற்கும் துணிவார்கள். இலங்கையில் பாதாள கோஷ்டியினர் மிகவும் பிரபல்யம் பெற்றவர்கள். அரசியல் வாதிகள் சிலர் அவர்களுக்கு பணம் கொடுத்து தமது அட்டூழியங்களை நிறைவேற்றும் அடியாட்களாக பயன்படுத்தினார்கள் என்றால் பாருங்களேன்.

அதே போன்று கனடா , பிரான்ஸ், சுவிஸ், இலண்டன் மற்றும் எமது இளைஞர்கள் தொழில்புரியம் பல நாடுகளில் பல கோஷ்டிகள் எம்மவர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. எமது இளைஞர்கள் அவற்றை தமக்கு பெருமை சேர்ப்பன என்று கருதுவதுதான் பெரிய வேடிக்கை! திருட்டு , வெட்டுக்கொத்து , பாலியல் வல்லுறவு , போதைப்பொருள் பாவனை என்பவற்றுக்காக எல்லாம் அக்கோஷ்டிகள் எப்படி பாடுபட்டு உழைக்கின்றன என்பதை இணையதளம் நன்கு

புட்டுவைக்கின்றது. எனது முகநூலில் 05.08.2014 இல் ஒரு குறும் திரைப்படம் பார்த்தேன். தனது நீண்ட நாள் காதலியின் மனதை மாற்றிய ஒரு கோஷ்டி தலைவனை பழிவாங்க மற்றொரு கோஷ்டி தலைவன் நிறைவெறியில் செல்கிறான். நண்பன் தடுத்தும் கேட்கவில்லை. முடிவு பழிவாங்க சென்றவர்களே கொலையுண்டு போயினர்.

இறுதியாக கும்பல் என்ற சொல்லை பார்ப்போம் கும்பல் என்பது ஒரு இனத்தை அல்லது மதத்தை அடையாளப்படுத்தும் மக்கள் கூட்டம் என எடுக்கலாம் இதற்கு எந்த வித ஸ்தாபன விதிகளும் கிடையாது. உணர்வுகளுக்கு தீனி கிடைத்தால் இது விஸ்வரூபம் எடுத்துவிடும். கட்டுப்பாடுகள் விதிமுறைகள் என்பவற்றுக்கு பணியாத தான்தோன்றித்தனமான செயற்பாடே அதன் இலக்கு. உடைத்தல் வெட்டுதல், நொறுக்குதல் , தீவைத்தல் , கொலை செய்தல் சொத்துக்களை அபகரித்தல் ஆகிய அழிவு வேலைகளை தமது சிரம் மேற்கொண்டு நிறைவேற்றுவர். அவ்வகையில் அவர்களுக்கு திருப்தி ஏற்பட்டு விட்டால் கோஷமிட்டபடி கலைந்து செல்வர். அண்மையில் பேருவளை பகுதி நிகழ்வுகள் கும்பலின் கைவண்ணம் தான்.

நான் தினமுரசு வாரமலருக்கு கதைகளும் கட்டுரைகளும் எழுதிக்கொண்டிருந்த கால கட்டம்.... எனது இல்லம் ஒரு சிங்கள கிராமத்துக்கும். தமிழ் கிராமத்துக்கும் நடுவே வீதியோரம் இருந்தது. காலையில் எழுந்தால் ஒரு தரப்பு ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுக்கும், மறுதரப்பு அதற்கு எதிராக கும்பலாக திரண்டுவிடும். ஒரு தினம் காலை எழுந்து பார்த்த போது பூரண ஹர்த்தாலுக்கான ஏற்பாடு என கூறிக்கொண்டு ஒரு கும்பல் தெரு அடங்கலும் கண்ணாடித்துண்டுகளை பரப்பி போக்குவரத்துக்கு தடையை ஏற்படுத்தியிருந்தனர். அதனை மீறுவதற்கு தயராக மறுபக்கத்தில் மக்கள் கும்பலாக திரண்டிருந்தனர். மனைவி பிள்ளைகள் இருவருடன் வீட்டை விட்டு மாறிவிடலாமா என்று முடிவு எடுப்பதற்குள் வெடிச்சத்தங்களும் போத்தல் கல்லு பெற்றோல் குண்டுவீச்சுக்களும் ஆரம்பித்து விட்டன. குழியலறை ஒன்றே பாதுகாப்பாக இருந்தது. அப்போது எழுத்தாளர் திருக்கோவில் கவியுகன் தினமுரசு பத்திரிக்கை

காரியாலயத்தில் இருந்தார் அடிக்கடி தொலைபேசியில் எனது நிலை பற்றி கேட்டறிந்து அனுதாபங்களை தெரிவித்தார்.

வீறாப்புடன் நின்ற ஒருபக்க கும்பலைவிரட்ட பொலிஸார் எழுபதிற்கு மேற்பட்ட கண்ணீர் புகைக்குண்டுக்களை ஏவினர். அதுவே இலங்கையில் ஒரு கும்பலை விரட்டுவதற்காக ஒரே நேரத்தில் வீசப்பட்ட அதிக அளவிலான புகைக்குண்டுகளாகும் !

மலைமுரசு வாரமலர் - 16.08.2014 22.08.2014

04

திறமையும் புகழும்

ஒரு குழந்தை பிறக்கும் போதே அது சில திறமைகளை தன்னகத்தே கொண்டிருப்பதை பெற்றோராலும் நெருங்கிப்பழகும் உறவினர்களாலும் அவதானிக்க முடியும். அதற்குக் காரணம் கருவிலேயே அதற்குச் சில திறமைகள் ஊட்டப்பட்டிருப்பதுதான்!

இந்துமதம் பல முற்பிறப்புக்கள் பற்றிய நம்பிக்கையை கொண்டது. 'புல்லாகிப்பூடாய் புழுவாய் மரமாகி என்று தொடங்கி 'செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன் எம்பெருமான்...' என்பது ஈறாய் அனைத்து பிறவிகள் பற்றியும் சிவபுராணம் கூறுகின்றது.

ஒவ்வொரு பிறவியிலும் நாம் பெற்ற அனுபவமும், அறிவும், திறமையும், பிறவிகள் தோறும் எம்மை தொடர்ந்து வந்து கைகொடுக்கின்றன.

அதனால் தான் சிறுவயதிலேயே சுடர் விட்ட ஆன்மீகவாதிகளையும் விஞ்ஞானிகளையும் இந்த உலகம் கண்டது!

வெளிநாடுகளிலெல்லாம் மூன்றே வயது நிரம்பிய குழந்தை கணனி பயன்பாடு பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கின்றது. பிறந்து சில மாதங்களேயான குழந்தை, பெற்றோருடன் தடாகத்தில் நீச்சலடிக்கின்றது. 'டீன் ஏஜ்' முடிவடையாத பிள்ளைகளால் கண்டு பிடிப்புக்கள் பலவற்றை வெளிக்கொணர முடிகின்றது!

அதே போன்று கலைத்துறையை எடுத்தால் ஐந்து வயதே நிரம்பிய குழந்தை தனது சக்தி மிக்க நடனத்தால் அரங்கத்தையே அதிர வைக்கிறாள். ஐந்து வயதுக்கும் பத்து வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகள் தமது கணீர் என்ற குரல் வளத்தாலும் சங்கீத ஞானத்தாலும் மத்தியஸ்தர்களையும் பார்வையாளர்களையும் முற்று முழுதாக தம் வசப்படுத்தி விடுகிறார்கள்!

அடிப்படைப் படிப்பறிவே இல்லாத பல ஆக்க இலக்கிய படைப்பாளிகளையும் கவிஞர்களையும் நாம் எம் கண் முன்னாலேயே காண்கின்றோம். அவர்களுடைய சிந்தனா சக்தி எம்மை திகைப்புற வைக்கின்றது!

கம்பராமாயணமும் மகாபாரதமும் சாதாரண மனித பிறவிகளால் ஆக்கக்கூடிய இதிகாசங்கள் என கொள்ள முடியுமா? பாத்திரப்படைப்பு என்ன.... சிந்தனா சக்தி என்ன..... மதிநுட்பமென்ன.... இனி திருக்குறளை எடுங்கள்..... 1330 குறள்களில் (வெறுமனே ஈரடிகள்) அறம் பொருள் இன்பத்தை ஒரு தனி மனிதனால் அவனது குறுகிய வாழ்நாளில் அனுபவித்து கூறிவிடமுடியுமா?

இனி ஆன்மீகத்தை எடுங்கள்..... சம்பந்தர்..... சுந்தரர்.... திருநாவுக்கரசர்..... மாணிக்கவாசகர்...! அவர்களது தேவார திருவாசகங்கள் பற்றி சிறிது சிந்தியுங்கள்...!

அகில உலக சர்வமத மகாநாட்டில் சுவாமி விவேகானந்தரின் உரையை இந்த உலகம் உள்ளவரை மனிதனால் மறக்கமுடியுமா? அவரது விரிவுரைகள் அடங்கிய பத்து சுடர்கள் மனிதனை ஆன்மீக வழியில் நிறுத்தக் கூடியவையல்லவா? (ஆங்கிலத்தின் எட்டு சுடர்கள்)

அதே போன்று அரசியலில் மகாத்மாகாந்தி, நெல்சன்மண்டேலா,.... ஆபிரகாம்லிங்கன் , கென்னடி என திறமை கொண்டோர் பலரது பட்டியல் நீளும்.... இவைதான் திறமைகள்!

திறமை பற்றிய ஆய்வை இத்துடன் நிறுத்துவோம். இனி 'புகழ்" என்றால் என்ன என்று பார்ப்போம்.....

திறமை எங்கிருக்கின்றதோ.... அங்குதான் புகழ் இருக்க வேண்டும். இந் நாட்களில் அப்படியில்லை.... திறமை இல்லாத இடத்திலும் புகழ் போய் சேர்ந்து விடுகின்றது....!

அதற்கான உண்மையான காரணம் என்ன? ஒரே வரியில் கூறுவதென்றால்....

திறமை இறைவனால் வழங்கப்படுவது, புகழ் மனிதனால் வழங்கப்படுவது.

அங்கேதான் தவறு நேரிடுகின்றது. பெருமைக்கு அருகதை அற்றவர்களை நாம் புகழக்கூடாது. ஆனால் நாம் புகழ்கின்றோம். அது வெற்று முகஸ்துதிதான்!

அது தவிர சிலர் புகழ்ச்சியை முன்னிட்ட வேட்டையில் அலைந்து திரிகிறார்கள்.... அவர்களுக்கென தனி திறமை எதுவும் இல்லை. திறமையை வெளிப்படுத்தக் கூடிய முயற்சிகள் எதிலும் ஈடுபடுவதும் இல்லை.

இயேசுநாதர், இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்றோரின் சிரசை சுற்றி ஒரு ஒளிவட்டம் இருப்பது அவர்களது ஞானத்தை பிரதிபலிப்பதற்கு.... ஆனால் சில தற்பெருமை வாதிகள் தமது சிரசைச் சுற்றியும் அப்படி ஒரு ஒளிவட்டத்தை கற்பனையில் உருவாக்கி, தலைக்கனம் கொண்டு அலைகிறார்கள். அவர்கள் தாமாகவே திருந்த வேண்டும்.

அது தவிர பட்டங்களும் விருதுகளும் வழங்க தகுதி படைத்தவர்கள், தாம் திறமை உள்ளவர்களுக்குத்தான் அவற்றை வழங்குகிறோமா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்து, பட்டங்களும் விருதுகளும் வழங்குபவர்கள் அதற்கான தகுதி தமக்கு உண்டா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

எனது உறவினளான பெண் ஒருத்தி எப்போதும் புகழ்ச்சியை முன்னிட்டே கருமமாற்றுவாள். அவளது தந்தை ஒரு வங்கி 'மனேஜர்' ஆவர். தான் ஒரு வங்கி அதிகாரியின் மகள் என்று பெருமை பேசுவதை தவிர அவளிடம் வேறு திறமை எதுவும் இருந்ததில்லை. வங்கி மனேஜருக்கு ஒரு மாடி வீடு வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பாள். இன்னும் வீட்டு தளபாடங்கள்..... குளிரூட்டி.... தொலைக்காட்சிப்பெட்டி... தொலைபேசி என்று கேட்டு பிடிவாதம் செய்வாள். அவரிடமோ பணம் இல்லை. இருந்த காணிகளை விற்று விற்று அனைத்தையும் பெற்று கொடுத்தார். அத்தோடு விட்டாளா? கார் இல்லாமல் பாடசாலை போவது கௌரவமா? இன்னும் விற்க

காணி இல்லை. படிப்பை நிறுத்தினாள். விவாகம் என்று வந்த போது வெளிநாட்டு மாப்பிள்ளை என்று ஒற்றைக்காலில் நின்றாள். விவாகமாகி வெளிநாடு சென்றாள். அங்கு போய் பார்த்த போது மாப்பிள்ளை போதை வஸ்துவுக்கு அடிமையாகி இருந்தான். அவனை தூக்கி எறிந்து விட்டு நாடு திரும்பினாள். தந்தையுடன் சென்று சோதிடம் பார்த்தாள். அவனை விட்டால் மறுமணம் கிடையாது என சோதிடர் கூறினார். வேறு வழியின்றி பெரும் பண செலவில் மீண்டும் அவனை நாடி சென்றாள். பணம்தான் கரைந்தது. அவனுக்கு வேறு பலவீனங்களும் இருப்பதை கண்டாள். வாழ்க்கையில் எல்லையற்ற விரக்தி ஏற்பட்டது. புகழுக்காக தான் செய்த தவறுகளை எல்லாம் உணர்ந்தாள்.... எதிர்பாராத விதமாக என்னை ஒரு நாள் சந்தித்தபோது , 'வளர்த்துக்கொள்ள வேண்டியது திறமையையே அன்றி புகழை அல்ல' என்று எடுத்துரைத்தேன்.

ஆச்சரியம்! இன்று இலவச சிறுவர் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து தனது திறமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாள்!

மலைமுரசு வாரமலர் - **23.08.2014 29.08.2014**

05

சிந்தித்தலும் நிந்தித்தலும்

ஒரு கணம் விழிகளை இறுக மூடிக்கொண்டு சிந்திக்காமல் இருக்க முயற்சி செய்து பாருங்கள். முடியவே முடியாதல்லவா? அது தான் உண்மை.

இறைவனால் மனிதனுக்கு போடப்பட்ட பொறி (TRAP) அதுவேயாகும். இறந்த காலத்தை பற்றி எண்ணி கவலைப்பட்டுக்கொண்டும், எதிர்காலத்தை எண்ணி பயந்து கொண்டும் நிகழ்கால பிரச்சனைகளை எண்ணி ஏங்கியபடியும் வாழ்வது தான் மனித வாழ்க்கை என்றாகி விட்டது.

அரிஸ்டாட்டில், கார்ள்மாக்ஸ், சோக்கிரட்ஸ் போன்ற பல சிந்தனை வாதிகள் தமது சிந்தனா சக்தியால் இந்த உலகிற்கே புதுத் தென்பூட்டியிருக்கிறார்கள். இன்றும் மனித சமுதாயம் அவர்களை மறக்காமல் போற்றுகின்றது.

திருவள்ளுவரால் அருளப்பட்ட திருக்குறளை முற்றாக ஆராயின் மனித சிந்தனை எவ்வாறான சக்தியை கொண்டது..... அதன் விஸ்தீரணம், ஆழம், கூர்மை என்பன எவ்வாறானவை என்பவற்றை கண்டு கொள்ள முடியும்.

மனிதனின் சிந்தனா சக்தியை தூண்டிவிடும்படியான இந்து மத சாஸ்திரங்கள் எண்ணிலடங்கா.

அவை யாவற்றுக்கும் மேலாக வேதங்கள்.....,உபநிடதங்கள்..... விஞ்ஞானிகளால் கற்பனை செய்து பார்க்கவும் முடியாத பிரபஞ்சத்தின் கர்த்தா..... தோற்றம்..... நோக்கம் பற்றியெல்லாம் ஆதாரபூர்வமாக ஆராய்கின்றன.

எமது முன்னோர் தமது சிந்தனையால் பற்பல சாதனைகள் படைக்கையில் எம்மால் மட்டும் எமது சிந்தனையை உயர்த்திக்கொள்ள முடியாமைக்கு காரணமென்ன?

அந் நாட்களில் கணனியோ 'ஐபோன்' வசதியோ இருந்ததில்லை. தட்டச்சு செய்து கொள்ளும் வசதியும் இல்லை. ஆனால் அவர்களிடம் சிறந்த நினைவாற்றல் இருந்தது. குரு சிஷ்ய பரம்பரை வாயிலாக மதிப்புமிக்க சிந்தனைகள் பேணப்பட்டு வளர்ச்சியும் கண்டன. பற்பல ஆசான்கள் உருவாகினார்கள். சிந்தனைகள் ஓலைச்சட்டங்களில் பதிவு செய்யப்பட்டு பேணப்பட்டன. அவற்றை நிறைய பேர் வாசித்தர்கள்.

இன்றோ நாம் கணனி யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உலகத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் செய்திகள் எமக்கு எட்டிக் கொண்டிருக்கின்றன. நிறையவே நூல்கள் பிரசுரமாகிக்கொண்டிருக்கின்றன. நூல் பிரதிகள் என்பது மிகவும் இலகுவான காரியமாகி விட்டது. சிறு தொகை செலுத்தி பெருமளவு நூல்களை கொள்வனவு செய்ய முடியும். எங்கும் வாசிகசாலை வசதிகள் உண்டு. அவை யாவற்றுக்கும் மேலாக விரும்பிய புத்தகத்தை கணனியிலேயே தெரிவு செய்து படிக்க முடியும். பத்திரிகைகள், சஞ்சிகைகள் யாவும் 'ஈ மெயிலில்' கிடைக்கின்றன.

ஆனால் நாம் என்ன செய்கின்றோம். வாசிப்பு பழக்கத்துக்கே மூடுவிழா நடத்திவிட்டோம். காலையில் எழுந்ததும் கணனியில் தான் கண் விழிக்கின்றோம். முக நூலை திறந்து 'ரைம்லைனில்' (Timeline), என்னென்ன புது விடயங்கள் வந்துள்ளன என்று தேடுகின்றோம். அநாவசியமான வீடியோக்களை தேடித்தேடிப் பார்க்கின்றோம்.

'புரோட் பாண்ட் ஸ்டுடன்ற் பக்கேச்' (Broad Band Student Package) ஒன்றை குறைந்த கட்டணத்தில் இலங்கை தொலைத் தொடர்பு கூட்டுத்தாபனம் அறிமுகம் செய்துள்ளதால் இணைய வசதி மாணவர்களுக்கும் இலகுவில் கிடைக்கின்றது. அவர்கள் அதனை சரியாக பயன்படுத்துகிறார்களா என பெற்றோர் கண்காணிக்க வேண்டும்.

இந்த வழியில் தான் இன்றைய சமுதாயத்தின் வாசிப்புப் பழக்கம் பாழாகியுள்ளதுடன் சிந்தனா சக்தியும் அருகியுள்ளது. இளம் சமுதாயத்தின் மனத்தில் புத்துணர்ச்சி ஏற்படாவிட்டால் தம்மை சார்ந்தவர்களை வெறுப்பர். பெற்றோர்கள், உறவினர்கள், அயலவர், நண்பர்கள் மேல் குரோதம் கொள்வர்!

அவர்கள் மனதில் சிந்திக்கும் ஆற்றலுக்குப்பதிலாக மற்றவர்களை நிந்திக்கும் பலவீனம் உண்டாகின்றது.

மற்றவர்களை நிந்திப்பதன் மூலம் தமது பலவீனங்களை அவர்களால் மறைக்க முடிகின்றது.

பெரியவர்கள் மட்டத்திலும் குடும்பங்கள் மட்டத்திலும் ஒருவரை மற்றவர் நிந்திப்பது சகஜமாகி விட்டது.

நீங்கள் உங்கள் மனைவி பிள்ளைகளுடன் உங்கள் நண்பர் அல்லது உறவினர் வீட்டுக்கு 'விஸிற்' (Visit) பண்ணுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் போனதும் உங்களுக்கு அபார வரவேற்பும் பாராட்டும் கிடைக்கும். நீங்கள் விடைபெற்று சென்ற பின்னர் உங்களைப்பற்றிய அலசல் ஒன்று இடம்பெறும். அதில் உங்கள் மீதான பாராட்டுகளுக்கு அப்பாற்பட்ட சில கருத்துக்கள் இடம்பெறும். யாராவது ஒருவராவது உங்களை தூற்றி கதைப்பர். அதுவே நிந்தனை!

இந்த நிந்தனை புறம் சொல்லுதலா என வினவலாம். அனேகமாக அப்படித்தான்! ஆனால் வேலை செய்யும் இடங்கள்.... விவாத மேடை... நூல் வெளியீட்டு நிகழ்வுகள் ஆகியவற்றில் நிந்தனைகளை முகத்துக்கு நேராக எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

சஞ்சிகைகளில் வெளியாகும் படைப்புக்களுக்கு வரும் 'எதிர்வினைகளும்' சில சமயங்களில் நிந்தனைகளே.

எம்மை நிந்திப்பவர்களையிட்டு நாம் அதிகம் அலட்டிக்கொள்ள தேவையில்லை. ஏன் என்றால் அப்படியான ஈனச்செயல் புரிபவர்கள் நிச்சயமாக கல்வி கேள்விகளில் மேம்பட்டவர்களாக இருக்க

மாட்டார்கள். அவர்கள் போடும் கணக்கெல்லாம் தப்பானவையாகவே இருக்கும். எவரும் அவர்கள் வார்த்தையை பொருட்படுத்தமாட்டார்கள்!

ஆனால் சிந்தனாவாதிகளின் வார்த்தைகள் பெறுமதிமிக்கவை. அவர்களுடைய நல்லெண்ணத்தை பெறுவதில் நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

மகாபாரத போரின் முதலாம் நாள். தர்மவானான யுதிஷ்ரர் எதிர் அணியில் இருக்கும் பிதாமகரான பீஷ்மரை சந்தித்து அவரது கட்டளைக்காக பணிந்து நிற்கின்றார். துரியோதனன் அதனை தமக்கு வாய்த்த நல்லதொரு சந்தர்ப்பமாக கருதி, 'ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு பாண்டவர்களை சரணடைய கட்டளையிடுக' என பீஷ்மரை வற்புறுத்துகிறான். அப்போது பீஷ்மர்.....

'ஏய் துரியோதனா! நான் மரணிக்கும்வரை அஸ்தினாபுரத்தை காத்து நிற்பேன் என்று மனத்தாலும் வாக்காலும் சத்தியம் எடுத்தவன்..... ஆனால் எனது ஆத்மா கூறுவதெல்லாம் இரண்டே இரண்டு விடயங்கள் தான்.... ஒன்று 'ஆசி' மற்றையது 'சாபம்!' என்று கூறி விட்டு.....

'யுதிஷ்ரா.... நீ இந்த கிழம் உட்பட எதிரிகள் அனைவரையும் அழித்துவிடு.....' என்று ஆசி வழங்குகின்றார்.

இப்போது கூறுங்கள் நாம் பயம் கொள்ள வேண்டியது சிந்திப்பவர்களுக்கா..... நிந்திப்பவர்களுக்கா.....?

மலைமுரசு வாரமலர் - 30.08.2014 05.09.2014

06

அர்ப்பணிப்பும் அபகரிப்பும்.

வாழ்க்கையில் நாம் பலவித மனோபாவங்கள் கொண்டவர்களுடன் பழக வேண்டியவர்களாக இருக்கின்றோம்.....

அன்னை தெரேஸாவின் அன்பு, சேவை, தொண்டு ஆகியவற்றுடன் இணைந்த அவரது அர்ப்பணிப்புகளை உலகமே அறியும். அதற்காக அவர் நோபல் பரசு வழங்கி கௌரவிக்கப்பட்டார!

ஏனைய பிரதேசங்களையும் நாடுகளையும் வளங்களையும் அபகரிக்க வேண்டும் என்ற மனப்பாங்கு கொண்ட ஹிட்லர், நெப்போலியன் போன்ற அரசியல் தலைவர்கள் நாம் காண இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அர்ப்பணிப்புடன் வாழ்பவர்களை நீங்கள் அரிதாகவே சந்திக்க முடியும்..... ஆனால் அபகரிக்கும் வக்கிரபுத்தியுடன் வாழ்பவர்கள் உங்களுக்கு மிக மிக அண்மையிலும் இருக்கின்றார்கள் என்பதைப் புரிந்து கொண்டு எச்சரிக்கையுடன் காலத்தை ஓட்ட வேண்டியது உங்கள் பொறுப்பு.

அர்ப்பணிப்பு என்றால் என்ன?

அர்ப்பணிப்பு என்றால் ஏதோ எங்களால் முடிந்ததை மற்றவர்களுக்கு ஆற்றுதல் என்பதாகாது.

அது ஏழ்மையிலும் பட்டினியிலும் நோயிலும் பயங்கரவாதத்தின் கொடுமையான செயல்களிலும் இடம் பெயர்வு காரணமாக தங்குமிட வசதி இழந்த நிலையிலும் துன்புறும் மக்களின் தேவைகளினை எங்களது சக்திக்கு அப்பால் முயன்று நிறைவேற்றுதலாகும்.

இறைவனை காணவேண்டும் என்று கோயில் தீர்த்தக்கரைகள் உபந்நியாச மண்டபங்கள் தியான சாலைகள் என்றெல்லாம் அலைய வேண்டியதில்லை

சுத்தமான மனதை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் தேவைகளை அடியொட்ட சுருக்கிக் கொள்ளுங்கள். ஏழை எளியவர்களுக்காக அர்ப்பணிப்புடன்செயற்படுங்கள். அவர்களின் முகத்தில் உங்களால் இறைவனைக் காண முடியும்.

அது மட்டுமன்று, எந்தக் காரியத்தையும் நாம் அர்ப்பணிப்புடன் செய்தால் வெற்றி நிச்சயம் என்பதை எமது மனத்தில் இருத்திக் கொள்ளல் வேண்டும்.

அர்ப்பணிப்புடனான உழைப்பு எமது வாழ்வை சிகரத்துக்கு இட்டுச் செல்லும். அர்ப்பணிப்புடனான பயிற்சியும் வேகமும் விளையாட்டில் மட்டுமன்றி எந்த ஒரு போட்டியிலும் வெற்றியைப் பெற்றுத் தரும்.

அர்ப்பணிப்புடன் வாழ்பவர்களைச் சுற்றித்தான் உறவுகளும் நட்புகளும் குவியும். அதனால் உண்டாகும் மகிழ்ச்சியை அனுபவித்துப் பார்த்தால்தான் அதன் உயர்வைப் புரிந்துகொள்ளமுடியும்.

அடுத்து பெரும்பான்மை பலத்துடன் எம்மைச் சுற்றி வாழ்ந்துகொண்டிருக்கும் அபகரிக்கும் சிந்தனை கொண்டவர்களின் நோக்கங்களினையும் நடத்தைகளையும் முயற்சிகளையும் அவதானிப்போம்

சுயநலமே அவர்களின் சிந்தனையாக இருக்கும். ஏழைகளுக்கு எதுவும் ஈயமாட்டார்கள். ஆனால் பால் பழம் வடை, மோதகம், வெற்றிலை, பாக்கு, சாம்பிராணி, பணம் அனைத்தும் தட்டில் வைத்து இறைவனுக்கு அர்ச்சனை செய்வர். அன்னதானம் செய்ய முன்வரார்.

தெருவில் ஒரு குழந்தையோ பெண்ணோ விபத்து நிமித்தம் காயம் பட்டு விட்டால் அந்த இடத்தில் நடந்தது என்ன என்பதை நோட்டமிட்டுவிட்டு முதலில் நழுவும் நபர் இவர்தான்.

ஏழை அநாதைகள் வீட்டுக்கஷ்டம் நிமித்தம் சிறுவியாபாரம் செய்தால் அவர்களுடன் கெடுபிடியாக பேரம் பேசி சாமான்களை குறைந்த விலையிலே கொள்வனவு செய்ய இவர் முயற்சிப்பார்.

யாராவது கஷ்டம் நிமித்தம் நகையை ஈடு வைத்து பணம் கேட்டால் பெரும் வட்டி பேசி உதவிசெய்ய முன்வருவார்.

அவரது நண்பரான உங்களுக்கு பண உதவி தேவைப்பட்டால் வேறு ஒருவரிடம் பெற்றுத்தருவதாகக் கூறி தானே பணம்தந்து கறார் வட்டியும் வாங்குவார். பெரும் வட்டி காரணமாக நகை மூழ்கிவிட்டதாக கதை அளப்பார்.

தனது பக்கம் குற்றம் சாட்ட முடியாது என்று அவர் உறுதியாக இருந்தால் மற்றவரது பணம் நகை மற்றும் பெறுமதியான பொருள் காணி என்பவற்றையும் கையாடுவார்.

அவையாவற்றுக்கும் மேலாக குற்ற உணர்வு காரணமாக எப்போதும் தனது செயல்களை நியாயப்படுத்தி வாதாடுபவராக இருப்பார்.

மேலே நான் குறிப்பிட்டவர் ஒரு தனிநபர். அவரது அபகரிக்கும் நடவடிக்கைகளும் ஒரு எல்லைக்குள்தான் இருக்கும். ஆனால் அவர் உங்களுக்கு மிக மிக அண்மையில் வாழ்பவர்,

இனி சற்று பரந்த அளவில் பார்த்தால் திருடர்கள், வழிப்பறி கொள்ளையில் ஈடுபடுவோர் பொய், புரளி, பித்தலாட்டடம் செய்வோர் என பட்டியல் நீழும்.

நீங்கள் பிரதானமாக நிதி நிறுவனங்கள் பற்றி மிகமிக விழிப்புடன் இருக்கவேண்டும். மக்களிடம் பணம் அபகரிக்கும் கைங்கரியத்தில் அவர்கள் தான் இன்று முன்னணியில் நிற்கின்றார்கள்.

எனது நண்பர் ஒருவர் 2010ல் ஒரு நிதி நிறுவனத்தில் ரூபா ஒன்றரை இலட்சத்தை நிரந்தர வைப்பில் இட்டார். 2011இல் அந் நிறுவனம் அவருக்கு ஆசைகாட்டி அப்பணத்தை 'பங்குகளில்' முதலீடு செய்ய வைத்தது. ஓரிரு வருடங்களின் பின்னர் தான் அவர் தனது பணம் அபகரிக்கப்பட்டுவிட்டதென்பதையும் அந்த நிறுவனம் பாரிய நட்டத்தில்


இருப்பதையும் பங்குகளின் சந்தைப்பெறுமதி வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்படுவதையும் பங்குகளிற்குரிய இலாபம் வழங்கப்பட மாட்டாதென்பதையும் புரிந்து கொண்டார். 2014 வரை அவர் நேரிலும் கடித மூலமும் தனது பணத்தை திரும்பத் தருமாறு பல வேண்கோள் களினை அனுப்பினார். பதிலே இல்லை. கௌரவ ஜனாதியதியின் செயலாளர் வரை பல உயர் அதிகாரிகளிற்கும் முறையிட்டார். யாது பயனும் இல்லை

இறுதி முயற்சியாக அவர் நிதிக்கான குறைகேள் அதிகாரிக்கு (OMBUDSMAN) உரிய முறையில் முறைப்பாடு செய்தார். அதிகாரி 07.07.2014ல் கொழும்பில் விசாரணை ஒன்றை மேற்கொண்டார்.

அந் நேரத்தில் பங்குகளின் உண்மையான சந்தைப்பெறுமதிக்கு மேலதிகமாகக் கழிக்கப்பட்ட ரூபா 22500/= ஐ நிறுவனம் முறைப் பாட்டாளருக்கு திரும்பச் செலுத்த வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

பாருங்கள்..... ஒரு தடவை உங்கள் பணமோ சொத்தோ உயிரோ அபகரிக்கப்பட்டுவிட்டால் அதனை மீட்பதென்பது அசாத்தியமானதே!

மலைமுரசு வாரமலர் - 06.09.2014 12.09.2014



07

உறவுகளும் பிளவுகளும்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த வாழ்க்கை இறைவன் எமக்கு தந்த பரிசு ஆகும். எமது உடலானது நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம் ஆகிய பஞ்ச பூதங்களால் ஆனது. எமது உயிர் ஆன்மா ஆகும். ஆன்மாவானது பேரான்மாவின் அம்சமாகும். ஆன்மா தன்னை பேரான்மாவில் இணைத்துக்கொள்ள எடுக்கும் முயற்சியே வாழ்க்கை. பேரான்மாவில் இணைவதில்தான் பேரானந்தம் இருக்கின்றது. அதனை ஒவ்வொருவரும் தத்தம் தகுதிக்கேற்ப உணர்ந்து கொள்வர். இயற்கையாகவே நாம் சமூகத்துடன் இணைந்து கொள்வதற்கு காரணமாக அமைந்திருப்பதே பேரான்மா மீதான எமது நாட்டம் தான்.!

பெற்றோர், உற்றார், உறவினர், சுற்றத்தவர், நண்பர் அனைவருடனும் எமது வாழ்க்கையை எடுத்துச் செல்வதில் எமக்கு பேரானந்தம் கிட்டாவிட்டாலும் கூட நிச்சயமாக ஆனந்தம் கிட்டுகின்றது. சுற்றம் என்பது இங்கு குறிப்பிடப்பட்ட உறவுகளையே அதாவது எம்மை சூழ்ந்திருப்பவர்களை குறிப்பதாகும். திருவள்ளுவர்கூட 'சுற்றம் தழால்' என்று ஒரு அதிகாரத்தை தனது நூலில் உள்ளடக்கியுள்ளார்.

இன்று எமது உறவுகள் இணையத்தில் முகநூல் வரைக்கும் வளர்ச்சி அடைந்துள்ளது. நேரில் காணாதவர்கள் சொந்தமோ பந்தமோ அற்றவர்களுடன் கூட நாம் உறவு பாராட்டக்கூடியதாக உள்ளது. அவர்களுடன் மணித்தியாலக் கணக்கில் 'சற்' (CHAT) பண்ணுகின்றோம். பெற்றதாய், சகோதரங்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறாவிட்டாலும்கூட முகநூல் நண்பர்களுக்கு தப்பாது பிறந்தநாள் வாழ்த்து கூறுகின்றோம். முன்னேற்பாடாக 'பிறந்தநாள் நினைவூட்டல்கள்' ஒவ்வொரு முகநூல் நண்பர்கள் சார்பிலும் வருகின்றது. அப்படியே அவர்களும் எமக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார்கள். எமக்கு பரிசுப்பொருட்களையும்

சிலர் அனுப்ப செய்கின்றார்கள். புதிய அன்னிய இடங்களுக்கு செல்ல நேரும்போது முகநூல் நண்பர்களின் உதவியை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கின்றது. முகநூலில் ஆண்பால், பெண்பால் என்ற பேதமில்லாது சினேகம் கொள்வதால் நட்பு காதலாக மலரும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றது. முகநூல் நண்பர்களை குடும்பமாகவே அறிந்திருப்பதால் ஏன் காதலுக்கும் கூட பச்சை விளக்கு சிக்னல் கிடைக்கின்றது. முன்னர் பேனா நண்பர்களுக்கு இருந்த மவுசை இந்த முகநூல் இல்லாமல் செய்துவிட்டது. அயலவர்களை அறியாதவர்கள் கூட உலகின் பல நாடுகளிலும் உள்ள மனம் கவர்ந்தவர்களுடன் நட்பு பூண்டு இருக்கின்றார்கள். இதை நாகரீக வளர்ச்சியென்றோ.... விஞ்ஞான வளர்ச்சியென்றோதான் கூறவேண்டியுள்ளது.

உண்மையில் எமக்கு பிரதானமானவர்கள் யாரென்று பார்த்தால் அவர்கள் நெருக்கமாக எம்மை சுற்றியிருப்பவர்களே ஆகும். ஆறு வயது வரையிலும் குழந்தையை பெற்றோர் பராமரிக்க வேண்டி இருக்கின்றது. அதே போல் அறுபது வயதுக்குமேல் ஒருவனுக்கு தளர்ச்சி உண்டாகின்றது. அப்போதும் அவனது பிள்ளைகளோ, மருமக்களோ அவனை பராமரிக்க வேண்டியுள்ளது. நாம் வீரியத்துடன் எமது வாழ்க்கையில் செயற்படும் பொழுது எமது இரத்த உறவுகளும் அயலவரும் நண்பர்களும் எமக்கு உறுதுணையாக இருக்கின்றார்கள். அன்பு, பாசம், நேசம் மிக்க உறவுகள் கிடைக்கப்பெறுவது எமது அதிர்ஷ்டம் என்றே கருத வேண்டும். எமது வாழ்க்கையின் வெற்றிப் படிகள் ஒவ்வொன்றுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தருபவர்கள் அவர்கள் என்றே கொள்ளல் வேண்டும். அதே போன்று எமக்கு ஆபத்தோ வீழ்ச்சியோ நேரும்போதெல்லாம் கைகொடுத்து தூக்கி விடக்கூடியவர்களும் அவர்களே! எமது இளம் வயதில் இரத்த துடிப்பான நேரத்தில் நாம் சிந்திக்காமல் தவறான வழிகளில் செல்லவும் நேரலாம்.... அல்லது தவறான நண்பர்களுடன் நட்பு பூண்டு தீயவழியில் செல்லவும் நேரலாம். அப்போதெல்லாம் எமக்கு துணிவுடன் சரியான பாதையை இடித்துரைக்க கூடியவர்கள் எம்மேல் அக்கறை கொண்ட உறவுகளே. கல்வி தொழில் வாய்ப்பு ஆகிய துறைகளில் எமக்கு பொருத்தமான சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்டுவது பொருத்தமான விவாக துணையை சிபார்சு செய்வது, மனை அமைக்க

பொருத்தமான காணி விற்பனைக்கு வரும் போது தகவல் தருவது யாவும் எம்மேல் அன்பு பூண்ட உறவுகளின் பங்களிப்பே ஆகும் அல்லவா!.

மறுவளமாக நாமும் எமது உறவுகள் மீது அன்பும் மதிப்பும் வைக்க வேண்டும். எமது உறவுகளில் பலர் கல்விமான்களாக இருப்பார்கள். மற்றும் சிலர் பணம் படைத்தவர்களாகவோ நல்ல இதயம் படைத்தவர்களாகவோ மக்கள் சேவையை பிரதானமாக கொண்டவர்களாகவோ இருக்கலாம். அவர்கள் ஒவ்வொருவரதும் தகுதிகளை அறிந்து அவர்களது மனம் நோகாமல் பணிந்து நடக்க வேண்டும். அவர்களது நன்மை, தீமைகளில் தவறாது கலந்து கொள்ள வேண்டும். அவசியமான உதவிகளை நாமாக செய்ய வேண்டும் அல்லது பிறரிடம் பெற்றுக்கொடுக்க வேண்டும். சில சமயம் நாம் உறவுகளை விட்டுப்பிரிந்து தூர விலகி இருக்க நேரலாம். அச் சமயங்களில்கூட அவர்களுடன் தொடர்புகளை பேண வேண்டும்.

எம்மிடம் செல்வம் இருக்கலாம். அது எமது அகந்தையை வெளிப்படுத்துவதாக இருக்க கூடாது. எமத செல்வத்தில் உறவினர்களுக்கும் பங்கு உண்டு என்று நினைப்பவனை அனைவரும் போற்றி மதிப்பர். எமது தேவைகள் போன்றே உறவுகளுக்கும் தேவைகள் இருக்கும். எமது வீட்டு பெண்ணுக்கு வரன் வேண்டப்படுவது போலவே அவர்கள் இல்லபெண்ணுக்கும் வரன் அவசியமாகும். அப்படியான சமயங்களில் இன்சொல் பேசியும் பொருளுதவி வழங்கியும் உதவி செய்தால் அந்த நன்றியை அவர்கள் வாழ்நாள் பூராகவும் மறவாது போற்றுவர்.

நாம் எவ்விதம் உறவுகளை மதித்தும் அணைத்தும் நடக்கின்றோமோ அவ்வாறு அவர்களும் எம்மேல் பாசம் பொழிவர். தமது வீட்டில் சமைக்கவே இயலாத இக்கட்டான சந்தர்ப்பங்கள் சில உறவுகளுக்கு உண்டாகலாம். அந் நேரங்களில் எம் வீட்டு உலையில் அவர்களுக்கான உணவையும் சமைத்து பரிமாற வேண்டும். ஒருவரில் ஒருவர் தங்கியிருத்தலே வாழ்க்கை என்பது எமது அடிமனதில் பதிந்திருக்க வேண்டும்.

பெற்றோர் பிள்ளை பாசம் சகோதர பாசம், கணவன் மனைவி பாசம் காதலர் அன்பு நண்பர்களின் நட்பு இவையெல்லாமே சரித்திரம் படைத்த உறவுகளேயாகும். சந்தர்ப்பம் சூழ்நிலை சிறு சிறு மனஸ்தாபங்களை உண்டு பண்ணினாலும் உண்மையான அன்பு அவற்றை மறந்து மன்னித்து விடுவதை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம்.

இனி உறவுக்கு பகையான அம்சங்கள் பற்றி சிறிது அவதானிப்போம். ஒருவரிடம் கோப உணர்வு மிகுந்திருந்தால் அவரை உறவுகள் அண்டி நடக்க மாட்டாது. கோபம் சரியான சிந்தனையை தடை செய்ய கூடியது. இன்னும் சொல்லப்போனால் பழிவாங்கும் எண்ணத்தை ஊக்குவிக்க வல்லது. பணிவும் இனிய சொல்லும் அவரிடம் இருக்க மாட்டாது. நல்ல செயல்களை எதிர்பார்க்க முடியாது. அதே போன்று சுயநலம் உடையவர் எப்போதும் தனது தேவையை மட்டுமே கருத்தில் கொண்டவராய் இருப்பார் தனது காரிய சித்திக்காக பிறருக்கு ஏற்படக்கூடிய கஸ்டங்களையும் துன்பங்களையும் பொருட்படுத்த மாட்டார். அகங்காரம் அவர்களிடம் குடிகொண்டிருக்கும் தானே எல்லாம் அறித்தவர் என்ற நினைப்பில் இருப்பார். தன்னைவிட்டால் உயரந்தவர் யாரும் இல்லை என்று பிடிவாதம் பிடிப்பார். சாதாரணமாக சூழ்ச்சிகள் பல செய்வார். தன்னை பாதிக்க கூடிய கருமம் என்று எண்ணுபவற்றை பிறர் தலையில் சுமத்தி தப்பித்துக்கொள்வார். உறவுகள் இவர் பற்றி எப்போதும் விழிப்புடன் இருப்பதுடன் எப்போதும் விலகியே நடப்பர்.

தவிர பொய் பேசுதல் களவு லஞ்சம் நேர்மையின்மை ஆகியன உறவுக்கு பகையாகும். அவர்களை உறவுகள் மட்டுமல்ல உலகமே மதிக்க மாட்டாது!

சிலரிடம் மற்றவர்களை தண்டிக்கவேண்டும் அதன்மூலம் அவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும் என்ற பிடிவாதம் மிகுந்து இருக்கும். அவர்களை யார்தான் அனுசரித்து நடப்பர். நீதிமன்றத்தை தவிர பிறரை தண்டிக்கும் உரிமை யாருக்கும் இல்லை. வெளிநாடுகளில் பெற்றோர் தமது பிள்ளைகளை தண்டிப்பதையே சட்டம் மறுக்கின்ற போது உறவுகளுக்கிடையே இந்த நடைமுறையை யார்தான் ஏற்பார்.

சிலர் தமது தவறுகளை பிறர்மேல் போடும் பழக்கம் உடையவர்கள். இந்திய சின்னத்திரை நாடகங்கள் எல்லாமே இதை அடிப்படையாக கொண்டு புனையப்பட்ட கதையின் கருவில் உருவானவையே.


எம்மவர் பலரில் பிறரை விமர்சிக்கும் தன்மை ஒன்று உண்டு. இதனால் மனஸ்தாபங்கள் உருவாகுமே தவிர உறவு உருவாகாது.

நாம் எமது சுற்றத்தாருடன் அமைதியாகத்தான் வாழ்ந்து கொண்டிருப்போம். புதிதாக ஒருவர் தான் தூரத்து உறவு என்று கூறி சொந்தம் பாராட்டுவார். நாம் ஏமாந்தால் போதும். தான் வந்த நோக்கத்தை நிறைவேற்றி விட்டு எம்மையும் சிக்கலில் மாட்டிவிட்டு போவார்.

எந்த வகையான உறவையும் நீங்கள் யாருடன் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் ஒரு விடயத்தில் மட்டம் நீங்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். எவரையும் உங்கள் குடும்ப விவகாரங்களில் அதிகாரம் செலுத்த அனுமதிக்காதீர்கள்.!

மலைமுரசு வாரமலர் - 12.12.2015 18.12.2015

08



நட்பும் எதிர்ப்பாலாரும்.

நட்பைப் போல நன்மை தருவது உலகில் யாதொன்றும் இல்லை. நாம் நல்லோரிடத்து நட்பு பாராட்டுவதை அறிந்து கொண்டு எதிரிகள் கூட அஞ்சி ஒதுங்குவர். நல்லவர்களுடன் பழகும் முறையில் நாம் நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். அது எமக்கு அளவற்ற தைரியத்தை நல்கும். நாம் எங்கு சென்றாலும் எமக்கு உதவி செய்ய காத்திருப்பவர் எமது நண்பர்களே. வெளிநாடு செல்லும் பலருக்கு வழி காட்டிகளாக இருந்து துணை நிற்பவர்கள் நண்பர்களே!

நண்பர்கள் எமக்கு உதவி செய்யும் போது மகிழ்ச்சியுறும் நாம் அவர்களால் கண்டிக்கப்படும் போதும் அதன் தன்மையை அறிந்து எம்மை திருத்திக்கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும். அதே போன்று எமது நண்பர் தவறான வழியில் செல்லும் போது அவரை கண்டிக்கும் உரிமையையும் நாம் எடுத்துக்கொள்ளல் வேண்டும். நண்பர் கவலையடைவாரே என்று நினைத்து அவரது தவறுகளை சுட்டிக்காட்டாமல் இருப்பது அவரை பாழுங்கிணற்றில் தள்ளுவது போன்ற செயலாகும்.

இன்று, சேர்ந்து குடிப்பது..... மற்றவர்களுக்கு தீங்கு செய்வது..... பிறர் பொருளை சூழ்ச்சியால் கவர்வது போன்றவை கூட நட்பின் அம்சங்களாக கருதப்படுகின்றது. இவற்றால் பாதிக்கப்படுவது அவர்களின் பெற்றோர், மனைவி, பிள்ளைகள் தாம் என்பதை அவர்கள் உணரமாட்டார்.

ஒரு நண்பன் நியாயமான வழியில் நடந்து அவனுக்கு துன்பமோ, தண்டனையோ நேருமாயின் அத் துன்பத்தில் நாமும் பங்கேற்கலாம். ஆனால் அவனது அடாவடித்தனமான செய்கைகளால் அவன் பாதிப்புக்குள்ளாகும் போது நாம் மனம் வருந்துவதைத் தவிர என்ன செய்ய இயலும்.

தவிர, நாம் நட்புக்கொள்ளும் போதே ஒருவனது ஒழுக்கத்தை ஆராய்ந்து முன் செல்ல வேண்டும். குடிப்பழக்கம் ஒருவனிடம் இருப்பதை தெரிந்து கொள்ளாமல் அன்பு பாராட்ட தொடங்கிவிட்டால் ஒரு நாள் அவன் 'பாரில்' குடிக்கும் சந்தர்ப்பத்தில் அது தவறு என்று அவனுக்கு சுட்டிக்காட்டுவதை விடுத்து நாமும் குடிக்க தொடங்குவோம். அதே போன்று ஏனைய தீய பழக்கங்களுக்கு ஆட்படுவதையிட்டும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எனவே நாம் நட்புக்கொள்ள முன்னர் ஒருவனது குணம், குடிப்பிறப்பு, மற்றும் குறைவற்ற சுற்றம் ஆகியவற்றை ஆராய்ந்து நட்புச் செய்ய வேண்டும். பழிக்கஞ்சுபவன் நல்ல நண்பனாவான். எமக்கு ஒரு கஷ்டம் வரும் போது தமது நட்பை கைவிடுபவர் சினேகத்தையும், உலகோடு இயைந்து நடவாதவர் நட்பையும் அதே போன்று தீக்குணமுடையோர் நட்பையும் தொடரக் கூடாது. சொல்லொன்று செயலொன்று என இருப்பவர் நட்பு எவ்வகையிலும் பயனற்றது!

முன்னரெல்லாம் நட்பென்பது ஒத்த பாலாருக்கிடையே ஏற்படும் சினேகத்தையே குறித்தது. இன்று ஆண், பெண் சமத்துவம் அதிகம் பேசப்படுகின்றது. இரு பாலாரும் அலுவலகத்தில் வேலை செய்தல், பிரயாணம் செய்தல், சுற்றுலா செல்லல், விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றல், போராட்டங்களில் ஈடுபடல், கல்வி கற்றல் என்று எங்கும் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர்.

ஆணும், பெண்ணும் பழகினால் அது காதல் என்று மட்டும் பொருளாகாது. பல தேவைகளின் நிமித்தம் அவர்கள் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டிய கால கட்டத்திற்குள் நாம் வந்து விட்டோம். பெண்கள் உயர் பதவிகளில் இருக்கும் அதே சமயம் 'ஆட்டோ' ஓட்டுனர்களாகவும், பேருந்து ஓட்டுனர்களாகவும், தொடருந்து ஓட்டுனர்களாகவும்... இன்னும் கூறப்போனால் விண்வெளி வீராங்கனைகளாகவும் கூட வளர்ந்து விட்டார்கள். என்னதான் பெண்ணியம் பேசினாலும் எதிர்பாலாருக்கிடையேயான நட்பு சில கட்டுப்பாடுகளுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு இருப்பது மிகமிக அவசியமாக உள்ளது.

ஆண்களுடன் கடமை பார்க்கும் பெண்கள் தமது உடைகளிலிருந்து நடத்தைவரை அவதானத்துடன் இருக்க வேண்டும். அலுவலகம் சம்பந்தப்பட்ட விடயங்களைத் தவிர அநாவசியமாக தனது நேரத்தை அரட்டை அடிப்பதில் செலவழிக்கக்கூடாது. தனது சொந்த விடயங்களை ஆண்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடாது. தனது கஷ்டங்களை கசியவிடக் கூடாது. முக்கியமாக பிற ஆண்களிடம் உதவி பெறக் கூடாது. பத்திரிகைகளில் பலதரப்பட்ட செய்திகளும் வரும். அவற்றை ஆண்களுடன் பகிர்ந்து கொள்வதும், பரிதாபப்பட்டு கதைப்பதும், கெக்கட்டமிட்டு சிரிப்பதும், மோசமான விளைவுகளை உண்டு பண்ணும். அலுவலகங்களில் மேலதிக நேரம் வேலை செய்யும் போது பிற பெண் அலுவலகர்களுடன் இணைந்து கடமையாற்ற வேண்டும். விடுமுறை நாட்களில் அவசர தேவைக்காக கடமைக்கு அழைக்கப்பட்டால் மற்றொரு பெண் அலுவலரது துணையுடன் செல்ல வேண்டும்.

பிரயாணம், சுற்றுலா போன்ற சமயங்களில் ஆண்களுடன் சேர்ந்து செல்ல வேண்டி இருப்பது சரி.... ஆனால் உங்களுடன் வேறும் பெண்கள் இருக்க வேண்டும். அதிலும் இரவு நேரம் என்பது எந்த ஆணையும் தவறு செய்ய தூண்டும். அது பற்றி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்க வேண்டும்.

விளையாட்டுப் போட்டிகளுக்கு பயிற்றுவிப்பாளராக அநேக சந்தர்ப்பங்களில் ஆண் பாலாரே இருப்பார். மைதானம் தவிர்ந்த உள்ளக அரங்குகளில் பயிற்சி பெறும் போது உங்களுடன் மேலும் பெண்கள் பங்கு கொள்வதாக இருக்க வேண்டும்.

சட்டரீதியாக அமைந்த இராணுவம், பொலிஸ், கப்பல்படை, விமானப்படை தவிர்ந்த போராட்ட குழுக்களில் இணைந்து போராடுவது பெண்களுக்கு ஆபத்தையே உண்டு பண்ணும். அதே போன்று பாடசாலை, தனியார் கல்வி நிலையங்களிலும் ஆபத்துக்கள் நிரம்பி உள்ளன. நட்பு என்று நம்பி ஏமாந்து விடாதீர்கள். ஏனெனில் இறைவன் பெண்களையே உடல் ரீதியில் பொறுப்புக்கூறும் விதத்தில் படைத்திருக்கின்றான்!

எனது நண்பனின் மகன் ஒருவன் புதிதாக தொழில் வாய்ப்பு பெற்று நிறுவனம் ஒன்றில் இணைந்து கொண்டான். வேலை இருக்கும் நேரம் தவிர ஏனைய நேரங்களில் அவன் சக அலுவலரான இளம் யுவதி ஒருத்தியுடன் சாதாரணமாக பேசுவான். அவள் ஏற்கனவே ஒரு இளைஞனை காதலித்து பாதிப்புக்குள்ளாகி ஏமாந்தவள். அது பற்றியெல்லாம் அவள் சொல்லி சொல்லி அழுவதும் இளைஞன் அவளுக்காக பரிதாபப்பட்டு பேசுவதும் நட்பு என்ற எல்லைக்கு அப்பால் சென்று காதல் என்ற வலையில் அவர்களை வீழ்த்தியது. பல சிக்கல்களுக்கு மத்தியில் விவாகமும் நடந்தேறியது!

ஆணும், பெண்ணும் பொது இடங்களில் நட்புடன் பழகுவது ஒரு பக்கம் நியாயமாக இருக்கட்டும். ஆனால் அதனை நியாயப்படுத்த வேண்டிய இக்கட்டான நிலைமை ஏற்பட்டால் அவமானம்தான் எஞ்சும்!

மலைமுரசு வாரமலர் - 11.10.2014 17.10.2014

09

கண்ணனை சந்திப்போமா?

மகாபாரதத்தின் மக்கள் மனதை கவர்ந்த மூன்று பிரதான கதாபாத்திரங்களாக பீஷ்மர், துரோணர், கர்ணன் ஆகியோர் திகழ்கிறார்கள். இவர்கள் மூவருமே கௌரவர்கள் சார்பில் சேனாதிபதிகளாக குருஷேத்திர யுத்தத்தில் பங்குபற்றி மடிகிறார்கள். மாவீரர்களான இவர்களின் இறப்புக்கு பாண்டவர்கள் தரப்பில் அரிச்சுனனின் தேரோட்டியாக இருந்த கண்ணனின் பங்களிப்பு மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. முறையே பிதாமகர் என்றும் ஆச்சாரியார் என்றும் கொடைவள்ளல் என்றும் அஸ்தினாபுர குரு வம்சத்தால் பாராட்டி போற்றப்பட்ட இம்மூன்று பாத்திரங்களும் மரணத்திற்கு முன்னர் கண்ணனால் நேருக்கு நேர் குற்றம் சுமத்தப்பட்டு தமது தவறுகளை ஏற்றுக்கொண்டு மரணத்தை சுவீகரிக்க சித்தமாகின்றார்கள்.

பத்தாம் நாள் யுத்தத்தில் பீஷ்மர் தன்னால் இந்த அகிலத்தையே அழித்துவிட முடியும் என்று சவால் விட்டு அஸ்திரங்களை பொழிகிறார். கண்ணன் அதை தடுக்கிறான். அப்போது, தான் யார் என்பதை அவருக்கு உணர்த்துகின்றான்.

'நான் வாசுதேச கிருஷ்ணனல்ல... எந்த வம்சத்தை சேர்ந்தவனு மல்ல... மானுடனுமல்ல... நான் பரப்பிரம்மம் ஆவேன்... நான் சத்தியம், ஞானம், தர்மம் ஆவேன். என் அனுமதி பெற்றே இந்த யுத்தம் நடக்கிறது... என் அனுமதியோடுதான் அணுவானது நித்தம் அசைகிறது. என் அனுமதியோடுதான் மரணம் உம்மை நெருங்கும்!

பீஷ்மர் அதிர்ந்து விடுகிறார்...

'தங்கள் உண்மையான சொரூபத்தை அறியாமல் இருந்துவிட்டமைக்கு என்னை மன்னித்தருளுங்கள் வாசுதேவ கிருஷ்ணரே. அதற்கு

காரணமான என் தோஷங்களை எடுத்தியம்புவீர்களா...?'' என வினவி பணிகிறார்.

கண்ணன் கூறுகிறான்.

'அஞ்ஞானமே தமது தோஷம். தாம் தர்மத்தின் உண்மையை அறியவில்லை. தமது தியாகம் பற்றியே சிந்தித்தீர்... தந்தைக்காக பிரமச்சரியம் ஆற்றினீர்... இந்த அகிலத்துக்காக என்ன செய்தீர்?... தாம் தமது கடமைளை ஆற்ற தவறினீர்... இந்த யுத்தத்தை , அழிவை தடுக்கவில்லை. கர்மத்துடன் இணையவில்லை... பாண்டுவின் இராஜ்யாபிஷேகம் தம்மால் சிபார்சு செய்யப்பட்டதல்ல... திருதராஷ்டினனது காந்தாரியுடனான விவாகம் தம்மாலானதல்ல.... திருதராஷ்டினனதும் துரியோதனனதும் அநியாயங்களை தடுக்க தவறினீர். சூது விளையாட்டையும் திரௌபதி துகில் உரிதலையும் தடுக்கவில்லை. தமது தியாகம், பிரதிக்ஜை அனைத்துமே சுயநலமானது. அவற்றால் அகிலமே நன்மை பெறுமாயின் மட்டுமே அது போற்றற்குரியது.

பீஷ்மர் தமது தவறை உணர்ந்து மரணத்தை சுவீகரிக்க சித்தமானார். சிகண்டி அவர் மேல் தனது அஸ்திரத்தை செலுத்தினாள்! அர்ச்சுனன் அம்பு மழை பொழிந்தான்.

பீஷ்மனின் வீழ்ச்சியை அடுத்து சேனாதிபதியான துரோணர் தனது மகனான அசுவத்தாமன் இறந்தான் என்ற செய்தியை யுதிஷ்ரர் வாயிலாக கேட்டு நம்புகின்றார். அதனால் கோபம் கொண்டு , ''பரசுராமர் தனக்கு அளித்த அஸ்திரங்களால் அகிலத்தையே அழிப்பேன்'' என சூழுரைக்கின்றார்.

அப்போ கண்ணன் பிரசன்னமாகி துரோணரது தவறுகளை அவருக்கு எடுத்துரைக்கின்றான்.

'நற்கருமங்கள் புரிபவன் கூட துஷ்கருமங்கள் புரிபவனுடன் இணைந்து வாழ்ந்தால் அவனை துஷ்டனாகவே உலகத்தார் கணிப்பிடுவர். நீர் திருதராஷ்டிரனதும் துரியோதனதும் தவறுகளுக்கு சாட்சியாக சபையில் இருந்தவர். திரௌபதி துகிலுரியப்படுவதை உம்மால்

தடுக்க முடியவில்லை. யுத்தம் முடிவானதையிட்டு என்ன செய்தீர்? அன்பை பற்றி அறியாதிருந்தீர். அன்பு , சரி எது தவறு எது என்ற ஞானத்தை தரவல்லது. அன்பினை அறிந்திருந்தால் தாம் அதர்மவலையில் சிக்கியிருக்கமாட்டீர். தமது புதல்வனும் அதர்மக் கடலில் மூழ்கியிருக்கமாட்டான். அன்பு கருணையிலிருந்து பிறப்பது. மோகம் அகங்காரத்தில் இருந்து பிறப்பது. அன்பு பொதுநலத்துக்கு முக்கியத்துவம் வழங்குவது. ஆனால் மோகம் சுயநலமே முக்கியமானது என எண்ணுவது. அன்பானது முக்தியை வழங்கும். மோகமானது பேராசையை அளிக்கும். அன்பு தர்மமாகும். ஆனால் மோகம் அதர்மமாகும். ஞானம் , தர்மம், சக்தி பற்றி தமது புதல்வனுக்கு புகட்ட தவறினீர். அதனால் அவனும் அழிவுக்கு காரணமாகிறான். நீர் உமது மகனைப் பற்றியே சிந்தித்தீர்... அகிலத்தவரை அழிக்க தயாரானீர். உமக்கு முக்தி எப்படி சாத்தியமாகும்?

துரோணர் அதிர்ந்து விடுகிறார். மரணத்தை சுவீகரிக்க தயாராகிறார். அஸ்திரங்களை துறக்கிறார். சிரம் நிலத்தில் உருளுகிறது!

துரோணரது வீழ்ச்சியை தொடர்ந்து கர்ணன் சேனாதிபதியாகிறான். கொடைக்கு பெயர் போனவன். பரசுராமனின் சீடன். கவச குண்டலங்களையும் திவ்ய அஸ்திரங்களையும் கொண்டவன். துரியோதனன் நட்பை பெற்றவன். அதனால் அங்கதேசத்து அரசனுமானவன். அஸ்தினாபுர இராஜ்ஜியத்தின் வெற்றிக்காக கௌரவர் பக்கம் இணைந்து உழைத்தவன். வில் வித்தையில் மாவீரன்!

அர்ச்சுனனை இன்றே கொல்வேன் என துரியோதனனுக்கு வாக்களித்து களம் இறங்குகிறான்....

ஆனால் அவனது ரதத்தின் சக்கரம் பூமியில் புதைகிறது... சக்கரத்தை மீட்க முனைகையில்... வில்லேந்தாத நேரத்தில் அரிச்சுனன், கர்ணனை வதைக்க சந்தர்ப்பம் கிட்டுகிறது. பரசுராமரின் சாபம் காரணமாக அவன்கற்ற வித்தை உரிய நேரத்தில் கைகொடுக்க தவறுகிறது.

அந்த நேரம் கண்ணன் பிரசன்னமாகி கர்ணனுக்கு நேர்ந்த அந்த இக்கட்டான நிலைக்கு காரணம் கூறுகின்றான்.

' வித்தையை நீ அகிலத்துக்காக கற்கவில்லை. அர்ச்சுனனை கொல்லவேண்டும் என்ற பழி உணர்வே வியாபித்திருந்தது. நீ உன்னுடைய மனதை பொதுநலத்துக்கு சமர்ப்பிக்கவில்லை. அதர்மத்தின் மறு வடிவமான துரியனிடம் நீ உன்னை சமர்ப்பித்தாய். ஆணவம் கொண்ட அவன் காட்டிய வழியில் நடக்க தொடங்கினாய். பாஞ்சாலி துகிலுரிகையில் அவள் மானம் காக்க தவறினாய். ஈன்ற தாயான குந்தியின் வேதனையை உணரத்தவறினாய். உன் சகோதரர்களுக்கு பிறந்த புத்திரனான அபிமன்யுவையும் கடோத்கஜனையும் மண்ணில் சாய்த்தாய். அகிலத்துக்காக நீ வாழவில்லை. அதனால் யுத்தத்துக்கும் குருஷேத்திரத்தில் உண்டான அழிவுகளுக்கும் காரணமானாய். ஞானம் என்பது ஆத்மாவின் மற்றொரு வடிவம் என்பதையும் நீ அறிய தவறியதால் முக்திக்கான சந்தர்ப்பத்தை இழந்தாய்!

கர்ணன் தனது தவறுகளை உணர்கிறான். மரணத்தை சுவீகரிக்க ஆயத்தமாகிறான். அர்ச்சுனனின் அஸ்திரம் அவனது உயிரை பறிக்கிறது.

சரி...இப்போ எமது பக்கம் பார்வையை திருப்புவோம். எமது வாழ்வின் அந்தத்தில் இறைவன் எம் முன் பிரசன்னமாவது நிச்சயத்தின் மேல் நிச்சயம் என்றாகிவிட்டது !

எமது மனச் சாட்சியை தொட்டு சிந்திப்போம்....

நாம் வாழும் விதத்தில் கண்ணனை எதிர்கொள்ள நாம் தயாரா?

மலைமுரசு வாரமலர் - 18.10.2014 24.10.2014

10

'வெற்றியும் தோல்வியும்' - ஒரு மாற்று சிந்தனை.

திட்டமிட்ட வழியில் தவறுகள் எதற்கும் இடம் கொடாமல் ஒரு இலக்கை எய்துவதை நாம் வெற்றியென்று கொண்டாடுகின்றோம். அதற்கு இடைப்பட்ட சந்தர்ப்பமொன்றில் எந்தவொரு சறுக்கல் நேர்ந்தாலும் அது எம்மை தோல்வியில் செலுத்தி தீராக் கவலையில் ஆழ்த்திவிடும். அதன் பின்னர் மீண்டும் நாம் அந்த இலக்கை நோக்கி முன்னேற தீர்மானிப்போமாயின் அது எமது மன வைராக்கியத்தையும் விடாமுயற்சியையுமே வெளிப்படுத்தும்.

இங்கு ஒரு உதாரணத்தை எடுத்து நோக்குவோம். 'ரைட் சகோதரர்கள் ஒரு விமானத்தை கண்டுபிடிக்கும் முயற்சியில் பல தோல்விகளை சந்தித்தாலும் ஈற்றில் தமது முயற்சியில் வெற்றிபெற்றார்கள் என்று கண்டோம். அவர்களின் வெற்றிக்கு காரணமாக அமைந்தது என்ன? அவர்கள் அடைந்த தோல்விகளா? அல்லது அவர்களது மன ஊக்கமா?

திருவள்ளுவர் இறைமாட்சி என்ற அதிகாரத்தின் கீழ் இரண்டு குறள்களை குறிப்பிடுகிறார்.

'அஞ்சாமை ஈகை அறிவுக்கம் இன்னான்கும்

எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.'

'தூங்காமை கல்வி துணிவு உடமை இம் மூன்றும்

நீங்கா நிலன் ஆள்பவற்கு.'

வெற்றிக்கு அடிப்படை என்ன என்பதை இக் குறள்கள் இரண்டுமே மிக அழகாகவும் தெளிவாகவும் கூறிவிட்டன.

முதலாவது குறளில் நான்கு விடயங்கள் கூறப்பட்டுள்ளன. 'அஞ்சாமையை' முதலில் கூறுகிறார். சிலருக்கு இருளுக்கு அச்சம். சிலருக்கு தாம் எடுத்து கொண்ட விடயத்தில் வெல்வோமா? தோற்போமா? என்ற அச்சம். அந்த சந்தேகம் உள்ளவர்களாக நாம் இருக்ககூடாது. நாம் முதலில் எம்மை அஞ்சா நெஞ்சர்களாக உருவாக்கிகொள்ள வேண்டும். அடுத்து 'ஈகை' என்பது வேந்தர்களுக்குரிய ஒரு இயல்பேயாயினும் நாம் அதனை எமக்கு பொருந்தும் வகையில் மாற்றி எமது செயல்களுக்கு ஒத்துழைப்பு வழங்குபவர்களுக்குரிய கொடையாக கருத வேண்டும்.

அடுத்து 'அறிவு.' நாம் தெரிவு செய்த துறையில் எமது அறிவு பூரணத்துவம் உடையதாக இருக்க வேண்டும். மிக முக்கியமான இறுதி அம்சம் 'ஊக்கமாகும்'. சோம்பலகற்றி ஊக்கத்துடன் எவனொருவன் செயற்படுகின்றானோ அவனுக்கு வெற்றி நிச்சயம்.

இனி இரண்டாவது குறளை எடுத்தால் அது ஏறத்தாள முன்னைய குறளை ஒத்தது போலவே தோன்றும். ஆனால் வள்ளுவர் ஒரு போதும் கூறியது கூறல் என்ற குற்றத்திற்கு இடமளித்திருக்கமாட்டார். எனவே அக்குறளின் பொருளையும் ஊன்றி அவதானிப்போம்.

இக் குறளில் மூன்று அம்சங்கள் கூறப்படுகின்றன. முதலாவது 'தூங்காமை.' எம்மில் பலரது தொழிலே உண்பதும் தூங்குவதுதான். இராமாயணத்தில் கும்பகர்ணன் என்ற பாத்திரத்தை கம்பர் வடித்து காட்டுகிறார். இவர்களால் எந்த பயனுமில்லை. இவர்கள் எந்த செயலில்தானும் இறங்கி வெற்றியீட்ட போவதுமில்லை. படிக்கும் மாணவர்கள் நிச்சயமாக இந்த உண்மையை நினைவிலிருத்தி கொள்ளல் வேண்டும். தூங்காமல் விழித்திருந்து படிக்கும் மாணவர்கள்தான் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்று கொள்கிறார்கள்.

அடுத்து 'கல்வி'. முன்னைய குறளில் அறிவு என்ற சொல்லை பிரயோகித்த வள்ளுவர் இங்கு கல்வி என்ற சொல்லை குறிப்பிடுகின்றார். ஆனால் இரண்டும் ஒன்றல்ல. அறிவு என்பது பிறவிகள் தோறும் தொடர்வது. அது அவனுடைய மதிநுட்பத்துடன் சம்பந்தப்பட்டது. பட்டறிவு, கேட்டறிவு ஆகியவற்றால் மேலும் மேலும்

வளர்வது. திருஞானசம்பந்தர் போன்ற சமயகுரவர்களையும் பற்பல விஞ்ஞானிகளையும் மதஸ்தாபகர்களையும் எடுத்து நோக்கினால் இந்த உண்மை புரியும்.

ஆனால் கல்வி என்பது துறைகள் சார்ந்தது. ஆயகலைகள் அறுபத்தி நான்கு என தெரிந்து கொண்டுள்ளோம். இந்த கலைகளை உரிய குருமார்களிடம் கற்று பெறுவது கல்வி. இக்காலத்தில் நாம் பல்கலைக்கழகமென்றும் தொழில்நுட்ப கல்லூரி என்றும், வர்த்தக கல்வி நிலையமென்றும் நாடிச்சென்று கல்வி பயில்கின்றோம். அப்படி கற்ற ஒருவனால்தான் வெற்றி என்ற இலக்கை எட்ட முடியும்.

அடுத்து 'துணிவுடமை'. முன்னைய குறளில் ஊக்கம் என்ற சொல்லை பிரயோகித்த வள்ளுவர் இங்கு துணிவுடமை என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார். ஊக்கமென்பது எமது முயற்சியின்பால் பட்டது. துணிவுடமை எமது மனத்தைரியம் ஓர்மம் ஆகியவற்றின் பாற்பட்டது. துணிவுடைய ஒருவனால்தான் தயங்காது எந்த காரியத்திலும் இறங்க முடியும்.

ஒரு கணம் யோசித்து பாருங்கள். என்ன துணிவு இருந்தால் அமெரிக்க விண்வெளி வீரர் இருவர் தமது தாய் கலத்தையும் விட்டு பிரிந்து 'ஈகிள்' (Eagle) மூலம் பயணித்து நிலாவில் இறங்கி இருப்பர். 'ஈகிளின்' தொழில் நுட்பத்தில் ஒரு சின்ன தவறு நேர்ந்திருந்தால் கூட அவர்கள் தாய் கலத்துடன் இணைந்திருக்க முடியாது. பூமிக்கு திரும்பியிருக்க முடியாது. அதே சமயம் தாய் கலத்தின் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டிருக்க கூடிய ஒரு சின்ன தொழில் நுட்பம் அங்கிருந்த வீரரையும் சேர்த்து மூவரையும் பூமிக்கு திரும்ப முடியாதபடி செய்திருக்கும். அனைத்தையும் முற்கூட்டியே அறிந்து வைத்து கொண்டுதான் அந்த வீரர்கள் விண்வெளி பயணத்திற்கு முன்வந்தார்கள். அது தான் துணிவுடமை!

மேற்கூறிய அம்சங்களே வெற்றிக்கான அடிப்படை என்பதை கண்டோம்.

இனி, தோல்வி பற்றி பார்ப்போம். மக்கள் மத்தியில் ஒரு தவறான கருத்து பரப்பப்பட்டுள்ளது. அதாவது தோல்விதான் வெற்றிக்கான

முதற்படி என கூறப்படுகின்றது. அதில் எந்த ஒரு உண்மையும் இல்லை. ஒரு முயற்சியில் எம்மால் மேற்கொள்ளப்படும் தவறான அணுகுமுறைகளே எம்மை தோல்விக்கு இட்டுச்செல்கின்றன. தோல்வி எமக்கு மனச் சோர்வை ஏற்படுத்துகின்றது. வெற்றியை முன்னிட்ட எமது திறமைகளுக்கு அது சவுக்கடியாக விழுகின்றது. சரியான கல்வியை தேர்ந்தெடுத்ததில் தோல்வி. சரியான தொழிலை தேர்ந்தெடுத்ததில் தோல்வி, சரியான துணையை தேர்ந்தெடுத்ததில் தோல்வி, எமது திறமையை வெளிப்படுத்துவதில் தோல்வி. சற்று யோசித்து பாருங்கள். இப்படியான முக்கிய கட்டங்களில் நாம் எமது திறமையை வெளிப்படுத்தி வெற்றியீட்டுவதை விட்டு விட்டு அசட்டையாக செயற்பட்டு தோல்விக்கு இடம் கொடுத்துவிட்டு தோல்வியே வெற்றியின் முதற்படி என்று கூறி சமாதானமடைய முடியுமா?

எனது 'ரூம்மேற்' (Room Mate)ஒருத்தன். பணவிடயத்தில் படு கசவாரம். ஒரு தடவை 'பேஷியல் கிறீம்'(Facial Cream) ஒன்றை பாவிக்க விரும்பி பணம் கொடுத்து வாங்கி வந்தார். அதை பாவிக்க தொடங்கும் போது முகத்தில் பிரகாசம் ஏற்படுத்துவதற்கு பதிலாக பருக்களை அள்ளி வீசியது. ஆனால் அவர் தோல்வியை ஒத்துக்கொள்ள விரும்பவில்லை. ஒரு நாள் விட்டு மறுநாள் என்ற அடிப்படையில் கிறீமை பயன்படுத்தி முடித்தார். பின்னர் ஒரு தடவை பெற்றோருடன் சேர்ந்து ஒரு குடும்பத்தில் தனக்கு பெண் பார்க்க புறப்பட்டார். அவரது பெற்றோர் விவசாயக் குடும்பத்தை சேர்ந்தவர்கள். கூச்ச சுபாவம் கொண்டவர்கள். எனவே பெண் வீட்டாருடன் பெரிதாக கதைக்கவில்லை. பெண்வீட்டாரும் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்தி "பிள்ளை... செம்பிலை தண்ணி கொண்டுவா மகள்" என்று அழைத்தார்கள். மாப்பிளையின் நெடிய மெலிந்த உருவத்திற்கு கொஞ்சமேனும் பொருத்தமில்லாத குட்டையான பருத்த மூத்த பெண்ணுக்கு பதிலாக அழகான நிறமான தங்கை, செம்பில் நீர் கொணர்ந்து கொடுத்து விட்டு சென்றாள். பெண்ணை பிடித்து விட்டது. கொழுக்கட்டை தட்டும் மாற்றப்பட்டு எழுத்துக்கும் நாள் குறிக்கப்பட்டது. உற்றார், உறவினர், சுற்றத்தார் விவாக பதிவாளர் முன்னிலையில் மூத்த சகோதரி வந்து மாப்பிள்ளை அருகில்

போடப்பட்ட கதிரையில் அமர்ந்தாள். பிறகென்ன நாம் கூறிய 'பேஷியல்' கதை தான்.

இப்பொழுது கூறுங்கள் 'தோல்வி தான் வெற்றிக்கு முதற்படி' என்று கூறி அவர் செயற்பட புறப்பட்டிருந்தால் எப்படி இருந்திருக்கும்? எனவே நாம் செய்யும் கருமங்களை முதலிலேயே எண்ணி துணிய வேண்டும். வள்ளுவரும் எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு என்று கூறுகின்றார். அது மட்டுமன்றி ஒரு செயலால் ஏற்படக்கூடிய அழிவு என்னென்ன? ஆக்கம் என்னென்ன? பயன் எவை? என்பதை தெரிந்து கொண்டு அச் செயலில் கால் பதிக்க வேண்டும். மேலும் ஒரு செயலின் வலிமை, எமது வலிமை, மற்றவர்தம் வலிமை, எமக்கு துணையாக வர இருப்போர் வலிமை, என அனைத்தையும் எடைபோட வேண்டும். அதன் பின் காலம், இடம் இரண்டையும் கணித்து செயற்பட்டால் தோல்வியை தவிர்க்கலாம். வெற்றிமேல் வெற்றி வந்து குவியும்.

எனதருமை நெஞ்சங்களே! தோல்வி எமது தவறால் மட்டும் நேர்வதல்ல. பிறர் ஒன்று சேர்ந்து திட்டமிட்டு தோல்வியை எம்மேல் சுமத்திவிடவும் சந்தர்ப்பம் உண்டு என்பதையும் மனதில் இருத்திக் கொள்ளுங்கள். வீரமும் தீரமும்மிக்க எமது விடுதலை வேங்கைகளை பல நாடுகள் ஒன்றிணைந்து தோல்வியடைய செய்யவில்லையா? பெரும்பான்மை இனத்தவரின் பாரிய ஆதரவும் சிறந்த மன திடமும் பேச்சாற்றலும் கொண்ட எமது முன்னாள் ஜனாதிபதியை இரகசியமான முறையில் பலர் திட்டமிட்டு வீழ்த்திவிடவில்லையா?

இப்போது கூறுங்கள்..... இனி யாராவது தோல்விதான் வெற்றிக்கான முதல்படி என்று கூறினால் ஏற்றுக் கொள்வீர்களா?

வீரகேசரி வாரமலர் – 01.02.2015

11

"தலைமைத்துவமும் சமூகமும்" - ஒரு மாற்றுச்சிந்தனை.

சமூகம் என்பது மொழியாலும் மதத்தாலும் இனத்தாலும் தொடர்புபட்ட பெரும் மக்கள் கூட்டம். சீனர், ஜப்பானியர், ஐரோப்பியர், ஆபிரிக்கர், ஆசியர் என்று நாட்டை அடிப்படையாக கொண்டும் சமூகங்கள் தம்மை அடையாளப்படுத்துகின்றன. சமூகம் என்று ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது அதில் பல்வேறுபட்ட தரத்தில் உள்ள மக்களையே அது குறிப்பிடுகின்றது. ஆனாலும் ஒரு சமூகம் படிப்பறிவிலும் நாகரீகத்திலும் பண்பாட்டிலும் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியிலும் பொருளாதாரத்திலும் ஏற்ற இறக்கங்களுக்கு உள்ளாகி காணப்படுவதால் அச் சமூகம் சார்ந்த மக்களை நெறிப்படுத்த அவசியமாக இருப்பதே தலமைத்துவமாகும்.

அந்த அவசியம் ஆதி காலத்திலிருந்தே உணரப்பட்டு வந்தது. அதன் காரணமாக குடும்பத்தலைவன், கிராமத் தலைவன், மதத்தலைவன், மன்னன் என்பது போன்ற பதவிகள் சமூகத்தை வழிப்படுத்தின. சரியான தலைமைத்துவம் இல்லாத குடும்பம் சரியான வழிகாட்டுதல் இன்மையால் நெறி தவறி போகும் சந்தர்ப்பங்களுக்கு பல உதாரணங்களை முன்வைக்க முடியும். வெளிநாட்டில் தொழில் புரியும் கணவனின் கட்டுப்பாடு இன்மை காரணமாக மனைவி, பிள்ளைகள் தமது பண்பாட்டையும், கல்வியையும் சீரழித்து விடுவதும், பிரச்சனையில் சிக்குண்டு விடுவதும் சர்வசாதாரணமாக உள்ளது.

அதே போன்று ஒரு கிராமத்தை எடுத்தால் மக்கள் பொதுவானதொரு கட்டுப்பாட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருப்பர். விவாகம், மரணச்சடங்கு, கஷ்ட நஷ்டம், கொலை, களவு, அத்துமீறல்கள், அடிபிடி சச்சரவு என்று ஒரு கிராமம் முகம் கொடுக்கும் பிரச்சனைகள் நானாவிதமாக இருக்கும். அதற்காகவே இந்தியாவில் பஞ்சாயத்து என்ற பெயரில்

நியாய சபைகள் செயற்படுகின்றன. கிராமத்தின் சிரேஷ்ட பிரஜைகள் கல்விமான்கள், நியாய சபையில் அங்கத்துவம் வகிப்பர். எந்த பிரச்சனைகள் அங்கு முறைப்பாடாக வந்தாலும் அவற்றை சாட்சியங்களுடன் ஒப்பு நோக்கி தீர விசாரித்து நியாயம் வழங்குவதில் அவர்கள் வல்லவராக இருப்பார்கள். அங்கு நியாயம் வழங்கும் அங்கத்தவர்களும் அக் கிராம வாசிகளாகவே இருப்பதால் அவர்கள் ஒவ்வொரு தனி நபர் பற்றியும், அவரது தகுதி நடத்தை பற்றியும் அறிந்து வைத்திருப்பர். நியாய சபை அங்கத்தவர்கள் மக்களுக்கு முன் மாதிரியாக நடக்க கடமைப்பட்டுள்ளார்கள். ஊழல்கள், மோசடிகள் போன்ற குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் அப்பாற்பட்டு அக்கிராமத்தின் கௌரவ பிரஜைகளாக இருப்பதால் அவர்களது தலைமை சகல மட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுசரிக்கப்படுகின்றது.

அக் காலத்தில் சிற்றரசர்கள் பலரும் இருந்துள்ளனர். அவர்களுக்கு தலைமை தாங்குபவர்களாக பேரரசர் ஆதிக்கம் செலுத்தினர். சேரர், சோழர், பாண்டியர் என்று அரச வம்சங்களே நாட்டை பரிபாலித்து வந்தன. நாட்டு மக்களிடமிருந்து இறை வசூலிக்கும் அதிகாரம் அவர்களிடம் இருந்தது. பணமாகவும் தானியங்களாகவும் கால் நடைகளாகவும் அவர்கள் அரசுக்கு தேவையான நிதியை சேகரித்தனர். மறுவளமாக மக்களுக்கு வேண்டிய விவசாய குளங்களை அமைத்து கொடுத்தல் கோயில்களை கட்டிகொடுத்தல் பொது மண்டபங்களை நிர்மாணித்து கொடுத்தல் போன்ற பணிகளை செய்தனர். பிற எதிரிகளிடமிருந்து மக்களை காக்கும் வகையில் கட்டமைப்பான படையை நிறுவியிருந்தனர். கொள்ளையர்களிடமிருந்து மக்களை காத்தனர். நாட்டில் ஏழ்மை நிலவாதபடி நிர்வாகம் செய்தனர். கல்வி அறிவை மேம்படுத்தினர். புலவர்களுக்கும் கவிஞர்களுக்கும் ஊக்கம் கொடுத்தனர். அரசர் காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்களையே நாம் இன்று தலை மீது வைத்து போற்றி புகழ்கின்றோம். சங்ககாலம், சங்கமருவிய காலம், சேரர், சோழர், பாண்டியர், பல்லவர் காலங்களென இலக்கியங்கள் வகைப்படுதப்பட்டுள்ளமையை எண்ணிப்பாருங்கள். இன்றும் எமது பாடத்திட்டங்களில் உள்ளடங்கப்பட்டிருக்கும் தேவார திருவாசகங்கள் பாரதி பாடல்கள் திருக்குறள் இராமாயணம், மகாபாரதம், பற்றி சிந்தியுங்கள், இவற்றிற்கெல்லாம் காரணம் சரியான

தலமைத்துவம் அல்லவா? இன்றோ நிலமை தலைகீழ். சண்டித்தனமும் அடாத்தும்தான் அரசியலில் மேல் இடம் வகிக்கின்றது.

அடுத்து மதத்தலைவர்களின் பங்களிப்பை சற்றே உற்று நோக்கி பார்ப்போம். 'கடவுள் பாதி, மிருகம் பாதி கலந்து செய்த கலவை நான்' என்று ஒரு சினிமாப்பாடல் உள்ளது. அடிப்படையில் மனிதன் விலங்கு மனத்தை கொண்டவனே. அவன் உணர்ச்சி வசப்பட்டே, கருமமாற்றும் இயல்பினன். மாமிச பட்சணிகள், தாவர பட்சணிகளை கண்டதும் அவற்றை அடித்து சாப்பிடவே முன்பாய்கின்றன. அதே போன்றவன் தான் மனிதன். பணத்தையும் மற்ற மற்ற சொத்துக்களையும் கண்டால் அவற்றை கொள்ளையடிப்பான். மான், மரையை கண்டால் கொன்று சமைத்து உண்பான். அழகிய பெண்களை கண்டால் சகோதரி என்ற நினைப்பே வராது. அவளை மனைவி என்றோ வேசி என்றோ எண்ணி தனது இச்சையை தீர்க்க பாய்ந்து செல்வான்.

அங்குதான் மதத்தலைவர்களின் சேவை அவசியமாகின்றது. ஆதி சங்கரர், இராமகிருஷ்ணர், ரமணமகரிஷி, விவேகானந்தர் போன்ற மதத்தலைவர்களை உதாரணத்துக்கு எடுத்து பாருங்கள். அவர்கள் கீழைத்தேய மக்களை மட்டுமல்லாது மேலைத்தேய மக்களை கூட வழிநடத்தினார்கள். அவர்கள் அனைவருமே முற்றும் துறந்த ஞானிகள். பில்கேட்ஸ் (Bill gates) போன்றவர்களை அவர்களின் செல்வம் காரணமாக உலகத்தவர்கள் அறிந்து வைத்திருப்பர். ஆனால் எமது ஞானிகள் சொத்துக்களை துறந்தவர்கள் என்ற காரணத்தினால் அறியப்பட்டவர்கள். பணத்தால் செய்ய முடியாததை எமது துறவிகள் தமது ஞானத்தால் செய்தார்கள் என்று எண்ண ஆச்சரியமாக இல்லையா? இன்றோ நிலைமை வேறு. கோடிக்கணக்கில் சொத்துக்களையும் அடியாட்களையும் சினிமா கவர்ச்சியையும் கொண்ட பல ஆசாமிகள் மக்களை தவறாக வழிநடத்த முயல்கின்றனர்.

இன்று உலகில் ஜனநாயகமும் சோசலிசமும் அரசோச்சிக்கொண்டிருக்கின்றன. மக்களின் தலைவர்கள் பெரும்பாலும் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். முன் எப்போதும் இல்லாதபடிக்கு மக்களுக்கு பிரச்சனைகள் அதிகரித்து விட்டன.

மக்கள் ஏழ்மையில் மூழ்கி உள்ளார்கள். பல தேசங்களில் யுத்தமும், பயங்கரவாதமும் அவர்களது உயிரையும், இருப்பிடங்களையும், வாழ்வாதாரங்களையும் சின்னாபின்னப்படுத்தி விட்டன. அதற்காக உலகில் மரணித்துவிட்டோர் தொகை எண்ணிக்கையை கடந்து நிற்கின்றது. காயமுற்றவர்களும், ஊனமுற்றவர்களும் நிர்க்கதிக்கு உள்ளாகி விட்டனர். உறவுகள் பல காரணங்களை முன்னிட்டு இழக்கப்பட்டு விட்டன. காணாமல் போனோர் பற்றி எவ்வித தகவலும் இல்லை. மக்களை பாதுகாக்க வேண்டிய தலமைத்துவம் எங்கே.?

எந்த ஒரு நாட்டில்தானும் சிறுபான்மை இனமாக பிறந்து விட்டாலே அது பெரும் கொடுமையாகவல்லவா போய்விடுகின்றது. பெரும்பான்மை இன மக்களின் தலைமைகள் சிறுபான்மை இனத்தவரின் இரத்தத்தை உறிஞ்சி குடிப்பதில் வல்லவர்களாக இருக்கின்றார்களே அல்லாமல் அம் மக்களின் வளங்களை காப்பவர்களாகவோ அவர்களுக்கு தெம்பூட்டுபவர்களாகவோ இருக்கின்றார்களா? அத் தலைமைகள் சிறுபான்மையின மக்களுக்கு செய்யும் கொடுமை காரணமாக பலர் தப்பிப்பிழைத்தோம் என்று தாமும் தமது பிள்ளைகளும் பிற நாடுகளுக்கு போய்விடுகின்றார்கள்.

இந்நாட்களில் தலைமைகள் ஊழல்களையும் எதேச்சாதிகாரத்தையும் முன்னிறுத்தி குற்றம் சுமத்தப்படுவதுடன் அவர்களது ஆடம்பரம் மக்களின் வாழ்கை செலவை உயர்த்தும் அளவிற்கு பாதிப்பை உண்டு பண்ணுவதாகவும் அவதானிக்கப்படுகிறது.

அனைத்து தலைமைகளையும் கண்காணிப்பவன் இறைவன் அல்லவா? அவனே முன்வந்து மாற்றத்தை உண்டு பண்ணும் சந்தர்பங்களை மக்கள் கையில் கொடுக்கின்றான். தலமைத்துவத்தை தூக்கி எறிந்து விட்டு மக்கள் ஒரே கருத்துடன் ஒன்று கூடுகின்றார்கள். தலைமைகள் மிகவும் காலம் தாழ்த்தி மக்கள் எவ்வழி நாமும் அவ்வழி என்று அவர்களை பின்தொடர்கின்றனர்.

இந் நாட்களில் மக்கள் கல்வி அறிவு பெற்றவர்களாக தீர்மானிக்கும் சக்தி மேம்பட்டவர்களாக வளர்ந்து விட்டார்கள். ஒரு குடும்பத்தை எடுத்தால் கணவன், மனைவி இருவருமே கல்வி கற்றவர்களாக இருக்கின்றார்கள். இருவரும் இணைந்து தமது குடும்பத்தை

முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்கின்றார்கள். அங்கு தலைமைத்துவத்தின் அவசியம் இல்லாமல் போய்விட்டது.அதே போன்று கிராமங்கள் வளர்ச்சி பெற்று விட்டன. மக்கள் தாமே முன்வந்து ஐக்கியத்துடன் நடந்து கொள்கின்றார்கள் எல்லாவற்றிற்கும் காரணம் கல்வி வளர்ச்சியே. அதே போன்று போலி சாமியார்களை கணக்கில் எடுக்கும் நிலையிலிருந்து மக்கள் விலகி விட்டார்கள். ஆணவத்திலிருந்து விலகி தன்னடக்கத்துடன் நடக்கவும் இறைவன் பற்றிய புரிந்துணர்வை வலுப்படுத்தவும் அவர்களால் முடிகின்றது. நாட்டில் குற்றச் செயல்கள் பெருகினால் நீதித்துறையின் தலையீடு போதுமானது. சட்டங்களை பாராளுமன்றம் நிர்ணயிக்கின்றது. பாராளுமன்ற அங்கத்தவர்களை மக்கள் தான் தேர்ந்தெடுக்கின்றார்கள். தலமைத்துவம் என்ற பெயரில் மக்களை அடக்கி ஆண்ட காலம் சிறிது சிறிதாக மலையேறி போய்விட்டது. இணையம் மக்கள் வாழ்வில் பிரதானமான இடத்தை ஆக்கிரமித்துவிட்டது. அரசியல் , விஞ்ஞானம் , சமயம், பொருளாதாரம் உட்பட சகல துறைகள் பற்றிய நவீன சிந்தனைகளை மக்களுக்கு ஆதாரபூர்வமாக வழங்குகின்றது. எந்த ஒரு சந்தேகத்தையும் கூகிள் (Google) போன்ற தேடல் பொறிகள் தீர்த்துவைக்கின்றன. மக்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குகின்றன. தலைமைத்துவத்தை நாடவேண்டிய தேவை அரிதாகிக்கொண்டு செல்கின்றது. சற்று சிந்தியுங்கள்... இன்று தலைமைத்துவம் சாதிப்பவை என்ன?

வீரகேசரி வாரமலர் - 15.02.2015

12

—— எம்மை நாமே தேற்றுவோமாக!

ஒரு குழந்தைக்கு விளையாட்டுக் காண்பிப்பதொன்றும் பெரிய விடயமேயல்ல. ஆனால் அது எதற்காகவேனும் அடம் பிடிக்கத் தொடங்கிவிட்டால் அதனை தேற்றுவதென்பது இயலுமான காரியமேயல்ல. அதனை அணைக்க வேண்டும்... முத்தமாரி பொழியவேண்டும்.... ஆள் மாறி ஆள் தூக்கவேண்டும்... கவனத்தை திசைதிருப்ப வேண்டும்... அத்தனைக்கும் பின்னர் தான் அது சிறிது சமாதானமாகி மனம் திறந்து சிரிக்கும்!

எம்மை எமது பிடிவாதத்தை எவராது முன்வந்து தேற்றுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. நாம் தான் முன்னெச்சரிக்கையுடன் இருந்து எமக்கு நேரிடக்கூடிய இடர்கள், துன்பங்கள் , கவலைகள் , தோல்விகள் ஆகியவற்றில் இருந்து விலகி நடக்க கூடியவர்களாக எம்மை ஆளாக்கி கொள்ள வேண்டும்.

'ஆசை தான் துன்பத்திற்கு காரணம்' என்று புத்தர் கூறியதன் உண்மையை நாம் மனத்தில் பதித்துக்கொள்ள வேண்டும். அளவற்ற ஆசைகளால் அளவுக்கதிகமான துன்பம் தான் விருத்தியாகும். எனவே ஆசைகளை அளவுடன் நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். கல்வியில் மேதையாகவேண்டும்... உயர்ந்த பதவியில் இருக்கவேண்டும்.... பணக்காரனாக இருக்க வேண்டும்... அழகான மனைவியை அடைய வேண்டும்... இப்படியே ஆசைகளை திட்டமிட்டுக்கொண்டு போகலாம். ஆனால் அவை எமது தகுதிக்கும் திறமைக்கும் ஏற்பவே சித்திக்கும் என்பதை உள் மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான அப்துல் கலாம் கூட 'கனவு காணுங்கள் மக்களும் நாடும் முன்னேறும்' என்று கூறிச்சென்றார். அதில் உண்மை இருக்கவே செய்கின்றது. ஆனால் நீங்கள் நிறைவேறாத ஆசைகளை இட்டு துன்பப்பட்டு உங்களை தேற்றுவாரற்று துன்பப்படக்கூடாது. அது முக்கியமானதாகும். இந்த

உலகத்தில் வெளிப்படையான ஒரு நியதியுண்டு. அது ஒவ்வொருவருக்கும் விதித்ததுதான் அமையும் என்பதாகும். பட்டப்படிப்பை உங்களால் பூர்த்திசெய்ய முடியவில்லையா ? நிறைய வாசித்தும் அதிகமாக எழுதியும் உங்கள் தகுதியை நிரூபித்துக் கொள்ளுங்கள். உயர்ந்த பதவி கிடைக்காவிட்டால் போகட்டும்... உங்களது சேவைமனப்பான்மை உங்களை சிகரமளவிற்கு உயர்த்தி விடும் என்று நம்பி செயற்படுங்கள். பணக்காரனாக முடியவில்லை என்ற கவலையை விடுங்கள். உங்கள் வருமானம் உங்கள் தேவைக்கு போதுமானதாக இருக்கும் படி செலவுகளை கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் எதிர்பார்த்தபடி அழகான நிறமான மனைவி கிடைக்காததையிட்டு கவலை கொள்ளாமல் அவளிடம் குடி கொண்டுள்ள அன்பு, பாசம், பண்பு, அறிவு, ஆகியவற்றிற்காக மகிழ்ச்சி யடையுங்கள். குறைகள் இருந்தால் அதற்கான பிரதியீட்டை கண்டுபிடிப்பதில்தான் எமது வாழ்கையின் வெற்றி தங்கியுள்ளது.!

ஒரு விடயத்தில் நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். அது பிறரது வாழ்கையை ஒரு போதும் எம்முடன் ஒப்பிட்டு ஏங்க கூடாது என்பதாகும். பிறரை போல நாமும் வாழவேண்டும் என்று நினைப்பதை போன்ற ஒரு முட்டாள்தனம் எதுவுமே இருக்க முடியாது. சிலர் அப்படி நினைத்து ஓடி ஓடி உழைப்பார்கள். எனது நண்பன் ஒருவன். வெளிநாட்டில் மூன்று 'ஷிப்ட்' வேலைசெய்து பணம் சம்பாதிப்பான். வருடம் ஒரு தடவை தனது மனைவி இரு பெண்பிள்ளைகளை தனது சொந்த ஊருக்கு அழைத்துவந்து உறவினர்களுக்கு தம்பட்டம் அடிப்பான். பின்னர் கடனாளியாகி திரும்பிப்போவன். இதில் என்ன சுகம் இருக்க முடியும்?. ஒருவன் மன அமைதியுடன் வாழ்வதற்கு வருவாய் எவ்வளவு அவசியமோ அதே போன்று சேமிப்பும் கட்டாயமாகும். எமது செலவுகள் எப்போதும். இன்று போல சிக்கனமாக கட்டுப்பாட்டுக்குள் இருக்க மாட்டாது. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அவற்றிற்கு முகம் கொடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். இனி வருவாயானது ஒரு வழியில் சம்பாதிக்கப்படுவதாகவும் இருக்க கூடாது. மாற்று வருவாய் கட்டாயமாக இருக்க வேண்டும். அப்போதுதான். ஒரு வருவாய் தடைப்பட்டாலும். மற்ற துறைகளில் கிடைக்கபெறும் வருவாய்

வாழ்க்கை பாதையை சுமூகமாக ஓட்டிச்செல்ல வழிவகுக்கும். அந்நேரத்தில் எவரிடமும் சென்று கையேந்தும் நிலை ஏற்படாது.

அதே போன்று உங்களுக்கு கிடைத்துவிட்ட உத்தியோகத்துடனோ பதவியுடனோ திருப்தியடையாதீர்கள். உங்கள் கல்வியையும் ஆற்றலையும் மேம்படுத்துவன் மூலம் பதவியையும் வருமானத்தையும் உயர்த்திக்கொள்ளும் வழியை பாருங்கள் ஒருபோதும் பிறரிடமிருந்து என்ன உதவியை பெறலாம் என்று கணக்கு போடாதீர்கள் இந்நாட்களில் பலர் வெளிநாட்டில் இருக்கும் தமது உறவினர்களிடம் யார் யாரிடம் உதவி பெறலாம்... என்னென்ன உதவிகள் பெறலாம் என்று கணக்கு போட்டு வாழ்கிறார்கள். அதைபோல ஒரு பெரிய தவறு வேறெதுவும் இருக்க முடியாது. எமது சகோதரங்களாக இருந்தால் கூட அவர்களுக்கும் நிச்சயமாக பிள்ளைகள் வளர்ந்து விட்டிருப்பார்கள். அவர்களுக்கென்றும் தனியாக செலவுகள் இருக்கும். தமது பெற்றோர் கஷ்டப்பட்டு உழைத்து தாய்நாட்டில் உள்ள தமக்கு அறிமுகம் இல்லாத உறவினர்களுக்கு உதவி செய்வதை அவர்கள் விரும்பமாட்டார்கள். அதனால் நீங்கள் அவமானப்படக்கூடிய சந்தர்ப்பம் தான் உருவாகும். பதிலுக்கு நீங்கள் பிறர்க்கு என்ன உதவி செய்ய முடியும் என்பதை தீர்மானித்து அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அதனால் உங்களுக்கு ஆத்ம திருப்தி உண்டாவதுடன் உங்கள் பெருமையும் உயரும். நாம் நாமாக இருக்கவும் திருப்திப்படவும் பழகவேண்டும். பிறரது உயர்வை எண்ணி ஆடம்பரத்தை நினைந்து அங்கலாய்க்க கூடாது.

சொல்லப்போனால் மற்றவர்களது வருவாய் எமக்கு கிடைக்கும் என்று எண்ணி வாழ்வதல்ல வாழ்க்கை. மற்றவர்களது அன்பு பாசம் எமது பக்கம் திரும்ப வேண்டும். அதுவே உண்மையான மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் தரும்.

அதற்காக எம்மை நாம் சீரமைத்துக்கொள்ள வேண்டும். நல்ல பண்புகளை கடைப்பிடிக்க வேண்டும் உயர்ந்த கொள்கையில் எம்மை நிலைநிறுத்த வேண்டும். சேவை மனப்பாங்குடனும் விட்டுக்கொடுப்புடனும் வாழ ஆயத்தமாக இருக்க வேண்டும். மனச்சாட்சிப்படி நடப்பது பிரதானம். புத்தி நடுவு நிலைமை நின்றே

சிந்திக்கும். எது சரியோ அதையே சொல்லும். நாம் தவறு செய்வதை புத்தி உணர்த்தினால் அச்செயலை விட்டுவிடவேண்டும்.

எல்லோரும் எம்முடன் அன்பு பூண்டு பழகுவர் என்றும் எதிர்பார்க்க முடியாது. விரோதிகளும் இருக்கவே செய்வர். அவர்கள் எமக்கு அநீதி இழைப்பதையே இலட்சியமாக கொண்டிருப்பர். அதனால் எமது மனம் பாதிப்பிற்கு உள்ளாகும். அவர் செய்த அநீதிகளை மறந்து விட வேண்டும். அதை விட பிரதானம் அவர்களை எமது வாழ்கையில் இருந்து நீக்கி வைப்பதுடன் மறந்தும் விட வேண்டும்.

எமது பிரதான கடன் எமது மனைவி பிள்ளைகளை நினைந்து அவர்களுக்கு வேண்டியவற்றை உடனுக்குடன் நிறைவேற்றிகொடுப் பதாகும். உங்களதும். குடும்பத்தாரதும் ஆரோக்கியத்திற்காக ஒரு பகுதி வருவாயை ஒதுக்குவது கட்டாயமாகும். குடும்பம் சுத்தமாகவும். அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதில்தான் மன மகிழ்ச்சி தங்கியுள்ளது. ஆரோக்கியம் கெட்டால் எல்லாமே போய்விடும். வருத்தங்கள் பற்றி முன்னெச்சரிக்கையுடன் இருங்கள் . எப்போதும் வைத்தியரின் ஆலோசனையை பெறுங்கள்.

வாழ்க்கை ஏமாற்றங்கள் , தோல்விகள் , இழப்புக்கள் , நிறைவேறாத ஆசைகள் ஆகியவற்றால் நிறைந்ததுதான். நடந்தவை எதுவும் நடந்தவைதான். அவற்றை மனதில் போட்டு அலட்டிக்கொண்டு குழம்ப கூடாது. மன அமைதி பிரதானமானது. எமக்கு ஆறுதல் தரக்கூடிய விடயங்கள் அனேகம் உண்டு.

வாசிப்பு பழக்கம் நல்லது. எமது மனம் கவலை, குரோதம், பழிவாங்கும் எண்ணம் ஆகிய குப்பைகளால் நிறைந்துள்ளது. நல்ல நூல்களை கற்பதன் மூலம் அவற்றை அடியோடு இல்லாமல் செய்ய முடியும். எப்போதும் மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும். ஒரு சமயத்தில் ஒரு காரியத்தில்தான் ஈடுபட வேண்டும். எந்த வேலையையும் உடனே செய்ய வேண்டும். நாளை என்று ஒரு போதும் ஒத்திப்போடக்கூடாது.

யதார்த்தத்துக்கு புறம்பாக எதுவும் நடக்காது. நடக்கவேண்டியது நடந்தே தீரும். அதை எண்ணி கஷ்டப்படுவதால் பயன் இல்லை.

தூக்கமும் ஓய்வும் மனஆறுதல் தரும். இசை எவர் மனதையும் வெல்லும். இயற்கையுடன் இணைந்து நடவுங்கள். இயற்கை காட்சிகள் மனதை வெல்லும்.

கடவுள் இருக்கின்றார் என்ற நம்பிக்கை இருந்தால் அதை போல் அதிர்ஸ்டம் வேறெதுவும் இல்லை. பிரார்த்தனை செய்வதென்பது உங்கள் குறைகளை இறைவனிடம் ஒப்படைப்பதாகும் உங்களால் முடிந்தால் தியானத்தில் அமருங்கள். நீங்களாக செய்வதற்கு முயற்சிப்பதற்கு அங்கு ஒன்றும் இல்லை. 'பசித்திரு, தனித்திரு, விழித்திரு!' இவையே அடிப்படை! தியானத்தில் இறைவன் உங்களுக்கு வழிகாட்டுவான். அவனே உங்கள் மனதை பற்றி அழைத்துசெல்வான். நம்பிக்கை வையுங்கள்.!

மலைமுரசு வாரமலர் - 16.01.2016 22.02.2016

13

'முகநூல் என்கின்ற சமூகவலைத்தளம்."

அலுவலக மட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த கணனியானது இன்று சமூக மட்டத்தில் பிரபல்யம் அடைந்துள்ளது. இன்றைய நாளாந்த நடப்புலகில் இணையத்தின் பயன்பாடு மக்களுக்கு அவசியமாக போய்விட்டமைதான் அதற்கான காரணமாகும். கிராம மட்டத்தில் ஒடுங்கி வாழ்ந்த மக்கள் நகரங்களுக்கு நகர்ந்து இன்று பாரெங்கும் பரந்து வாழும் அளவிற்கு முன்னேறிவிட்டனர். அதனால் உண்டான பின்னடைவுகளுக்கான தீர்வை இன்று இணையம் வழங்கியுள்ளது ஸ்கைப் 'Skype ' மின்னஞ்சல், வைபர் 'Viber'' போன்ற தொடர்பு வசதிகளுக்கு அப்பால் முகநூல் ஒரு சமூக வலைத்தளமாக ஒரு உறுதியான இடத்தை பிடித்துள்ளது.

சில தினங்கள் முன்னர் நான் மலைமுரசு வார இதழின் 'வாழ்வியல்' பகுதிக்கு முகநூல் சார்ந்த கட்டுரை ஒன்றினை எழுதுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தேன். அச்சமயம் முக நூலில் சில பகிர்வுகளை குறிப்பெடுப்பதற்காக கணனியை திறந்து முக நூல் பக்கத்திற்கு சென்றேன். அங்கு ஒரு மதிப்பீடு நிமித்தம் எனது முகநூல் பயன்பாடு சம்மந்தமான கருத்து கோரப்பட்டிருந்தது. முகநூல் எமது வாழ்வுடன் எப்படி சகஜமாக பின்னிப்பிணைந்து விட்டது என்பதற்கான ஆதாரம் வேறெதுவும் வேண்டா!

ஒரு காலத்தில் எங்களுக்கெல்லாம் நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் படிப்பிலும் சரி விளையாட்டிலும் சரி சமூக நடவடிக்கையிலும் சரி எம்மை பிரியமாட்டார்கள். எமக்கு நேரடியாக உதவி ஒத்தாசை புரிவார்கள். எமது இடுக்கண் களைய பாய்ந்து வருவார்கள். ஒருவரை ஒருவர் தொடர்ந்து ஓரிருநாட்களாயினும் சந்திக்காமல் இருப்பதில்லை. எத்தனையோ நிதி உதவிகள் பொருளாதார உதவிகள் மட்டுமல்ல

விட்க்கொடுப்புக்கள் கூட இடம்பெற்றன. இன்று அந்த உறவு தலைகீழாக மாறிவிட்டது.

நண்பர்கள் என்றால் அது முகநூலுடன் மட்டுப்படுத்தப்பட்டதாயிற்று. அன்று தெரிவுசெய்யப்பட்ட ஒரு சில நண்பர்களென்றால் இன்று முகநூலில் மூவாயிரம் நான்காயிரம் அதற்கு மேலாகவும் சிலருக்கு நண்பர்கள் உண்டு. அதை பெருமையாக எண்ணுபவர்களும் எம்மில் சிலர் உண்டு. எமது தகவல்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். முகநூல் நண்பர்களின் பதிவுகளையும் இயலுமான வரை வாசிக்கின்றோம். வாசிக்காமல் 'LIKE' போட்டுவிட்டு சிலர் போவார்கள். சிலர் படித்துவிட்டும் 'LIKE' போடாமல் விட்டுவிடுவார்கள். இந்த இரண்டுவகையை சாராதவர்களும் இருக்கிறார்கள். இனி 'Comments' எழுதுவோர் எண்ணிக்கை மிக மிக அரிதே!.

அனேகமாக முகநூல் நண்பர்கள் தாம் படித்தவற்றில் இருந்து தமக்கு பிடித்த கருத்துக்களையும் கோட்பாடுகளையும் அவை கிடைக்கபெற்ற சஞ்சிகைகளையும் பத்திரிக்கைகளது ஆதாரத்துடன் தமது பக்கங்களில் பகிர்ந்து கொள்கின்றார்கள். அவை அனேக சந்தர்ப்பங்களில், 'கொல்லன் தெருவில் ஊசி விற்ற கதை' போல் அமைந்து விடுவதும் உண்டு. ஆயினும் பயனுள்ள தகவல்களும் மனதிற்கு மகிழ்ச்சி சேர்க்கும் செய்திகளும் வரவே செய்கின்றன. முகநூலில் அதிகம் பகிரக்கூடிய விடயங்களாக எமது மழலை செல்வங்களின் குறும்புகள் இருக்கின்றன. அவர்களின் பிறந்த நாள் விழாக்கள்... அவர்களின் வளர்ச்சி .... பாடசாலையில் அவர்களுக்கு கிடைக்கும் பாராட்டுக்கள்... விளையாட்டு போட்டிகளில் பெறும் பரிசுகள். இவையெல்லாம் மகிழ்ச்சியளிக்கும் விடயங்களாகும்.

அதே போன்று குடும்பத்தில் இடம் பெறும் புதுமனை புகுவிழா.... பூப்புனித நீராட்டு விழா... விவாக வைபவம்... வருடாந்த விவாக தின கொண்டாட்டங்கள் மற்றும் உல்லாச பயணங்கள்... தேன்நிலா செல்லல்... கோவில் தரிசனங்கள்... நாம் பார்க்கும் புதிய புதிய இடங்கள்... உறவினர்களுடனான ஒன்று கூடல் ... இவை சார்ந்த புகைப்படங்கள், 'வீடியோ கிளிப்ஸ்', ஆகியவற்றை பகிர்வுசெய்வதால் உள்ளம் உவகை கொள்கின்றது என்பதில் மறு பேச்சுக்கு இடமில்லை.

இன்னும் சொல்லப்போனால் நினைவு மீட்டல்களின் மூலம். பழைய உறவுகளையும் நட்புக்களையும் பகிர்ந்து கொள்வது பாசத்தை வெளிப்படுத்துகின்றது.

தைப்பொங்கல், சித்தரை வருடப் பிறப்புக்கள் போன்ற கொண்டாட்டங்கள் அழகும் மகிழ்வும் தருவன.

அவசியம் கருதிய சில பகிர்வுகளையும் நாம் முகநூலில் படிக்கக் கூடியதாகவும் பகிரக்கூடியதாகவும் உள்ளன.

முக்கியமாக ஆரோக்கிய குறிப்புக்கள்... மருத்துவ தகவல்கள், பலருக்கு நன்மையளிக்கின்றன. நடைப்பயிற்சின் அவசியம்... மூச்சு பயிற்சியின் நன்மை... ஆரோக்கியம் தரும் உணவு வகைகள்... மருத்துவ குணம் கொண்ட மூலிகை வகைகள்... பயன்தரும் பழங்கள் பற்றிய தகவல்கள் அனைத்துமே பயனுள்ளவையாக அமைகின்றன.

பலரது உறவுகள் காணமல் போகும் சந்தர்ப்பங்களில் அவர்கள் பற்றிய விபரம் புகைப்படங்களுடன் பிரசுரிக்கப்படுவதால் இழந்த உறவுகள் மீள ஒன்று சேரும் சந்தர்ப்பம் உண்டாகின்றது.

இன்னும் சொல்லப்போனால் இன விடுதலைக்காக போராடி உடல் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டும் வாழ்வாதாரத்தை இழந்தும் துன்புறும் எமது உறவுகளை முகநூலில் அறிமுகம் செய்து வைப்பதால் அவர்களுக்கு விடிவும் விமோசனமும் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உருவாக இடமுண்டு. வெளிநாட்டில் நல்ல நிதி நிலையில் உள்ள எமது சொந்தங்கள் மனமிழகி நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிகள் புரிகின்றனர்.

முகநூல் பல மோசடிகளையும் குற்றசெயல்களையும் அம்பலத்திற்கு கொண்டுவருகின்றது. வெளிநாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாக பணி புரியும் எமது பெண்களுக்கு எஜமானர்களும் எஜமானிகளும் செய்யும் வதைகள் வெளிச்சத்திற்கு வருகின்றன. சவுதிபோன்ற இடங்களில் தாமே குற்றசெயல்களை புரிந்து விட்டு எமது பெண்களை சட்டத்தின் பிடியில் மாட்டிவிடுவது பற்றி நாம் பல பகிர்வுகளை படித்துள்ளோம். அந்நாடுகளில உள்ள இறுக்கமான பாலியல்

கட்டுப்பாடுகளை அடிப்படையாக வைத்து எம் நாட்டு பெண்களை தண்டிப்பது என்ன நியாயம் என்ற கேள்வி எழுந்தமைக்கான காரணம் முகநூல் பகிர்வுகள் தான். அண்மையில் பாலியல் குற்றம் சுமத்தப்பட்ட எம்நாட்டு பெண்மணி ஒருவர் கல்லெறிந்து கொல்லப்படுவதில் இருந்து காப்பற்றப்பட்டார் என்றால் பாருங்கள்.!

அதே சமயம் முகநூல் காதலால் பல பெண்களும ஆண்களும் தற்கொலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். முகநூல் காதல் தோல்விகளுக்கு மட்டுமன்றி பாலியல் வன்முறைகளுக்கும் தூபம் போட்டுள்ளது. பல இள வயது பெண்கள் தம்மைக் காட்டிலும் இருபது வயதிற்கு மேற்பட்ட ஆண்களுடன் ஓடிச்சென்றுள்ளார்கள். இவை சம்மந்தமான பல விழிப்புணர்வையூட்டும் 'வீடியோ கிளிப்ஸ்' முகநூலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தென்னிந்திய திரைப்படமான 'ஜிகினா' முன்பின் அறிமுகமில்லாத இருவரது முகநூல் வாயிலான காதலால் ஏற்பட்ட விளைவுகளையும் விபரீதங்களையும் சித்தரிக்கின்றது.

முகநூலில் பலரும் தாம் எங்கோ வாசித்த மனப்பதிவுகளை பகிருகின்றார்கள். அவற்றில் பல இனியவையாகத்தான் இருக்கின்றன. உதாரணமாக 'சிரித்துப்பாருங்கள்.... உங்கள் முகம் உங்களுக்கு பிடிக்கும்! சிரிக்க வைத்துப்பாருங்கள் உங்கள் முகம் எல்லோருக்கும் பிடிக்கும்!'

அனைத்து சந்தர்ப்பங்களிலும் அப்படி அமைவதில்லை. எனது முகநூலில் உள்ள நண்பர்கள் பகிரும் பல விடயங்கள் அவசியம் கருதியவையாக இருக்கின்றனவா என்றால் இல்லை என்றே கூறுவேன். அவை யாரையோ சீண்டுவதைப் போலவோ... அல்லது பழிதீர்ப்பதை போலவோ... அல்லது பாடம் புகட்டுவன போலவோதான் இருக்கின்றன. 'நேத்திரா', 'மாலைமுரசு' ஆகியனவற்றில் இருந்து பல கூற்றுக்கள் பகிரப்படுகின்றன.

கீழ்வரும் கூற்று பற்றி சிறிது சிந்தித்துப்பாருங்கள். 'அடுத்த நிமிடம் கூட எமக்கு நிச்சயமில்லை. இதில் திமிர், வெறுப்பு. கோபம், ஆணவம், போன்ற அழுக்கை சுமந்து சாகாதே!. அன்பை மட்டுமே நேசியுங்கள்!'.

இது எவரையோ திட்டுவதை போலவோ கண்டிப்பது போலவோ இல்லையா?

'Time line இல் தகவல்களை பகிர்வது வேறு. முகநூல் ஊடாக செய்தி அனுப்புவது வேறு. இந்த வேறுபாட்டை புரிந்து கொள்ள வேண்டும்.

இனி , முக நூல் நிறுவனம் இணைய பயனாளிகளை தன்னுடன் 24 மணி நேரமும் இணைந்திருக்க செய்யும் வகையில் புதிய தேடல் பொறியை உருவாக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தற்போது கொடுக்கப்பட்டிருக்கும் முகநூல் மென்பொருளில் முகநூல் பக்கத்தை மாத்திரமே பார்க்கமுடியும். இந்த குறையை நீக்க முகநூல் நிறுவனம் புதிய தேடல்பொறியை உருவாக்க திட்டமிட்டுள்ளது. அதன் மூலம் இணையம் சார்ந்த அனைத்து தேடல்களும் முகநூலிலேயே கிடைக்க வழிவகுக்கப்படும்.

எப்படியோ! இப்போதே எமது நேரத்தில் பெரும் பங்கு முகநூலில் செலவாகின்றது. புதிய தேடல் பொறியும் வந்தால் என்ன ஆகுமோ என்ற பயம் தான் நீடிக்கின்றது.!

மலைமுரசு வாரமலர் - 23.01.2016 29.02.2016

14

அன்பை சம்பாதித்தல்.

சம்பாதித்தல் என்பது எமது முயற்சியால் நாம் பெற முயலும் பணம் பொருள் அல்லது உணர்வுகளுக்கான எத்தனமாகும். இவ்உலகில் எமக்கு பல தேவைகள் இருக்கின்றன. பணம், பொருள், ஆடை அணிகலன்கள் என அவற்றை பட்டியல் இட்டுக்கொண்டே போகலாம் அவற்றை நாம் எமது இடைவிடாத முயற்சியால் சம்பாதித்துக்கொள்ள முடியும். ஆனால் அன்பு பாசம், காதல், பக்தி என்கின்ற மன உணர்வுகளை நாம் சம்பாதிக்க வேண்டுமாயின் மற்றவர்களுடனான நல்லுறவை பலப்படுத்திக்கொள்ள வேண்டும். எம்மை பிறர் பெருந்தன்மை யுடையவராக கணிக்க வேண்டுமாயின் நாம் அன்பு முன்னிட்ட மன உணர்வுகளை மற்றவர் மீது செலுத்த தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இந்த மானிட பிறவியை நாம் எடுத்ததன் பலனும் அதுவேயாகும்!

இந்த பிரபஞ்சத்தில் உள்ள அண்டசராசரங்களும் ஒரு சுற்றுபாதை யிலேயே பயணித்துக்கொண்டிருக்கின்றன. அதே போன்றதே அன்பும். அது கூட சுழல்வற்கெனறே செல்வது. நாம் செலுத்தும் அன்பு பிறரது மனதை தொடுவதுடன் நின்றுவிடுவதில்லை. அவர்களது மனதில் ஒரு பதிவை உண்டு பண்ணிவிட்டு தனது சுற்றுப்பாதையில் எம்மை வசீகரிக்க வருகின்றது. இதுவே நாம் சம்பாதிக்கும் பணம் பொருள்களுக்கும் அன்பு பாசத்திற்குமிடையேயான வித்தியாசமாகும். பணமோ பொருளோ எம்முடன் வந்தால் நாம் அதனை இறுக பற்றிக்கொள்வோம். வேறு யாருக்காவது ஈந்தால் அவர்களும் அவ்வண்ணமே.! சில சமயங்களில் முயற்சி எடுத்தாலும் திரும்ப பெறமுடியாது.

அன்பு என்கின்ற மகாசக்தியே எம்மையும் எமது உறவுகளையும் ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கின்றது. இறைவன் அன்பு வடிவானவன். நாமும் அவனது அம்சமே. அன்பு இல்லாமல் நாம் இல்லை. எமது

உறவுகள் எம்மை பிரிந்து இருந்தாலும்... எவ்வளவு தொலைவில் இருந்தாலும் அன்பானது எம்மை அவர்களுடன் பிணைத்து வைத்திருக்கின்றது. நாம் மற்றவர்கள் மீது அன்பு செலுத்தும்போது அது அன்பு செலுத்தப்படுவதை மட்டும் உணர்த்துவதில்லை. அது எமக்கும் அமைதியையும் உள்ளார்ந்த மகிழ்ச்சியையும் உண்டுபண்ணுகின்றது. பிறர் மீது அன்பு செலுத்தும்போது அது அவர்களுடனான எமது உறவை பலப்படுத்துவதுடன் அவர்களது ஒத்தாசையையும் பெற்றுத்தருகின்றது.

அன்பின் வலிமை அதிகம் வெளிப்படுவது தாய் பிள்ளையிடம் என்றுதான் கூறவேண்டும். "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்" என்று கூறுவார்கள் தாய் பிள்ளைக்கிடையேயான அன்பு சாதாரணமானதல்ல. தனது பிள்ளைக்காக ஒரு தாய் உயிரையும் கொடுக்க தயங்கமாட்டாள் அது ஒரு பாச பிணைப்பாகும். ஒரு குழந்தை ஒரு தாய் மீது செலுத்துவதும் அந்த பாச உணர்வே. அன்புக்கும் பாசத்திற்கும் ஏங்காத தவிக்காத எந்த ஜீவனும் உலகில் இல்லை.

அடுத்து அன்பின் உயர்ந்த உள்ளுணர்வுதான் பக்தியாகும். அன்பைக்காட்டிலும் புத்திசாலித்தனம் எதுவும் இல்லை என்று கூறுவார்கள். அது இறைவனுடனான பத்திமார்க்கத்தில் நன்கு புலப்படுவதாகும். சம்மந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர் ஆகியோர் பக்தியில் உருகி உருகி எமக்கு தேவார திருவாசகங்களை தந்திருக்கின்றார்கள். அவர்கள் பெற்ற இன்பத்தை நாமும் பெறவேண்டும் என்ற நல்லநோக்கில் அவர்கள் அவ்வாறு அருளியுள்ளார்கள். மாணிக்கவாசகரின் திருவாசகம் எம்மை பக்தி மார்க்கத்தில் செலுத்தி இறைவனின் பாதாரவிந்தங்களுக்கே இட்டுச்செல்லவல்லது. "தோடுடைய செவியன் விடையேறியோர்..." என்ற சம்மந்தரின் தேவாரத்தை பக்தி பூண்டு உச்சரிக்காதவர் யார்? எமது முன்னையோர் எமக்கு காட்டிய பக்தி என்னும் நல்லறத்தை எண்ணிப்பாருங்கள்...

அன்பின் பரிணாமங்களை எண்ணிப்பார்க்கையில் மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. தூய்மையான மனித காதல் கூட பக்திக்கு இணையானதேயாகும். ஆண் பெண் காதலுக்கு அப்படி ஒரு புனித

தன்மை இருக்கின்றது. ஒரு பெண் மீது ஆணும் , ஒரு ஆண் மீது பெண்ணும் பாராட்டும் உண்மையான காதலை எந்த ஒரு சக்தியாலும் பிரிக்க முடியாது. பொய்யா மொழி புலவர் தனது நூலில் அறத்துபால் பொருட்பால் இரண்டினையும் தொடர்ந்து காமத்துபால் பற்றி கூறுகின்றார். காதல் பற்றி அவர்கூறுகையில் உடம்போடு உயிருக்குள்ள நட்பு போன்றதே ஆணுக்கும் பெண்ணுக்குமிடை யேயான காதலென்று விதந்துரைக்கின்றார். இனி, காதல் என்பது தராதரத்தையோ, அழகையோ,நிறத்தையோ பார்த்து மலர்வதல்ல. அது ஆண் பெண் இருபாலரது மன ஒன்றுபடலில் முகிழ்ப்பது. உண்மையான காதல் திருமணத்தில் உறுதியாகி சாவிறுதிவரை நீடிக்கும். கணவனுக்கும் மனைவிக்குமிடையேயான மன ஐக்கியத்தை சாதி சமய வேறுபாடுகளாலோ வேறு எந்த காரணியாலோ தகர்க்க முடியாது.

அன்பிற்கு பெருமை சேர்க்கும் மற்றொரு உறவுமுறைதான் நட்பு ஆகும். கிறிஷ்ணரதும் குசேலரதும் நட்பின் பெருமையை உலகமே அறியும். 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே - இடுக்கண் களைவதாம் நட்பு' என்று வள்ளுவரும் கூறினார். எமக்கு ஒரு ஆபத்து நேர்ந்தால் எமது உறவினரை காட்டிலும் வேகமாக வநது உதவக்கூடியவர்கள் எமது நண்பர்கள்தான். நாம் செய்யும் தவறுகளை பொறுப்புடன் எமக்கு சுட்டிக்காட்டுபவரும் அவரே. நட்பு காரணமாக பலர் சமூகத்தில் உயர்நிலைக்கு வந்துள்ளார்கள். நாம் ஒரு புதிய ஊருக்கோ வெளிநாட்டுக்கோ செல்வதானால் எமக்கு அங்கு உதவிகள் புரிந்து வழிகாட்ட கூடியவர் நண்பர்கள் தான். பல பராயங்களில் நாம் வெவ்வேறு நண்பர்களை சந்தித்துப்பழகி பின்னர் பிரிந்து சென்றிருப்போம். ஆனாலும் அந்த நட்பு எம்மை எந்த பராயத்திலும் தேடிவரும் இயல்பு கொண்டது. நாம் அறிந்துகொள்ளாதபடி எமக்கெதிராக சதி செய்பவரை கண்டறிந்து எம்மை காப்பாற்ற கூடியவர்கள் நண்பர்களே. நற்பண்புள்ள நண்பர்களை தேடி பெறவேண்டும். நல்ல நூல்களை தேடிப்படிப்பதால் புது புது கருத்துக்களை அறிய முடிவதுபோல நல்ல நண்பனின் அன்பு அவனுடன் பழகும் தோறும் அதிகரிக்கும். உண்மையான நட்பு அன்பின் அடித்தளத்தில் உருவாகின்றது.

பாசம், பக்தி காதல், நட்பு ஆகியவை அன்பை அடிப்படையாக கொண்டவையே. பிறர் மீது அன்பு செலுத்துவதால் அவர்கள் அறுதல் பெறுகின்றார்கள். அதே சமயம் நாமும் மகிழ்ச்சியும் ஆனந்தமும் கொள்கின்றோம். நாம் செலுத்தும் அன்பால் நாம் இலாபம் பெறுவதை காட்டிலும் அது எமக்கு திரும்பும்போது நாம் அதிக இலாபம் பெறுகின்றோம். அதுவே அன்பின் சிறப்பாகும்.

எந்த நாகரீகம் அடைந்த சமுதாயத்தை எடுத்துப்பார்த்தாலும் அங்கு அன்பு, பாசம், பக்தி ஆகிய உள்ளுணர்கள் சிறப்புற்று இருப்பதை அவதானிக்கமுடியும். ஒருவர் மற்றவர்மேல் செலுத்தும் அன்பு சமூகத்தில் ஐக்கியத்தையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணுகின்றது. அதே போன்று நாட்டுக்கு நல்ல பாதுகாப்பாரணாகவும் அமைகின்றது.

நாம் பிறர் மீது அன்பு பூண்டு அவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் பெற உதவி செய்தால் எமக்கு வேண்டிய அனைத்துமே வேறு முயற்சி இன்றி எமக்கு கிட்டும். அது தெய்வ நியதியேயாகும். 'ஊரார் வீட்டு பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்வீட்டு பிள்ளை தானே வளரும்'. என்ற பழமொழி இந்த உண்மையை நன்கு வலுப்படுத்தும்.

அதே போன்று வாழ்கையில் மேன்மையுறுவதற்கு அடிப்படையாக அமையக்கூடியது பிறர் மேல் நாம் செலுத்தும் அன்பும் மரியாதையும்தான். பெரியோர்களின் ஆசி எமக்கு கிட்டவேண்டுமாயின் நாம் அன்பு பூண்டு அனைவர்க்கும் உதவியும் தொண்டும் செய்ய வேண்டும்.

நாம் அன்பு பாராட்டும் சிலர் மன அழுத்தத்தால் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். தமது வாழ்கையில் உண்டான பாதிப்புக்களால் மற்றவர்களுடன் முகம் கொடுத்து இயல்பாக பேசிப்பழக முடியாத நிலையில் உள்ளார்கள். நாம் அவர்களது மன அழுத்தத்தை போக்க வேண்டுமாயின் அவர்களுடன் அன்பாக நடக்கவேண்டும். அன்பால் எதனைத்தான் சாதிக்க முடியாது.

அன்பு பிறருக்கு மட்டுமல்ல எமது ஆரோக்கியத்திற்கும் உறு துணையாக இருக்கின்றது.... இளைமையை பேண உதவுகின்றது...

நீண்ட ஆயுளை தருகின்றது... தொழில் உயர்ச்சிக்கு வழிவகுக் கின்றது.

நாம் அன்பு செலுத்துவதற்கு எவரையும் தேடி அலைய வேண்டியதில்லை. உலகில் ஏழைகள், மாற்றுத்திறனுடையோர், அனாதைகள் என்று ஏராளம் பேருக்கு பல தேவைகள் உண்டு. அவர்கள் பிறரது கையையே எதிபார்த்திருக்கின்றார்கள். அவர்களுடன் எமக்கு எந்த உறவுமுறையும் இல்லாமலிருக்கலாம். ஆனால் அவர்களுடன் அன்பால் இணைந்துகொண்டு உதவிகள் செய்யலாம். அது எமது வாழ்க்கையில் நிறைவையும் மகிழ்ச்சியையும் அள்ளித்தரும் மூன்று நேர உணவை நாம் தினமும் வயிறார உண்கின்றோம் ஒரு வேளை உணவிற்கே நாதியற்று பலர் பட்டினியால் வாடுகின்றார்கள். எமது ஒரு நேர உணவை பொதி செய்து நடைபாதையில் உள்ள எவரோ ஒரு ஏழைக்கு வழங்குவதால் நாம் ஒன்றும் வாடிவிடப்போதில்லை எம்மால் அன்பு செலுத்தப்படும்போது ஏழைகள் மனத்தைரியம் பெறுகின்றார்கள் என்பதை மனதில் கொள்வோம்.

எம்மிடம் நிறைய செல்வம் இருக்கலாம் ஆனால் நாம் அதை அனுபவிக்க பலன் இருக்க வேண்டும். அந்த பலன் எமக்கு கிட்டவேண்டுமாயின் நாம் ஏழைகளுக்கு உதவி செய்வதொன்றே வழி !

மலைமுரசு வாரமலர் – **30.01.2016** **05.02.2016**

15

பகையை விலைக்கு வாங்கல்

மனிதர்களாகிய எங்களுக்கு இருக்கின்ற தொல்லைகள் போதாதென்று அனாவசியத்திற்கு பகையைவாங்கி மடியில் கட்டிக்கொள்ளும் பழக்கம் எம்மில் பலருக்கு இருக்கின்றது. அதைத்தான் 'பகையை விலை கொடுத்து சம்பாதித்தல்' என்று கூறுவார்கள். ஒருவனுக்கு பல தேவைகள் கட்டாயமாக இருக்கும். அதை எப்பாடுபட்டாவது பூர்த்தி செய்யத்தான் வேண்டும். அதற்காக பகைக்க நேர்ந்தால் பரவாயில்லை. ஆனால் சல்லிக் காசுக்கும் தேவையில்லாத விடயங்களுக்காக பகைத்துக்கொள்வதை தவிர்த்துக் கொள்ளலாமல்லவா.!

அதனை ஒரு சம்பவம் மூலம் விளக்கலாம். ஒரு வகுப்பறை. பலதரப்பட்ட மாணவர்களும் அங்கு இருப்பர். அங்கு நல்ல பணவசதியுள்ள மாணவன் ஒருவன் விளையாட்டுக்காக மட்டும் மற்ற மாணவர்களது புத்தகம், பேனா, காகிதாதிகளை எடுத்து மறைத்து வைப்பான். இதை எவனாவது ஒரு மாணவன் சம்பந்தப்பட்ட மாணவனிடம் போட்டுக்கொடுத்து விடுவான். பிறகென்ன அனாவசிய அடிபிடியும் பகைமையும்தான்!.

பாடசாலை மாணவர் மத்தியில் இப்படியான நிறைய சந்தர்ப்பங்களை அவதானிக்கலாம். அவை எல்லாம் மாணவர்களுக்கிடையே அடிபிடியாகி ஆசிரியர்களின் தலையீட்டில் பெற்றோருக்கு முறைப்பாடாக போய்விடும்.

அதெல்லாம் சிறார்களின் செயல்கள் தானே என்று எவராவது சந்தோசப்பட்டால் அது தவறாக போய்விடும். ஏனென்றால் வயது வந்தவர்களே அநாவசிய பகைப்படுதலில் முன்னுக்கு நிற்கின்றார்கள்.

சிலரை அவதானிக்கலாம்... பெரிதாக பணவசதி இருக்காது. ஆனால் தாம் மிகுந்த பணவசதி படைத்தவர்கள் என்பது போல வாய்தம்பட்டம் அடிப்பார்கள். இன்னும் கொஞ்சம் சிலாகித்து சொல்வதென்றால்

'யாருக்காவது பணத்தட்டுப்பாடு இருந்தால்..... எவரிடமும் கடமைப்பட வேண்டாம், நானே உதவி புரிவேன்' என்று கூறியும் இருப்பர். எம் மத்தியில்தான் பணத்தட்டுப்பாடுள்ள பலர் இருக்கின்றார்களே..... பாவம் அவர்களும் அவர் பேச்சை நம்பி அத்தியாவசிய செலவுகளை திட்டமிட்டு வரையறுத்துக்கொண்டு கடனுக்காக கையேந்துவர். உதவி செய்வதாக உறுதி அளித்தவரிடமோ உண்மையில் பணம் இருக்காது. தனது நிலைப்பாட்டை பொய்யாக்கவும் விரும்ப மாட்டார். இன்று பணம் வந்துவிடும் நாளை பணம் வந்துவிடும் என்று சமாதானம் சொல்வாரே தவிர பண உதவி செய்ய மாட்டார். கடனுக்காக கையேந்தியவரோ அவர் வேண்டுமென்றே தன்னைத் தட்டிக் கழித்ததாக எண்ணி பகை கொள்வார்!

இனி யார்தான் நோய் நொடி என்று இல்லாமல் இருக்கின்றார்கள். அலுவலகம் ஒன்றில் பணிபுரிந்து கொண்டு இருந்த அதிகாரி ஒருவருக்கு திடீரென்று நெஞ்சுவலி வந்ததால் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு ஏழுநாட்களுக்கு பின்னர் அன்றுதான் துண்டு வெட்ட இருந்தார்கள். அது வரையில் அசட்டையாக அவரை பார்த்து சுகம் விசாரிக்க வைத்திய சாலை செல்லாமல் விட்டு விட்ட மற்ற ஒரு உதவி அலுவலர் அவசர அவசரமாக அவரை சென்று சந்தித்ததுடன் 'ஏன் பணம் செலவு செய்து வாட்டில் துணைக்கு ஆள் வைத்தீர்கள். எனக்கு சொல்லியிருந்தால் நானே உங்களுக்கு துணையாக வந்து நின்றிருப்பேனே' என்று கதைப்போக்கில் கூறிவிட்டார்.

அதிகாரி அலுவலகம் வந்து மூன்றே நாட்கள் தான் ஆயிற்று. மீண்டும் நெஞ்சுவலி உரமாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். அவருக்கு துணையாக நிற்பதற்கு உறுதியளித்த அலுவலர் இருக்கிறார் என்ற தெம்பில் கூலிக்கு எவரையும் அமர்த்தவில்லை. உறுதியளித்தவரும் வராவிட்டால் அநாவசிய பகைதானே!

பெண்களுடைய உலகமே வேறு. என்ன விலை கொடுத்தாலும் பகைமையை வாங்குவதில் அவர்களைப்போல் வல்லவர்கள் எவரும் இல்லை அதற்கு காரணம் அவர்கள் தம்மை பற்றி எப்போதும் பெருமிதமாக எண்ணுவதும், வாயை விடுவதும் தான். இறைவன் படைப்பில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவகை அழகுண்டு. கறுப்பு

நிற பெண்களில் கூட மிகுந்த அழகிகள் இருக்கின்றார்கள். அப்படியிருக்க என்னைப்பார் என் அழகைப்பார் என்ற பாணியில் ஒரு சில பெண்கள் அநாவசியமாக சவால் விடுவதால் பகைமைதானே உண்டாகும். இன்னும் சொல்லப்போனால் பெண்கள் பல கடைகள் அலைந்து திரிந்து ஆடம்பர பொருட்களை வாங்குவார்கள். யாராவது நண்பிகள் தாமும் அப் பொருட்களை வாங்க விரும்பி எங்கே வாங்கலாம் என்று விசாரித்தால் "பட்டு பார்க்கட்டும்" என்ற நல்ல மனப்பாங்கில் பொய்யான தகவலை கூறிவிடுவார்கள். அவர்கள் அனைத்து கடைகளிலும் ஏறி இறங்கி சரியான கடையை கஷ்டப்பட்டு கண்டுபிடித்துத்தான் அப் பொருட்களை வாங்க நேரிடும். போதாக்குறைக்கு அந்த கடை முதலாளி உங்கள் சினேகிதி சில நாட்களுக்கு முன்புதான் எமது கடையில் அப் பொருட்களை வாங்கினார் என சாட்சியமும் அளித்து விடுவார். அது போதாதா பகைக்கு. இனி பெண்களுக்கு கன்னை சேராமல் நடக்கத்தெரியாது. ஒரு சிலரோடு ஒன்றித்தும், மற்றும் சிலரோடு தூர விலகியும் செயற்படுவார்கள். அதைக்காட்டிலும் பிரதானமாக இரகசியம் காப்பதில் பெண்களது இயலாமை அவர்களுக்கு பெரும் சவாலாக அமைந்து பகைமையை உண்டுபண்ணி விடுகின்றது.!

இனி காதலர்களுக்கிடையே அனாவசிய பகைமைகள் ஏற்படுவதை எம்மால் அதானிக்க முடியும். அதற்கு பிரதான காரணம் சந்தேகமே!. காதலிக்க தொடங்கும் போதே "இவன் முன்னர் வேறுயாரையாவது காதலித்து இருப்பானோ," என்று அவளும் 'இவள் முன்னர் எவளையாவது காதலித்து இருப்பாளோ' என்று அவனும் சந்தேகத்துடன் தான் ஒருவரை ஒருவர் நெருங்குகின்றார்கள். பெண் வேறு எவருடனும் போவதைக் கண்டால் சந்தேகம். அவன் சகோதரனாக கூட இருக்கலாம். இத்தனை மணிக்கு பூங்காவில் சந்திக்க திட்டமிட்டால் ஆணோ, பெண்ணோ நேரம் தப்பக்கூடாது என்ற பிடிவாதம். கதைகள் பேச்சில் முன்னுக்கு பின் முரண்பாடு இருந்தால் சச்சரவு. காதலன் கேட்டுக்கொண்டபடி உடை அணியவில்லை என்றால் சண்டை. கேட்ட கேட்ட இடங்களுக்கு போகவில்லை என்றால் சண்டை. போனால் சிக்கல்! மொத்தத்தில் பகைமையே!

நண்பர்களுக்கிடையேயும் பகைப்படும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. பொய்யும் புரட்டும் தான் அவற்றுக்கு அடிப்படையாக இருக்கின்றன. எனது நண்பன் ஒருவனுக்கு அவனது நண்பன் ஒரு அழகான பெண்ணைக்காட்டி.... "இவளும் நானும் மூன்று வருடங்களாக காதலிக்கின்றோம்." என கூறினான். எனது நண்பன் அதிர்ந்து விட்டான். உண்மையில் அந்த பெண் எனது நண்பனின் மச்சாள் முறையானவளாகும். அவர்களுக்கு இடையான பரஸ்பர காதலை விட பெற்றோரே விவாகத்தை நிச்சயித்துள்ளார்கள். நண்பன் பொய்கூறியதால் அநாவசிய பகமைதான் உண்டாகியது.

இனி அரசியல்வாதிகளை எடுத்தால் அவர்களால் வழங்கப்படும் வாக்குறுதிகளை வைத்தே எதிர்த்தரப்பினர் அவர்களுக்கு எதிராக மக்களை தூண்டி விடுவர்.பல அரசியல்வாதிகள் 'உங்கள் பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்பு பெற்று தருவோம் நீர் வசதி செய்து தருவோம் வீடுகள் கட்டிதருவோம்' என்றெல்லாம்கூட வாக்குறுதிகளை கொடுக்கிறார்கள். தேர்தல் முடிந்ததும் மக்கள் தொல்லை கொடுக்க தொடங்குகிறார்கள்.உண்மையில் அவையெல்லாம் சமூக பிரச்சனைகளல்ல. ஈடேற்றவும் முடியாது. வாக்குறுதிகள் எப்படி பகைமையை வளர்க்கின்றன என்று பாருங்கள்!

இனி கணவன் மனைவி உறவென்பது ஒருவர் மற்றவர் மேல் கொண்ட ஈர்ப்பின் பாற்பட்டது. "ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்." அதன் பின்னர் என்ன நேர்கிறது. இருவரும் அடிப்படையை விட்டு வேறு சோலிகளில் இறங்குகிறார்கள். அதனால் உண்டாவது பகைமையே!

எனது நண்பர் ஒருவர் தினமுரசு பத்திரிகைக்கு குறுங்கதைகள் எழுதிக்கொண்டிருந்தார். ''பூல்ஸ்காப்'' தாளில் இரண்டரை பக்கங்களுக்கு மேற்படாமல் எழுத வேண்டும். அவராலும் அப்படித்தான் குறைந்த சொற்களில் எழுத முடியும். ஏனைய தேசிய பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் பத்து பக்கங்கள் வரை எழுத வேண்டும். அதனால் அப் பத்திரிகைகளுக்கு அவர் எழுதுவதில்லை. நான் ஞானம் சஞ்சிகைக்கு எழுதிய சிறுகதை ஒன்று எனது உறவுக்காரப்பெண் ஒருத்தியை கருவாக கொண்டிருந்ததால் அதை நான் பிரசுரத்திற்கு அனுப்பவில்லை. அதை அறிந்து கொண்ட

நண்பர் அக்கதையை என்னிடம் வலிந்து பெற்றுக்கொண்டு ஞானம் சஞ்சிகைக்கு தனது பெயரில் அனுப்பிவிட்டார். அக் கதை மகளிர் தின சிறப்புக்கதையாக அச் சஞ்சிகையில் பிரசுரமானதுடன் பாராட்டும் பெற்றது. சில நாட்களில் ஞானம் ஆசிரியரிடமிருந்து நண்பருக்கு கடிதம் ஒன்று வந்தது. "தங்கள் படைப்புக்களை எமது சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கு ஆவலாக உள்ளோம். தொடர்ந்து எழுதுங்கள்." நண்பர் அதிர்ந்து விட்டார். அவராலோ பத்து பக்கங்கள் எழுத முடியாது. என்னை சந்தித்த போது... "நான் அநாவசியமாக ஆசிரியரின் பகமையை சந்தித்து விட்டேனோ" என்று கவலைப்பட்டார்.

பகைமையை விலைக்கு வாங்குவதையிட்டு எவரும் கவலை கொள்வதாக இல்லை. பலருக்கு அவை பொழுது போக்காகவோ மகிழ்ச்சி அளிப்பதாகவோதான் இருக்கின்றது. ஏனென்றால் அவர்கள் சாமர்த்தியமாக பிறரை ஏமாற்றுகின்றார்கள். தாம் எந்த வகையிலும் சிரமப்படுவதோ காசு பணம் செலவு செய்வதோ இல்லை. தமக்கு பெருமையும் புகழும் சேர்க்கின்றார்கள். மற்றவர்களை மட்டம் தட்டுகிறார்கள். சிக்கலில் மாட்டி இரசிக்கின்றார்கள்.

வாசகர்களே! இவர்களையிட்டு அவதானமாக இருங்கள்.!

மலைமூரசு வாரமலர் - 06.20.2016 12.02.2016

16

முயற்சி திருவினையாக்கும்

எமது வாழ்கையின் வெற்றி எதனில் தங்கியுள்ளது என வினவின் அதற்கான ஒரே விடை 'முயற்சியில்' என்பதாகும் .'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்று சும்மாவா சொன்னார்கள்.' .சிற்றறிவு படைத்த ஐந்துக்கள் முதல் ஆறறிவு கொண்ட மனிதன்வரை பிறந்தது முதல் கொண்டு தான் உயிர் வாழ்வதற்கான முயற்சியையே மேற்கொள்கின்றன. ஆரம்ப காலத்தில் மனிதனின் முயற்சி உணவுக்காக மிருகங்களை வேட்டையாடுவதும் பழங்கள் தானியங்கள் கிழங்கு வகைகளை சேகரிப்பதுமாகவே இருந்தது. அதிகபட்ச நடவடிக்கையாக பண்டமாற்று வழக்கத்திலிருந்தது. ஆனால் இன்றோ நிலைமை முற்றாக மாறிவிட்டது. உடலை மட்டுமே முன்னிலைப் படுத்தியிருந்த அவனது முயற்சி அறிவை அதி உயர் பட்சமாக பயன்படுத்தும் நிலைக்கு மாறிவிட்டது. விஞ்ஞானம் மேலோங்கிவிட்டது .பணம் கொண்டு எதனையும் சாதிக்கும் நிலை வந்துவிட்டது. தொழிற்துறைகள் விரிவடைந்துவிட்டன. ஒவ்வொரு மனிதனும் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள் ஏதாவது ஒரு துறைக்கு பங்களிப்பு செய்தால் போதுமானதென்ற நிலை வந்துவிட்டது. எந்த ஒரு முயற்சிக்கும் இயக்கத்திற்கும் அடிப்படையாக ஒரு சக்தி இருந்தாக வேண்டும். அதனையே ஆற்றல் என்று குறிப்பிடுகிறோம். சொல்லப் போனால் நாம் ஒன்றும் அதனை தேடி அலைய வேண்டியதில்லை.

ஆற்றல் அல்லது சக்தி எவரிடத்தும் எதனிடத்தும் எங்கும் எக் காலத்திலும் உள்ளதாகும். நாம் அதனை கண்டு கொள்ளாமல் இருந்தால் அது எமது தவறேயாகும்! எமது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு மிக மிக அத்தியாவசியமானதும் எம்மிலேயே உள்ளடங்கி இருப்பதுமான ஆற்றலை விரைந்து அடையாளம் காண்பதுடன் அதனை முயற்சிப் பாதைக்கு இட்டுச் செல்வதுமே எமது உயரிய பணியாகும். ஏனென்றால் இறைவன் எம்மை உயிர்வாழ்வதற்காக மட்டும் படைக்கவில்லை. எம்மைச் சூழ உள்ள

சமுகத்துக்கும் ஏனைய உயிர் வாசிகளுக்கும் இந்த இயற்கைக்கும் சேவை செய்வதற்கென்றே படைத்துள்ளான்.

சற்று யோசித்து பாருங்கள்..... நாம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த பிரபஞ்சம் எதனை வெளிப்படுத்துகின்றது..... நாம் கடந்து சென்று கொண்டிருக்கும் ஒவ்வொரு கணமும் ஆற்றலின் வெளிப்பாடாக சக்தியின் பிரவாகமாகத்தானே இருக்கின்றது. அண்டங்கள் அனைத்துமே விண்வெளியில் கணக்கிட முடியாத எண்ணிக்கையிலும் வேகத்திலும் விரைந்து கொண்டிருக்கின்றன. சூரியனிலிருந்தும் ஏனைய நட்சத்திரங்களிலிருந்தும் பிரவாகிக்கும் ஒளிவெள்ளம் எந்த ஆற்றலை முன்னிட்டு சீறிப்பாய்கின்றது. கிரகங்கள் கிரகங்களுடன் மோதுவதால் புதிய கிரகங்கள் பிறக்கின்றன. பூமியும் சந்திரனும் கூட அந்த வழியில் தேன்றியவையே!. இன்னும் சொல்லப்போனால் சூரியனின் சக்தி வெளிப்பாட்டில் அல்லவா நம் உயிர் வாழ்க்கை தங்கியுள்ளது.

ஆற்றல் வெளிப்பாட்டின் சக்தி எவ்வளவு பிரமாண்டமானது என்பதையிட்டு நாம் ஆச்சரியப்பட்டால் மட்டும் போதாது. நாம் எத்தகைய ஆற்றல் படைத்தவர்கள்..... அந்த ஆற்றலை எமதும் சமூகத்தினதும் நன்மைக்காக எப்படி பயன்படுத்த வேண்டுமென்பதை புரிந்து கொண்டு செயல்படுவது எமது கடமையாகும்.

எம்மில் பலர் சோம்பல் மிகுந்தவர்களாக காணப்படுகின்றார்கள். தூங்குவதிலும் அநாவசியமாக பொழுது போக்குவதிலும் உள்ள ஆர்வம் அவர்களுக்கு ஆற்றலை அடையாளம் காண்பதற்கும் முயற்சி எடுப்பதற்கும் இல்லை. சாப்பிட உணவில்லை, அணிய ஆடை இல்லை, தங்க வீடு இல்லை என்பதையிட்டு கூட அவர்கள் கவலை கொள்வதில்லை. தமது பெற்றோர், மனைவி, பிள்ளைகள் என்று தம்மில் தங்கியிருப்போர் பற்றிய அக்கறை கிஞ்சித்தும் கிடையாது. எவராவது அவர்களது முன்னேற்றத்தின் பொருட்டு ஒரு பணியை செய்யும்படி கூறினால் அதை தாம் பின்னர் செய்வதாகவே கூறுவர்.

எப்போதாவது ஒரு நாள் அவர்கள் தமது திறமையை இனங்கண்டு அதன் மூலம் தமது வாழ்க்கையை மேம்படுத்தலாம் என்பதை உணர்ந்தால் மட்டுமே அவர்களுக்கான விமோசனம் கிட்டும். அவர்களுடைய வாழ்க்கை சிறப்புற அது ஒன்றே வழி.

ஆற்றல் என்பது உடல் உழைப்பால் மட்டும் முன்னெடுக்கப் படவேண்டிய விடயமல்ல. அறிவு, ஆற்றலுக்கான பிரதான காரணியாக இருக்கின்றது.

விஞ்ஞானிகள் தமது மூளையின் அயராத உழைப்பால் பல வருடங்கள் முயன்று அரிய கண்டு பிடிப்புக்களை வெளிக் கொணர்ந்துள்ளார்கள். பூமியல் கண்டம் விட்டு கண்டம் சென்று புதிய புதிய நாடுகளை கண்டு பிடித்த மனிதன் இன்று சந்திரனுக்கும் செவ்வாய்க்கும் சென்று அவற்றின் நில வளங்களை ஆராய்கின்றான் என்றால் அது மூளையை முன்னிட்ட மகத்தான முயற்சியேயல்லவா?

இன்று உலகில் மருத்துவத்துறை மிகவும் முன்னேறியுள்ளதென்றால் அது அறிவை முன்னிட்ட மனிதனின் முயற்சியேயல்லவா? உள்ளுறுப்புக்கள் மாற்று சத்திரசிகிச்சை மிகவும் சாதாரணமாகி விட்டது. இதயம், சிறுநீரகம் போன்ற உறுப்புக்களை இலகுவில் மாற்றி சிகிச்சை அளிக்க முடிகின்றது.

அதே போன்று பொறியியல் துறையும், இயந்திரவியலும் வளர்ச்சி பெற்றுள்ளன. ஆற்றல் உள்ளவர்கள் முயற்சியில் ஈடுபடுவதனாலேயே மனிதகுலமும் உலகமும் முன்னோக்கிச் செல்கின்றன. வானத்தை தொடும் கட்டடங்கள்..... விண்ணை எட்டும் விமானங்கள் என்று மனிதனின் சொகுசு வாழ்க்கை விரிவடைந்துள்ளது.

இவையெல்லாம் எப்படி சாத்தியமாகின்றன. ஆற்றலை அறிந்து கொள்வதும் ஒருமுகப்படுத்துவதும் பிரயோகிப்பதும் அவற்றிற்கான கடுமையான உழைப்பும்தான் வெற்றிக்கு அடிப்படையாகும்

சோம்பலை விரட்டி அடிக்க வேண்டும். அதே போன்று தோல்விகளைக் கண்டு துவளக்கூடாது. விடா முயற்சியே பிரதானம். உடல் பலவீனமோ, பாதகமான சந்தர்ப்ப சூழ்நிலையோ நிதிப்பிரச்சனையோ பிறர் ஒத்தாசை இன்மையோ உண்மையான ஆற்றலை தடை செய்ய முடியாது. வெற்றி என்ற சாதனைக்கு முயற்சியே உந்து சக்தி!

இனி, ஆற்றலை அழிவுப்பாதைக்கு பயன்படுத்தக்கூடாது என்பதை விதியாக பினபற்ற வேண்டும். அணுவிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதே உகந்தது. அதைவிடுத்து அணுவை மனிதகுலத்தின்

அழிவுக்கு பயன்படுத்தக் கூடாது. இன்று வல்லரசுகள் மட்டுமன்றி இந்தியா, இஸ்ரேல், வடகொரியா, பாகிஸ்தான் என்று அடையாளம் காணப்படாத பல நாடுகளும் தமது எதிரிகளை நோக்கி அணு ஏவுகணைகளை பொருத்தி வைத்திருக்கின்றன. துருக்கி போன்ற நாடுகள் கூட ரஸ்யாவிற்கு எச்சரிக்கை விடுக்கும் நிலைக்கு மறைமுக காரணம் அணு ஆயத பலமாக இருக்கலாமல்லவா?

நீரின் சக்தியால் புகையிரதத்தை ஓட்டுவது ஆக்க சக்தி என கருதப்படும். நீரக குண்டை யுத்தத்திற்கு பயன்படுத்துவது அழிவுக்கான பாதை. அண்மையில் வடகொரியா மிக சக்திவாய்ந்த நீரக குண்டை பரீட்சித்த பொது அது நில அதிர்வை ஏற்படுத்தியதாக கூறப்பட்டது.

அதே போன்று மின்சாரம் மனிதர்களின் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. சொகுசு வாகனங்களை ஓட்டவும், 'ஏ.சி' அறையில் துயிலவும் எமக்கு மின்சாரம் பயன்படுகின்றது. ஆனால் சிலர் தமது பயிர்களை பாதுகாப்பதற்காக மின்சார வேலிகளை அமைப்பதனால் யானைகள் உட்பட பல கால்நடைகள் உயிரிழக்க நேரிடுகின்றது. அது எப்பேற்பட்ட பரிதாபம் என்று பாருங்கள்!

இதயத்தின் ஆற்றலல்லவா இந்த உடலின் உயிர்ப்பு. அதனை எந்த நோக்கங்களுக்காகவும் அழிப்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா? இயற்கை தோற்றம் எதிலுமே ஆற்றலே விரவியுள்ளது.

ஒரு கலைஞனை எடுத்துக் கொள்ளுங்கள். அவன் இசைத்துறை சார்ந்தவனாகவோ ஓவியனாகவோ சிற்பக்கலைஞனாகவோ நடிகனாகவோ எழுத்தாளனாகவோ கூட இருக்கலாம். அவனது படைப்பில் தெய்வாம்சம் பொருந்தியிருப்பதை உங்களால் காணமுடியும். அவை மனித மனங்களை குளிர்விக்கின்றன.

கலைஞர்கள் எப்போதும் ஏழைகளாக இருப்பதாக சிலர் கருதுகிறார்கள். அப்படியல்ல. அவர்கள் தமது துறையை மட்டுப் படுத்திக் கொள்வதால்தான் பொருளாதார ரீதியில் பின் தங்கி விடுகிறார்கள். ஒரு கதாசிரியன் திரைப்படங்களுக்கு கதை கொடுக்கும் அளவுக்கு தன்னை வளர்த்துக் கொள்ள முடியும். ஒரு பாடகன் மேடைப்பாடகனாக வளர்வதுடன் இசைத்தட்டுக்களை

வெளியிடுவதன் மூலம் பணம் சம்பாதிக்க முடியும். அவர்கள் வாழ்க்கையில் விழிப்புணர்வுடன் இருப்பதன் மூலம் கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அணுவாக இருக்கலாம், நிலக்கரியாக இருக்கலாம், நீராக இருக்கலாம்..... எதுவும் பயன்படாமல் இருக்கும் போது அங்கு செயற்பாடு எதுவும் இருக்காது. அணுவை பிளக்கும் போதும் நிலக்கரியை எரிக்கும் போதும் நீரை கொதிநிலைக்கு கொண்டு வரும் போதுதான் அவை பெரும் சக்திகளாக மாற்றம் பெறுகின்றன.

அதே போன்றே நாமும் ஆற்றல் என்ற விழிப்புணர்வை பெறும் போதே பல சாதனைகள் புரியும் வல்லவர்களாகிறோம். அதன்பின் உடற்சோர்வோ அல்லது உளச்சோர்வோ வேறு எத்தகைய பாதிப்புக்களோ எமக்கு பின்னடைவை ஏற்படுத்த மாட்டாது! பதிலுக்கு எழுச்சியும் ஊக்கமும்தான் மேலோங்கும். அதன் பின்னர் எமது ஒவ்வொரு முயற்சியும் எம்மை வெற்றிப்பாதைக்கே இட்டுச்செல்லும்!

மலைமுரசு வாரமலர் – 13.02.2016 19.02.2016

17

சிந்தனை செய் மனமே!.

மனித மனம் அறிந்துகொள்வனவற்றில் எல்லாம் அதிநுண்மையானதும் மிகுந்த சக்திவாய்ந்ததும் சிந்தனையாகும். சிந்தனைக்கு ஓய்வு என்பது கிடையாது. ஆழ்ந்த தூக்கத்தில் கூட மனமானது சிந்தனை வயப்பட்டிருப்பதை கனவுகள் உணர்த்துகின்றன. பிரபஞ்சத்திற்கு எல்லை நிர்ணயிப்பது எப்படி சாத்தியமானது அல்லவோ அதே போன்று சிந்தனைக்கும் முற்றுப்புள்ளி வைக்கமுடியாது. அது கடந்த கால வயப்பட்டு எமது வாழ்க்கையில் சம்பவித்த நன்மை, தீமைகள், சந்தோசம், கவலை, வெற்றி, தோல்விகள் பற்றியெல்லாம் எண்ணி மகிழும்... அல்லது துயருறும். அதே போன்று நிகழ்கால வயப்பட்டு எமது செயல்கள் எமக்கு சம்பவிப்பவை பற்றியெல்லாம் ஏன் எப்படி எப்போ? எங்கே? என்றெல்லாம் கேள்விகளை எழுப்பி விசாரணை செய்யும். இனி எதிர்காலம் மிகவும் பிரதானமானது. எமது எதிர்கால வெற்றிக்கெல்லாம் காரணம் எமது சிந்தனை என்றால் மிகையாகாது. எமது கல்வி, தொழில், வாழ்கை பற்றிய திட்டமிடலில் சிந்தனை தீவிரமாக ஈடுபடுகின்றது. ஈடுபட்டேயாக வேண்டும்!.

மனோ வேகம். என்று சொல்கிறோம் அல்லவா... அது மனதின் சிந்தனை வேகத்தையே குறிப்பதாகும். பல ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள நட்சத்திரங்களை கூட மனோ வேகம் சில நொடிகளில் எட்டிவிடுகின்றது. அதே போன்று எப்படிப்பட்ட பிரச்சனைகள் , புதிர்கள், கணித சிக்கல்களாயிருந்தாலும் உரிய சிந்தனை மூலம் சில நொடிகளில் விடுவிக்க முடியும். எமது உறவுகள் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் கூட சிந்தனை மூலமாக நாம் அவர்களை நினைவு கூருகின்றோம். மன அமைதி பெறுகின்றோம்.

எமக்கு சமூகத்துடனான பிணைப்பு ஒன்று இருக்கின்றது என்றால் அதற்கு அத்திவாரம் எமது சிந்தனை தான். சிந்தனை இல்லாத

பட்சத்தில் எமக்கும் ' நோபோ'க்களுக்கும் வித்தியாசம் இருக்காது. அவரவர் தத்தம் போக்கில் அலைய வேண்டியதுதான். சிந்தனையின் மூலம்தான் நாம் உறவுகளை அடையாளம் காண்கிறோம். பெற்றோர் பிள்ளைகள், கணவன் , மனைவி , அக்கா, தங்கை, அண்ணா, தம்பி என்று பல்வேறுபட்ட உறவுகளும் எமது மனப்பதிவில் இருக்கின்றது. அவர்களுடனான பாச பிணைப்புக்கள், கொடுக்கல் வாங்கல்கள், சண்டை சச்சரவுகள் எல்லாமே சிந்தனை வாயிலாக எமக்கு நினைவூட்டப்படுகின்றன. நாம் சிலரை நேசிப்பதற்கும் சிலரிடமிருந்து விலகி நடப்பதற்கும் அதுவே அடிப்படையாக இருக்கின்றது. சொல்லப்போனால் அனுபவங்களை முன்னிட்ட ஒப்பு நோக்கலே சிந்தனையின் முடிவாகும்.

உடம்பின் ஆரோக்கியத்திற்காக நாம் உடற்பயிற்சிகளை மேற்கொள்கின்றோம். அதே போன்று மூளையின் வளர்ச்சிக்கு சிந்தனை செய்வது மிக மிக அவசியமாகும். இன்னும் சொல்லப்போனால் சிந்தனை செய்வதன் மூலம் செயற்றிறன் அதிகரிப்பதுடன் உடலாரோக்கியமும் மேம்படுகின்றது என்று கூறவேண்டும். நல்ல எழுத்தாளர்கள், சிறந்த விஞ்ஞானிகள் , உயர் அரசியல் வாதிகள் போன்றோர் அதிகம் சிந்திப்பதனால் அவர்களது உடல் ஆரோக்கியம் நன்கு பாதுகாக்கப்படுகின்றது.

சிந்திப்பவர்கள் அனைவருமே தமது வாழ்கையை நன்கு திட்டமிட்டு கொள்கிறார்கள். அதனால் அவர்களது வாழ்கை பூத்து குலுங்குகின்றது. மகிழ்ச்சியுடன் வாழ்வதொன்றே போதும் எமது உடலாரோக்கியத்தை பாதுகாப்பதற்கு.

சிந்தனை என்றால் என்ன என்பதை ஒவ்வொருவரும் அறியவே செய்வர். ஆனால் அதன் செயற்பாடுகளை பிரித்து பார்த்திருக்க மாட்டார். சிந்தனை பல்வேறு பிரிவுகளை உடைத்து. சிந்திப்பது என்பது விடயங்களை நினைப்பதாகும். அதன் பின்னர் என்ன செய்கின்றோம்? நினைத்த விடையங்களை வரிசைப்படுத்தி வைக்கின்றோம். பின்னர் ஒன்றுடன் மற்றொன்றை ஒருங்கிணைத்து பார்க்கின்றோம். அது நினைவில் நிலைத்து ஒரு அனுபவமாகிறது. அந்த அனுபவங்களில் எது மகிழ்ச்சி தருகின்றது. எது கவலை

தருகின்றது என்பதை வைத்து எதிர்காலத்தை திட்டமிடுகின்றோம். எமது எதிர்கால சுபீட்சம் சாத்தியமாவதற்கு சிந்தனை எப்படி வழிகோலுகின்றது என்று பாருங்கள்.!

சிந்தனை எமது வினாக்கள் பலவற்றிற்கும் விடை பகர்கின்றது. எது நிரந்தரம்? எது தற்காலிகம்? எது உண்மை? எது பொய்? போன்ற பல கேள்விகளுக்கு தீர்வை காண முடிகின்றது.

எமது கடந்த கால வாழ்கையில் இடம்பெற்ற மகிழ்ச்சியான சம்பவங்களை நாம் மீண்டும் மீண்டும் சிந்தித்து களிப்பெய்தக் கூடியதாக இருக்கின்றது. எமக்கு கவலை தரும் நினைவுகளை மனதை விட்டு அழிப்பதையே நாம் நோக்காக கொண்டிருக்கின்றோம். அதற்கு கூட சிந்தனைதான் பல ஆறுதல் மொழிகளை முன்வைக்கின்றது.

இனி சமூகத்தில் பல்வேறு தரப்பட்ட மக்கள் இருக்கின்றார்கள். அவர்களுடைய சிந்தனைகள் வெவ்வேறு பட்டே இருக்கும். அவற்றை பிரதானமாக இரண்டு பிரிவுகளில் அடக்கலாம். ஒன்று ஆக்க பூர்வ சிந்தனைகள் இரண்டு அழிவை நோக்கிய சிந்தனைகள். மனித குலத்திற்கு அவசியமானவை ஆக்க பூர்வசிந்தனையாகும். விவசாயம், கைத்தொழில், 'உற்பத்தியை நோக்கிய விஞ்ஞான வளர்ச்சி' ஆகியவை பாராட்டப்பட வேண்டியன. மறுவளமாக மனித குலத்தின் அழிவுக்கு காரணமானவை அழிவை முன்னிட்ட சிந்தனையாகும். சுடுகலன்கள், அணு ஆயுதங்கள், நீரக குண்டுகள். ஏவுகணைகள் போன்றவை வெறுக்கத்தக்கனவாகும். இவை சர்வதேச ரீதியிலானவையாகும்.

தவிர , தனி மனித சிந்தனைகளை கட்டாயமாக நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். சரியான மன நிலை எனப்படுவது மயக்கமற்ற அறிவு ஆகும். எது சரி எது பிழை என்ற ஐயம் இருக்க கூடாது. தெளிவுடன் இருக்க வேண்டும். நாம் இதனை செய்தாலேயே மற்றவர்களுக்கு நன்மை பயக்கும் என்பதில் உறுதி வேண்டும். எப்போதும் நடுவுநிலைமையுடன் பிரச்சனைகளை அணுக வேண்டும். பக்க சார்பு பலரை புண்படுத்தும். பொறுமையை கடைப்பிடிக்க

வேண்டும். அவசர தீர்மானங்களை மக்கள் ஏற்புடையதென நம்ப மாட்டார்கள். இரக்கம் எவரையும் கவர்ந்து விடும். அன்பு, பாசம், பிணைப்பை உண்டு பண்ணும். அமைதியும் நம்பிக்கையும் மகிழ்வு தரும். மனத் தூய்மைதரும்!

மஹாத்மா காந்தி , ஸ்ரீ இராமகிருஷ்ணர், ரமணமகரிஷி போன்றோரை பற்றி சிறிது சிந்தியுங்கள் . அவர்களிடமிருந்த பிரதான சிறப்பம்சமே சுயநலமின்மையாகும். அவர்கள் எப்போதுமே தமது சிந்தனையை. ஒட்டு மொத்த மக்கள் சார்பிலேயே மேற்கொண்டார்கள். ஆணவத்தை அறவே துறந்தார்கள். மனத்துணிவுடன் இருந்தார்கள். அமைதி , நம்பிக்கை , மகிழ்ச்சி, ஆகியவற்றை மக்கள் மனத்தில் பதித்தார்கள். அவை மனத்தெளிவின் நிமித்தமான கடமை, நேர்மை, கண்ணியம், ஆகியவற்றிற்கு வித்திட்டு மனித குலத்தை மேம்படுத்தின!.

இனி அழிவு சிந்தனையைப், சட்டம் நியதிகளுக்கு விரோதமான சிந்தனைகள் என்று குறிப்பிடலாம். சுயநலமும் இம்சை மனப்பாங்குமே ஒருவனை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்கின்றன. தவறை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு இன்மை , இரக்க குணம் இன்மை , மன்னிக்கும் சுபாவம் இன்மை ஆகியன ஒருவனை நெறி தப்ப வைக்கின்றது. போதைப் பொருள் பாவனை தவறான சிந்தனைக்கு இட்டுச்செல்கின்றது. இன்று நீதி மன்றங்களின் முன் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டவர்களின் சிந்தனை எப்படி இருந்திருக்க கூடும் என்று சற்று சிந்தித்து பாருங்கள். குற்றம் உள்ள மனது தவறான பாதைக்கு இட்டுச்செல்கின்றது. எதிர்பார்க்கும் சுகம் தடுக்கப்பட்டவுடன் கோபமும் பழிவாங்கும் உணர்வும் உண்டாகின்றது. பாலியல் வல்லுறவு போன்ற வலுகட்டாயமான சுகத்தில் ஆசையை தணிக்க விழைகின்றது. பிற பொருட்களை களவாட முயற்சிக்கின்றது. கொலை செய்யவும் அஞ்சாத சிந்தனை உண்டாகின்றது.!

இவற்றிற்கெல்லாம் காரணம் என்னவென்றால் தெளிவான கருத்துக்கள் இல்லாமையே ஆகும். கருத்துக்களே சிந்தனைக்கு ஆதாரம். சிந்தனை முடிவுக்கு காரணம்.

ஒவ்வொரு மனிதரும் சற்று சிந்திக்க வேண்டும். நாம் யார் ? எம்மை படைத்தவர் யார் ? நோக்கம் என்ன ? இந்த வாழ்கையின் முடிவு எங்கே செல்கின்றது? மரணத்தின் பின் மேலே இருப்பது என்ன? கடவுள் கடவுள் என்கிறார்களே அப்படி ஒருவர் இருக்கிறாரா? அறியாதவற்றிற்கு எமது சிந்தனை விடை பகருமா? இல்லவே இல்லை!

மலைமுரசு வாரமலர் - 20.02.2016 26.02.2016

18

பக்கசார்பும் நடுவுநிலைமையும்.

சமூகத்தில் 'பக்கசார்பு' மட்டும் இல்லை என்றால் இந்த உலகம் சுவர்க்கபுரிக்கு இணையானதாகவே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை!

ஆனால் மனிதன் தினமும் முகம் கொடுக்கும் பிரச்சனைகள் பக்கசார்பு காரணமாக உண்டானவையேயாகும். குடிமகன் முதல் ஆட்சியை கையில் எடுப்பவர்வரை பக்க சார்பாக நடப்பதையே நாம் நாளாந்தம் காண்கின்றோம். எம்மை சார்ந்தவர்கள் உறவினர்களாகட்டும் , நண்பர்களாகட்டும், தொழிலால் இணைந்தவர்களாகட்டும் பக்கசார்பு இல்லாதவர்களை விரல் விட்டு மட்டுமே எண்ண முடியும். எம்மை சார்ந்தவர்கள் எமக்கு பக்க துணையாக அல்லவா இருக்க வேண்டும். அவர்கள் ஏன் அப்படி நடந்து கொள்வதில்லை என்று ஆராய்ந்தால் அதற்கான பதில் அவர்களுக்கு எம்மேலான போட்டியும் பொறாமையும் தான்! நாம் விழிப்பாக இல்லாமல் சற்று அயர்ந்து விட்டால் தொலைந்தோம்!

பக்கச்சார்பு என்ற விடயம் மனிதர்களிடம் இயற்கையிலேயே அமைந்ததுதான். ஒரு தாயை எடுத்தால் அவள் பசியால் துடிக்கும் தனது குழந்தைக்கு மட்டுமே பால் ஊட்டுகின்றாள்.. அன்பு பாசம் ஆகிய உணர்வுகள் சகோதரர்களிடையேயும் நண்பர்களுக்கிடையேயும் ஏன் காதலர்களுக்கிடையிலும் பக்க சார்பை வெளிப்படுத்தும். அதில் தப்பில்லையேயாயினும் அதனால் மற்றவர்களுக்கு அநீதி உண்டாகக் கூடாது என்பது பிரதானம்.

எமது எதிரிகள்தான் பக்கசார்பாக நடந்து எமக்கு தீங்கிளைப்பார்கள் என்று இல்லை. எம்மை சார்ந்தவர்களே எம்மை ஓரம் கட்டிவிட்டு தமக்கு வேண்டியவர் பக்கம் சாய்ந்து நின்று காரியமாற்றிவிட்டு போய்விடுவார்கள்.!

விவாகமாகவிருக்கும் எமது வீட்டு பெண்களுக்கு நாம் பல இடங்களில் நல்ல வரனை தேடி பார்த்துக்கொண்டிருப்போம் பேச்சு வார்த்தைகள் முற்றுப்பெற்று விவாகத்துக்கு நாளும் குறிப்பிடப்பட்ட நிலையில் திடீரென நாம் பார்த்த வரனுக்கு வேறு இடத்தில் விவாகம் நடக்க ஏற்பாடாகிவிடும். காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் எம்மை சார்ந்த ஒருவர் தமக்கு வேண்டிய மற்றொரு உறவினரது பெண்ணுக்காக பக்கசார்பாக நடந்துகொண்டிருப்பார்.

ஒரு குடும்ப சண்டை, வாய்த்தர்க்கம் முற்றி அடி பிடி அளவுக்கு வளர்ந்து 'பொலிசு'க்கு செல்லுமளவிற்கு போய்விடுகின்றது. அந்த சண்டை முற்றி உடற்காயங்கள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் நாமும் ஒத்தாசையாக இருந்திருப்போம். விசாரணை என்று வரும் போது இரு பகுதியில் ஒரு பகுதிக்கு எம்மேல் முன்னாள் கோபம் ஏதாவது இருந்திருக்கும். அவர் எமக்கெதிராக சாட்சி சொல்லப்போக நாம் சிறை செல்லவும் நேரிடலாம் அல்லவா?

இனி , எமது நாட்டில் பணம் பாதாளம் மட்டுமல்ல அதற்கப்பாலும் போகும். எந்த படுபாதக செயலையும் பணத்தால் மூடி மறைக்கலாம் என்ற நம்பிக்கை குற்றவாளிகளுக்கு இருக்கின்றது. அதே போன்று பக்க சார்பாக நடக்க ஒத்துக்கொள்வதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என்று அதிகாரிகள் நம்புகின்றார்கள்.

பொய்ச் சாட்சிகள் பணத்திற்காக எதையும் கூற தயாராக இருக்கின்றார்கள். நீதவானின் நியாயமான வழக்கு விசாரணைகளுக்கு அவர்கள் பெரும் குந்தகமாக அமைகின்றார்கள். குற்ற செயலை யார் செய்தார்கள்? எங்கு ? எப்படி செய்தார்கள் என்பதை சந்தேகமற உறுதி செய்ய முடிவதில்லை. எந்த சந்தேகமும் குற்றவாளிக்கு சாதகமாகவே பார்க்கப்பட வேண்டும் என்று சட்டம் சொல்கின்றது. இந்நிலையில் உண்மையான குற்றவாளியே விடுவிக்கப்படும் நிலை உண்டாகின்றது. பாருங்கள்.... அநாவசிய பக்க சார்புகள் நாட்டில் குற்ற செயல்கள் தொடர்வதற்கு எப்படி உதவியாகின்றதென்று!

இனி போட்டிக்கும் பொறாமைக்கும் அப்பால் பக்கசார்பின் உச்சகட்டமாக துவேஷம் பெரிய அளவில் தலைவிரித்தாடுகின்றது. அதனை நாம் எமது நாளாந்த வாழ்வில் அனுபவித்துக்

கொண்டிருக்கின்றோம். துவேஷம் , இன துவேஷசம், மத துவேஷம் , சாதி துவேஷம் என பலதரப்பட்டு விரிந்து செல்கின்றது.

அரசியல் செய்பவர்கள் தம்மை பலப்படுத்திக்கொள்வதற்காக பயன்படுத்தும் ஆயுதம் தான் இனத்துவேஷம். பாராளுமன்ற ஆட்சியில் வாக்கு பலம் மிகவும் முக்கியமாக உள்ளது. அதனை ஈட்டிக்கொள்ள வேண்டுமென்றால். இனங்களுக்கு மத்தியில் எவர் பெரும்பான்மை யினராக உள்ளனரோ அவர்களது சகாயத்தை எந்த வழியிலேனும் பெற்றுக் கொள்ளவேண்டியதுதான்! எந்த ஒரு நாட்டின் பெரும்பான்மை இனத்தவரும் சரி அவர்களுக்கு வேண்டியது தமது பொருளாதார சமூக உயர்ச்சியே. அரச பதவிகள், பெரும் பெரும் தொழிற்துறைகள் எல்லாமே அவர்களது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இனி சிறுபான்மையினத்தவருக்கு நாட்டில் மொழி , மத , பொருளாதார சுதந்திரம் இருக்க கூடாது. சிறுபான்மை இனத்தவரை காலின் கீழிட்டு மிதிக்கும் அளவுக்கு அரசியல் செய்வோர் இடமளிக்க வேண்டும். நீதித்துறை நடுவு நிலைமை பேணுவதை ஏற்க முடியாது. பெரும்பான்மை இனத்தவர் செய்யும் அநீதிகளை கண்டுகொள்ளக் கூடாது. அப்படியெல்லாம் பக்கசார்பாக நடந்தால்தான் அரசியலில் நீடிக்க முடியும்.

இந்தியா மற்றும் மேலத்தேய நாடுகளில் பல இனத்தவர்களுக்கும் பொதுவாக இந்து மதம் மற்றும் கிறிஸ்தவம் வேரூன்றி உள்ளது. அரபு நாடுகளில் முஸ்லிம்கள் தனி பலத்துடன் இருக்கின்றார்கள். ஆனால் எமது நாட்டில் பௌத்தம் பெரும்பான்மை பலத்துடன் திகழ்கின்றது. பௌத்த துறவிகள் பக்க சார்பாக இருந்து பெரும் அராஜகம் புரிகின்றார்கள். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள். அவர்களுக்கு மத சுதந்திரம் இல்லை. அவர்களது ஆலயங்கள் தகர்த்து எறியப்படுகின்றன. 'கடவுள் எமது ஆன்மாவில் குடிகொண்டிருக்கின்றான்' என்று கூறும் இந்து மதமும் , 'எல்லாப்புகழும் இறைவனுக்கே என்று கூறும் இஸ்லாமும்' , 'தட்டுங்கள் திறக்கப்படும் ' என்று கூறும் கிறிஸ்தவமும் பக்க சார்பு காரணமாக நசுக்கப்பட்டுள்ளன.

கொலை , கொள்ளை , பாலியல் வன்முறைகள் போன்று பக்க சார்பும் சமூகத்தை பீடித்திருக்கும் ஒரு பிணி என்றே கூற வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் அவை நாட்டில் நீடிப்பதற்கு காரணம் அரசினதும் நீதிமன்றங்களினதும் பக்க சார்பு என்றுதான் கூறவேண்டும்.

சமூகத்தில் நடுவு நிலைமை என்று நிலைநிறுத்தப்படுகின்றதோ அன்றுதான் மனித குலத்திற்கு விடிவு கிட்டுவதாகும். பொய்யாமொழி புலவர் நடுவு நிலைமை மற்றும் செங்கோன்மை ஆகிய இரு அதிகாரங்களை தனது நூலில் உள்வாங்கியுள்ளார்.

அறங்களில் எல்லாம் சிறந்த அறம் நடுவுநிலைமைதான். நாம் ஏனைய எந்த அறங்கள் பற்றியும் கவலை கொள்ள வேண்டியதில்லை. நடுவுநிலைமை நின்றால் மட்டுமே போதும் மற்ற அறங்கள் எல்லாம் கைகூடும். நடுவுநிலைமை என்பது பாகுபாடற்ற வகையில் அனைவரையும் சமம் என்று எண்ணுவதாகும். எவர் ஒருவரால் அப்படி நடந்துகொள்ள இயலுமோ அவரை அனைவரும்போற்றுவர்.

நடுவுநிலைமை தவறிய ஒரு செயற்பாட்டால் நன்மைதான் உண்டாகுமென்றாலும் நாம் அதனை தவிர்ப்பதே முறையாகும். நல்ல வழியிலே பணத்தை சம்பாதிக்க வேண்டும். எமது வாழ்கையில் நன்மையும் தீமையும் மாறி மாறி வரும். அதற்கு காரணம் நாம் எமது முற்பிறப்பில் செய்த நல்வினைகளும் தீவினைகளுமாகும். ஆனால் நடுவுநிலைமை நிற்கும் ஒருவருக்கு அப்போதே புகழ் உண்டாகும். எமது மனம் நடுவுநிமையை பேண வேண்டும். அப்போது எமது சொல்லும் நீதி நியாயம் சார்ந்ததாக அமையும்.

வர்த்தகர்களகூட நடுவுநிலைமை நின்றே தமது தொழிலை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றார்கள

நடுவுநிலைமை என்பது அரசியலில் உள்ளோருக்கும் நீதியை நிலைநாட்ட வேண்டியவர்களுக்கும். மிக மிக இன்றியமையாததாகும். குடிமகன் ஒருவன் குற்றமிழைத்தால் அவன் குறித்து எந்த பாகுபாடும் இன்றி குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப தீர்ப்பு வழங்குவது கட்டாயமாகும். அப்படியான ஒரு நிர்வாகத்தின் கீழ் குற்றவாளிகள் தவறு செய்ய அஞ்சுவர். சான்றோர் அந்த நிர்வாகத்தை போற்றுவர்.

இன்று உலகில் என்ன நடக்கின்றது. வளர்ச்சியடைந்த அனைத்து நாடுகளுமே தமது நலன் சார்ந்தே முடிவெடுக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபை கூட நடுவுநிலை நிற்பதில் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றது. அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் கூட தமது மேலாதிக்கத்தை ஐ.நா சபைமீதும் ஏனைய சிறு நாடுகள் மீதும் செலுத்துகின்றன. ஆயுதம் தான் இன்று அரசோச்சுகின்றது. உலகில் தீவிரவாதம் மேலோங்கி விட்டது. அவர்களும் ஆயுததாரிகளாகி விட்டனர். இப்பிரச்சனைகளை எப்படி தீர்ப்பது?

முதலில் சிறிய அளவில் ஆரம்பிப்போம். உற்றார் உறவினர், நண்பர்களுடன் நடுவு நிலைமையை பேணுவோம். அவர்கள் மீது அன்பு செலுத்துவோம். அவர்களை பாதுகாப்போம். வாய் ஒன்று சொல்ல மனம் ஒன்று எண்ணா விட்டாலே போதும்! இந்த உலகத்துக்கு விடிவு கிட்டிவிடும்!

மலைமுரசு வாரமலர் - 27.02.2016 04.03.2016

19

முதுமையிலும் ஆனந்தமாக வாழலாம்.

எமது வாழ்க்கை பல பருவங்களை உடையது. பால்யம் , இளமை, வாலிபம் ,முதுமை என்பன குறிப்பிட்டு கூறக்கூடியன. கொடிய நோய்கள், விபத்துக்கள், தற்கொலை, பிரசவம் போன்றவற்றால் சம்பவிக்கக்கூடிய மரணங்களை தவிர்த்தால் ஏனையோர் முதுமையை தவிர்ப்பதென்பது இயலாது. நடுத்தர வயதை எய்தும் போதே பலரும் முதுமை பற்றி எண்ணி அச்சம் கொள்ள தொடங்கிவிடுவர். முதுமைப் பருவம் பல சவால்களை உடைத்தது என்பது ஏதோ உண்மைதான். ஆனால் அவற்றை எம்மால் எதிர்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் போதும் முதுமையிலும் ஆனந்தமாக வாழ முடியும்.!

இக் கட்டுரையாசிரியரான எனக்கு அண்மையில் ஒரு பயனுள்ள நூல் கைக்கெட்டியது. அதன் தலைப்பு அறுபதிலும் ஆனந்த வாழ்வு என்பதாகும். நான் திடுக்குற்று விட்டேன். ஏனென்றால் எனக்கோ இப்போ எழுபது வயது!. ஆம் முதுமையிலும் ஆனந்தமாக இருக்க வேண்டும்மென்றால் நாம் ஆரோக்கியமாகவும் சுறு சுறுப்பாகவும் இருக்க வேண்டும். எமது குடும்பத்தாருடனும் சுற்றத்தாருடனும் நல்ல ஐக்கியத்தையும் மேம்பட்ட உறவையும் பேண வேண்டும். ஒழுக்கமும் நல்ல நடத்தையும் அத்தியாவசியம் . மன அமைதி பிரதானம்.

பலர் அறுபது வயதிலும் நல்ல உடல் உள ஆற்றலுடன் இருக்கின் றார்கள். அரச சேவையில் மீள் நியமனம் கருத்துக்கெடுக்கப் படுகின்றது, சில வருடங்கள் முன்னர் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏராளமாக இருந்தன. அவற்றில் நல்ல அனுபவஸ்தர்களுக்கு பதவியும் அதிகூடிய சம்பளமும் வழங்கினார்கள். ஒரு பக்கம் ஓய்வூதியம், மறுபக்கம் உயர் சம்பளம். காசை விட்டெறிவதனால் உண்டாகும் மகிழ்ச்சி அனைத்து கவலைகளையும் மறக்கடிக்க வைத்துவிடு மல்லவா? இனி ஆரோக்கியமானதும் அத்தியாவசியமானதுமான

உணவு. உடலாரோக்கியத்தை முன்னிட்டதான மேலான அவதானிப்பு. பேரப்பிள்ளைகளுக்கு என்னென்ன வேண்டும் என்று கேட்டறிந்து பெற்றுக்கொடுப்பதில் உள்ள சந்தோஷம்.. அவை யாவுமே முதுமையின் துன்பங்களை மறக்கடிக்க போதுமானதல்லவா?

இனி வெளிநாட்டில் உள்ள பிள்ளைகளுக்கு குழந்தை பிறந்தால் அவர்களை யாராவது கண்ணியத்துடன் பராமரித்தால்தான் கணவன் மனைவி இருவரும் தத்தம் வேலைக்கு போக முடியும். அந்த நோக்கத்திற்காகவே பெற்றோரை தாம் வசிக்கும் நாடுகளுக்கு வரவழைக்கும் பிள்ளைகள் உண்டு. முதுமை என்று வந்துவிட்டாலே பொறுப்புக்கள் அற்று போகும் நிலையில் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் வாழ்வது பெரும் மகிழ்வையே தருமல்லவா!

முதுமையை தாழத்தி போடுவதற்கு பணம் அவசியம். எனவே சேமிப்பு என்று கையில் ஏதாவது இருக்க வேண்டும். பிறரை நம்பியிருந்து ஏமாறும் கட்டத்திற்கு ஆளாகக் கூடாது. சேமிப்பு எமது கையில் இருந்தால் போதும். முதுமை நிமித்தமான நோய் நொடி பற்றிய அச்சமின்றி வாழமுடியும். உறவுகளும் சுற்றமும் கூட சொற் கேட்பார்கள்.

அடுத்தபடியாக உடற்பயிற்சி முதுமையை ஒத்திப் போட வல்லது. இயற்கையாகவே முதியவர்களுக்கு வரக்கூடிய இரத்த அழுத்தம் , நீரிழிவு , இருதய நோய் , குடற்புண், மூட்டுவலி , நாரிப்பிடிப்பு, போன்ற நோய்களையெல்லாம் உடற்பயிற்சி மூலம் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வைக்கலாம். அது போன்று அளவான சத்துள்ள உணவு உடலுக்கு வலுவூட்டும். சரியான வைத்திய ஆலோசனையின் கீழ் தினமும் மருந்து சாப்பிட்டு வருவதன் மூலம் முற்கூறிய வருத்தங்களை முற்றாக கட்டுப்பாட்டுக்குள் வைக்கலாம்.

இப்போதெல்லாம் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் ' ரெட் வைன்' 'பிரண்டி', 'ஜின்', போன்றவற்றை கொண்டு வருவது ஒரு நாகரீகமாக உள்ளது. மது என்றால் என்ன என்று அறியாத தமது பெற்றோருக்கு 'ரெட்வைனை ' பாவிக்கும் படி ஆலோசனை வேறு கூறுகின்றார்கள். இரவில் மருந்து போல சிறிதளவு 'ரெட்வைனை' எடுத்தால் உடல் வருத்தங்கள் தோன்றாது என்றும் கூறுகின்றார்கள். அது தொடக்கத்தில்

உண்மையாக இருக்கலாம். நாள் போக போக மது வேலை செய்யாது. அளவை கூட்டவேண்டி வரும். அதனால் வைத்தியர் சிபார்சு செய்யும் மருந்து வேலைசெய்யாது. உண்மையை சொல்ல வேண்டுமென்றால். வைத்திய ஆலோசனை பெறவேண்டிய நிலையில் உள்ள முதியவர்கள் மது பழக்கத்திலிருந்து விலகியிருப்பதே நன்று.

இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு பொதுவாகவே கோபமும் பதட்டமும் வரும். அதற்கு இடம் கொடுத்தால் நோய் இன்னமும் அதிகரித்து விடும். அதே போன்று நீரிழிவு உள்ளவர்கள் இனிப்பு, மாப்பொருள் , கொழுப்பு உள்ளிட்ட உணவு வகைகளை தவிர்க்க வேண்டும். ஆனால் அவர்களுக்கு என்று பார்த்து வாயை கட்டுப்படுத்த முடிவதில்லை. நீரிழிவு நோய்க்கான மருந்தைதான் பயன்படுத்துகின்றோமே அது ஈடுசெய்யும் என்று கூறிக்கொண்டு கேக், ஐஸ்கிறீம், கொக்கோகோலா என்று அருந்தினால் என்ன ஆகும். பலருக்கு நடமாட முடியாத நிலை வருவது அதனால் தான்.

நடமாடிக்கொண்டிருக்கையிலேயே சாகவேண்டும் என்ற விருப்பம் பலருக்கு இருக்கும். அப்படியே நீங்களும் கருதினால் ஒரு சிறிய ஆலோசனை. வீட்டிற்கு வெளியே போவதை தவிர்த்துக்கொள்ளுங்கள். உங்கள் உடற்பயிற்சிகளை கூட வீட்டிலேயே வைத்துக்கொள்ளுங்கள். தெருவில் எந்த வாகனமாவது முட்டிமோதி கைகாலை சேதம் பண்ணுவதை தவிர்க்கலாம். அதே போன்று நீங்களும் மகிழுந்து போன்ற சிறிய வாகனம் தவிர்ந்த உந்துருளி, துவிச்சக்கரவண்டி ஆகியவற்றை ஓட்டுவதை கைவிடவேண்டும். இவற்றால் பாரிய அனர்த்தம் உண்டாகும். கைகால்களை உடைத்துக்கொண்டு விட்டால் எந்த உறவுகளும் உங்களை முழுநேரமும் தாங்கமாட்டார்கள்.

அடுத்து, வீட்டில் செல்லப்பிராணிகளை வளர்ப்பது நல்ல மன ஆறுதலை தரும். அவை எப்போதும் நாம் அழைத்தவுடன் அன்புடன் ஓடி வரும். இதய நோய்க்கு பதற்றமற்ற மனநிலை அவசியம். இலேசான பொழுதுபோக்குகள், தொலைக்காட்சி, மற்றும் உறவுகளுடன் மனம் திறந்து பழகுதல், பேரப்பிள்ளைகளுடன் செல்லம் கொஞ்சுதல் இவை மகிழ்ச்சியை உண்டுபண்ணி மன அமைதியை தரும்.

தினமும் சிறிது நேர தியானம் உடல்உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும். இறைவழிபாடு போல நன்மை பயப்பது எதுவும் இல்லை.!

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் போது மரணத்தை எண்ணி ஏன் அஞ்ச வேண்டும்? மரணமடைந்த பின்னர் அந்த கவலை தான் ஏது? அப்படி எண்ணி சமாதானம் ஆகலாம்.

நீரிழிவு நோய் இருப்பவர்கள் அதனை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக்கூடிய சிறந்த மருந்துகள் இப்போ தாராளமாக இருக்கின்றன. மேலதிகமாக உணவு உடற்பயிற்சி இரண்டும் அவசியம். நீரிழிவு நோயை கட்டுப்பாட்டிற்குள் வைக்க தவறினால் 'குழுக்கோமா' என்ற கண்பார்வை அற்றுப்போகும் நிலை உண்டாகும். முதியோர்களுக்கு பார்வை அவசியம். அதில் பிரச்சனை உண்டானால். அவர்களின் நடமாட்டம் முற்றாக முடங்கிவிடும். இந்த விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

முதியவர்கள் கட்டாயமாக அவதானத்துடன் இருக்க வேண்டிய மற்றுமொரு விடயம் உடற்பருமன் ஆகும். உடற்பருமனை கட்டுப்பாட்டுடன் வைத்தாலே பாதி வருத்தம் தவிர்க்கப்படும்.

இளைப்பு , மூட்டு வலி , உடல் நோவு, தளர்வு எல்லமே எமது அதிகரித்த பருமன் காரணமாகவே உண்டாகின்றன. இனி படுக்கையில் விழுந்து விட்டால் எம்மை தூக்கி பராமரிக்க வேண்டிய பிள்ளைகளின் நிலை என்ன என்பதை சிந்திக்க வேண்டும். சாப்பாட்டை கட்டுப்பாட்டுடன் வைத்துக்கொண்டு தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். குடும்பத்தாருக்கு தெரியாமல் வீதியோர கடைகளில் புளி, உப்பு ,காரம் நிறைந்த சொட்டுத்தீனிகளை உண்பதை தவிர்க்க வேண்டும்.

இனி முதுமை பெண்களை வித்தியாசமான வழிகளில் பாதித்து அவர்களுக்கு சிரமத்தை உண்டு பண்ணிவிடுகிறது. வாழ்கை முழுவதும் மாதவிடாய் நிமித்தமாக அனுபவித்த துன்பம் முதுமையில் மாதவிடாய் முற்றும் என்ற பிரச்சனையாக உருவெடுக்கின்றது. ஹார்மோன் உற்பத்தி குறைவு, மனநிலை மாற்றங்களை

உண்டுபண்ணுகின்றது. உற்சாகம் இன்மை, திடீர்கோபம், படபடப்பு, மனஎரிச்சல் ஆகிய பாதிப்புகள் உண்டாகின்றன. அவற்றை வெளிநாடுகளில் 'கிளப்' போன்ற பொழுது போக்கு நிலையங்கள் ஈடுசெய்கின்றன. எமது நாடுகளில் பெண்கள் கணவருடன் முரண்படுகின்றனர். இந்த விடயத்தில் விவேகத்துடன் சமாதானமாகி வாழ பழகவேண்டும். மார்பக புற்று நோய் பரிசோதனை பெண்களுக்கு கட்டாயமானது. ஆரம்ப நடவடிக்கைகள் மூலமாக பரிகாரம் செய்ய முடிகின்றது.

எமது இளமை காலத்தில் எமக்கு களிப்பூட்டிய சம்பவங்களை நினைவு கூருவது மகிழ்ச்சி தரும். நாம் ஈட்டிய வெற்றிகள், அடைந்த இலாபங்கள், எமது திறமையை நினைவூட்டும். கடற்கரை, விளையாட்டு மைதானங்கள் , சர்க்கஸ் காட்சிகள் , கலையரங்குகள் மனதிற்கு களிப்பை தரும். மற்றவர்களுக்கு இயன்ற உதவியை புரிவது மன மகிழ்ச்சியை தரும். அனைவருடனும் தோழமையுடன் வாழ்ந்தால் எமது நீண்ட கால வாழ்கை எத்தனை அவசியம் என்பதை அவர்களே எமக்கு நினைவூட்டுவார்கள்!

மலைமுரசு வாரமலர் – **05.03.2016 11.03.2016**

20

முகநூலின் மறுபக்கங்கள்

சில வாரங்கள் முன்னர் 'முகநூல்' என்னும் சமூக வலைத்தளம்' என்கின்ற கட்டுரை என்னால் எழுதப்பட்டு இப்பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அக்கட்டுரையில் முகநூலின் பயன்பாடு பற்றியே அதிகம் எழுதப்பட்டிருந்தது. 2004ம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட முகநூல், அண்மையில் தனது பன்னிரண்டாவது பிறந்த தினத்தையும் கொண்டாடியது. அதே போன்று மில்லியன் கணக்கானோர் முகநூலில் தத்தமக்கென கணக்குகளை வைத்திருக்கின்றார்கள்.

இருந்தும் என்ன...இன்னும் பலர் முகநூல் பற்றி அச்சம் கொண்டவர்களாக இருப்பதையே காணக்கூடியதாக உள்ளது. எனது நெருங்கிய உறவினள் ஒருத்தி வெளிநாட்டில் நீண்ட காலமாக வசிக்கின்றாள். எனது முகநூல் பக்கங்களை பார்க்கும்படி அவளை பலவாறு வேண்டியும் அவள் முகநூலில் அறிமுகமாகாத நிலையில் எனது பகிர்வுகளை பார்ப்பதில்லை. 'முகநூல் ஒரு சந்தை. அங்கு சண்டையும் சச்சரவும்தான் இருக்கும். நீங்கள் அதற்குள் சென்று அகப்பட்டு கொள்ள வேண்டாம்.' என்று அவளது பிள்ளைகள் அவளை எச்சரித்திருப்பதாக கூறுவாள்.!

அதே போன்று எனது நண்பர் ஒருவரின் பையன் வெளிநாட்டில் 'Software Engineer' கல்வியை முடித்து பெரிய 'IT' நிறுவனத்தில் பணிபுரிகின்றான். அமெரிக்காவில் உள்ள முகநூல் சார்ந்த நிறுவனம் ஒன்று அவனை பணிக்கமர்த்துவதற்காக அதிக சம்பளம் தர முன்வந்த நிலையிலும் அவன் மறுத்துவிட்டான். அத்தனைக்கும் அவனுக்கு முகநூல் கணக்கு ஒன்று இல்லை.

என்னதான் பிரச்சனை என்று ஆராய்வதற்காக முகநூலில் அதிக ஆர்வம் உள்ள எனது நணபர் ஒருவருக்கு கதையை கொடுத்துப்

பார்த்தேன். அவர் தனது அண்மைக்கால அனுபவம் ஒன்றை என்னுடன் பகிர்ந்து கொண்டார். சில நாட்கள் முன்னர் அவர் குடும்ப சமேதரராக தனது சொந்த ஊரான யாழ்ப்பாணத்திற்கு சென்றுள்ளார். அங்கு நூறு வயதை அண்மித்த உறவினர் ஒருவரை அவரது சகோதரி பராமரித்து வந்த நிலையில் அவளை பாராட்டியதுடன் புகைப் படங்களையும் சிறு விமர்சனங்களையும் தனது முகநூலில் பதிவுசெய்துள்ளார். 'எனது பாட்டனாரின் வேண்டுகோளில் நாங்கள் எங்கள் சொந்த ஊருக்கு சென்றோம். நூறு வயதிலும் அவருக்கு நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய்கள் எதுவும் இல்லை. தனது கடமைகளை தானே செய்பவராகவும் உள்ளார்.' அதுதான் நண்பர் செய்த பதிவு. சகோதரிக்கு அண்மையில் தான் யாரோ அவள் பெயரில் முகநூல் கணக்கொன்றை ஆரம்பித்து கொடுத்திருந்தார்கள். ஆங்கில அறிவும் சூன்யம். முகநூலில் பகிர்வு செய்தல், விமர்சனம் செய்தல், இற்றைப்படுத்தல், என்பவை பற்றியெல்லாம் அறியாள்.

எனவே வந்தது வினை.... நண்பருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திக் கொண்டு மனத்தாங்கல் ஏற்படும் படி நல்ல கிழி!

'பாட்டாவுக்கு வருத்தம் இல்லை என்று யார் சொன்னது. நேற்றும் நான் டாக்டரிடம் அவரை அழைத்து சென்றேன். உடுப்பு தோய்ப்பது முதற்கொண்டு அவரது கடமைகளை நான்தான் செய்கிறேன். பாட்டாவின் அழைப்பில்தான் வந்தீர்களா? நான் உங்களை அழைக்கவில்லையா?'

நண்பர் அதிர்ந்து விட்டார். மேசை நாகரீகம் போன்று முகநூல் நாகரீகம் என்றும் ஒன்று இருப்பதை ஏற்று நண்பர் பகிர்வை செய்திருந்தார். சகோதரி அதை புரிந்து கொள்ளவில்லை. நண்பர், உடனேயே அவள் தனது முகநூலை பார்க்கமுடியாத படி தடை செய்து விட்டார்.

சரி... விடயத்திற்கு வருவோம். என்னதான் முகநூலில் அரிய பயன்கள் இருந்தாலும் கூட பாதகமான விடயங்களும் குறிப்பிடப்படும் அளவுக்கு இருப்பதை மறுக்க முடியாது.

பிரதானமாக எவரும் பிறரது பெயரில் முகநூல் கணக்கொன்றை ஆரம்பித்து இயக்க முடியும். இப்போதெல்லாம் கைப்பேசியிலேயே முகநூலை பார்வையிட முடியும். பிறர் பற்றி போலியான , பிழையான அபகீர்த்தி ஏற்படக்கூடிய தகவல்களையும் , படங்களையும் , வீடியோ கிளிப்சையும் உலவவிடமுடியும். இந்தியாவில் பிரசித்தி பெற்ற நடிகைகளின் போலியான ஆபாசப்படங்கள் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகின்றன. இப்படியான படங்களை இளைய சமுதாயம் மற்றும் மாணவர்கள் தமக்குள் பரிமாறிக்கொள்கின்றார்கள். அதனால் இளம் சமுதாயத்தின் கல்வியும் கலாச்சாரமும் மிக மோசமாக பாதிப்புக்கு உள்ளாகின்றன.

முகநூல் அதிக அளவு விமர்சனத்துக்குள்ளாவது காதல் விவகாரம் காரணமாகவே! முழைத்து மூன்று இலை விடாத ஆண்பிள்ளைகளும் சரி பெண்பிள்ளைகளும்சரி வரிந்துகட்டிக்கொண்டு முகநூலில் நேரத்தை செலவிடுவது மறு பாலார் சார்ந்த கவர்ச்சி காரணமாகவே! பெற்றோர் தமது பெண்பிள்ளைகளை பொத்தி வளர்க்கின்றார்கள் என்றால் முகநூலோ அவர்களை சந்தைக்கு கொண்டுவந்து விடுகின்றது! ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்காமலும் சரியான தகவல்களை பெற்றுக்கொள்ளாமலும் காதல் செய்ய முடிவெடுக்கும் பெண்கள் பற்றி என்னதான் கூறமுடியும்! பல பெண்கள் வல்லுறவுக் குட்படுத்தப்படுவதற்கும் கொலை செய்யப்படுவதற்கும் தற்கொலையை தெரிவு செய்வதற்கும் முகநூல் காரணமாக இருந்திருக்கின்றது.

காதல் செய்யும் பெண்கள் படுக்கையறை ஆடைகளுடன் தமது படங்களை காதலருக்கு அனுப்பி வைக்கின்றார்கள். காதலன் தன்னுடன் நெருங்கியிருக்கும் வீடியோக்களை, பெண்கள் அன்பு நிமித்தம் ஏற்றுக்கொள்கின்றார்கள். காதல் முறிவடையும் போது பெண் முகநூலில் பழிவாங்கப்படுகிறாள்.

எமது தகவல்களை பிறர் திருட முகநூல் இடம் கொடுக்கிறது. நாம் முகநூலில் பகிரும் எமது படங்களை குறிப்பாக பெண்களின் படங்களை திரிபுபடுத்தி மற்றவர்களுக்கு 'Tag' பண்ண வாய்ப்பிருக் கின்றது.

சிறுவர்கள் சரியான மனப்பக்குவமின்மை காரணமாக ஆபாசம் சார்ந்த படங்களுக்கும் வீடியோ கிளிப்சுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். திகலூட்டும் செய்திகளையும் ஆபாச வீடியோக் களையும் 'கிளிக்' செய்வது பல சந்தர்ப்பங்களில் விபரீதத்தை உண்டு பண்ணி விடும். பாவனையாளரே அச்செய்திகளையும் ஆபாச வீடியோக்களையும் இற்றைப்படுத்தியதாக காட்டிவிடும். முகநூல் மூலம் பல காரணங்களுக்காக சிறுவர்கள் குற்றவாளிகளாகிறார்கள்.

மாணவர்களதும் தொழில் புரிபவர்களதும் முன்னேற்றத்திற்கு முகநூல் பெரும் தடையாக உள்ளது. மாணவர்கள் படிப்பில் செலவிட வேண்டிய தமது பொன்னான நேரத்தை முகநூலில் செலவிடுகின்றார்கள். அதே போன்று தொழில் புரிபவர்கள் அலுவலகங்களிலும் தொழிற்சாலை களிலும் முகநூல் பார்ப்பதால் அவர்களது வினைத்திறமையான சேவை வீழ்ச்சியடைகின்றது.

பாவனையாளர்கள் எவராக இருந்தாலும் தாம் முகநூலில் நேரத்தை அதிக அளவில் செலவிடுவதை உணர்ந்து கொள்வதில்லை. கல்வி கற்போர் தமது முகநூல் கணக்கை ஒழுங்காக பார்க்க முடியாத போது அசௌகரியமடைகிறார்கள். முகநூலில் முழுநேர ஈடுபாடு ஒரு பழக்கதோஷமாக உருவாகிவிடுகிறது. அதுவே ஈற்றில் சமூக விரோத செயல்களுக்கு காரணமாகிவிடுகின்றது.

பாவனையாளர்கள் புதிய புதிய படங்கள் மற்றும் வீடியோகிளிப்சை இற்றைப்படுத்துவதுடன் அவற்றை பிறருடன் தொடர்ந்து பகிரும்போது அதற்கு அடிமைப்படுவதுடன் அவற்றிற்கு தடை உண்டாகும் போது விரக்திக்கும் உள்ளாகின்றார்கள். பலர் அநாவசியமானதும் தம்முடன் சம்பந்தமில்லாததுமான விடயங்களை பகிர்வதால் நண்பர்கள் அதிருப்திக்கு உள்ளாகின்றார்கள். முகநூலில் அதிக ஈடுபாடு திருட்டுக்கு சந்தர்ப்பத்தை உண்டு பண்ணுகின்றது. பிற ஆற்றல் களுக்கு தடையாக அமைகின்றது.

முகநூல் , கைவிட்டு போன பழைய உறவுகளை மீட்க உதவுகின்ற போதும் வயோதிபம், சுகயீனம், ஆர்வமின்மை காரணமாக அக் கணக்குகளை அவர்களது பிள்ளைகளே இயக்கும் நிலை உள்ளது.

அதனால் உண்மையான நினைவுகள் மீட்கப்படுவதில்லை. அதே சமயம் புதிய உறவுகளின் நிர்ப்பந்தங்கள் உண்டாகின்றன.

முகநூல் பாவனையாளர்கள் தாம் சார்ந்து நிற்கும் கட்சி, கொள்கைகளை பிறருடன் பகிர்ந்து கொள்ள ஆர்வமாயிருப்பர். அவை அனைவருக்கும் ஏற்புடையதாக அமையமாட்டாது. இந் நிலையில் முகநூலில் எதிர்வாதங்கள் கிளம்ப இடமுண்டு. பலரது குற்றச்செயல்கள் அம்பலத்துக்கு வருகின்றது. அண்மைக்காலத்தில் முகநூலில் எமது அரசியல் களம், ஆயுத போராட்டம் உட்பட காணமல் போனோர் பற்றிய கட்டுரைகளும் விவாதங்களும் சூடுபிடித்திருப்பதை அவதானிக்கலாம்.

எம்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி முகநூல் பல விவாக இரத்துக்களுக்கு காரணமாக அமைந்து விடுகின்றது. கணவன் மனைவி இருபாலாரும் தனித்தனி முகநூல் கணக்குகளை வைத்திருப்பதும் அவர்களது நட்பு வட்டம் வேறுபடுவதும் சாதாரணமாக காணப்படுகின்றது. கணவன் ,தனது மனைவியின் பிறருடனான தொடர்புகளை அவதானிக்கின்றான். அதே போல் மனைவியும் விழிப்பாக இருக்கின்றாள். பிறருடனான தொடர்புகள் சந்தேகத்திற்கு இடமளிக்கின்றது. அதே போன்று விவாகத்துக்கு முன்னைய உறவுகள் புதுப்பிக்கப்படும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். கோபத்தில் சமூகவலைத்தளத்தில் செய்யும் அநாவசிய இற்றைப் படுத்தல்கள் அல்லது விமர்சனங்கள் பகையை உண்டுபண்ணும். முகநூல் இரு பாலாருக்குமே புதிய புதிய நட்பு வட்டங்களை உண்டு பண்ணி விடுகின்றது. அது குடும்பத்தில் விரிசலை உண்டு பண்ணுவதுடன் புதிய மணவாழ்க்கைக்கும் காலாகிவிடுகின்றது. முன்னைய தாரத்து பிள்ளைகளின் கதி அதோகதிதான்!

இன்னும் சொல்லப்போனால் முகநூலில் சரியான தேடல் பொறி ஒன்று இல்லை. அறிவையும் ஆற்றலையும் வளர்க்க அது தடையாக உள்ளது!

மலைமுரசு வாரமலர் - 12.03.2016 18.03.2016

21

ஆசியும் சாபமும்.

மகாபாரதத்தில் இரண்டு பிரதான மன உணர்வுகள் ஒவ்வோர் கட்டத்திலும் வெளிக்கொணரப்படுகின்றன. அவை. 'ஆசியும் சாபமும்' ஆகும். பரசுராமர் கர்ணனுக்கு கொடுத்த சாபத்தால் அவன் அவசியமான நேரத்தில் தான் கற்ற வித்தையை மறந்து தோல்வியை தழுவுகின்றான். அதே சமயம் பாண்டவர்கள் பல முனிவர்களதும் ஆச்சாரியர்களதும் ஆசியை பெற்று குருஷேஸ்திர யுத்தத்தில் வெற்றி பெறுகிறார்கள். பதினொரு அக்குரோணி சேனைகளை திரட்டிய கௌரவர்களால் ஏழு அக்குரோணி சேனைகளின் ஆதரவை பெற்ற பாண்டவர்களை தோற்கடிக்க முடியவில்லை. அதற்கு காரணம் அறத்தை கடைப்பிடித்த மகான்களினதும். ஆச்சாரியர்களினதும் ஆசி காரணமாக தெய்வமும் அவர்கள் பக்கம் நின்றதே ஆகும். கண்ணன் தெய்வாம்சம் பொருந்தியவன். இறைவனின் அவதாரம். அவன் ஆயுதம் ஏந்தி யுத்தம் புரியவில்லை. ஆனாலும் பாண்டவர்கள் வென்றார்கள். அது எதனை உணர்த்துகின்றது என்றால் ஒருவனது வெற்றிக்கு பின்னால் பலரது ஆசிதான் துணை நிற்கின்றது என்பதனை!

மகாபாரதபோர் இன்றும் முடிந்து விடவில்லை. இன்றும் நாம் குருஷேஸ்திரத்தில் தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். அறத்தை கடைப்பிடிக்கும் மகான்களும்.... சகுனி... துரியோதனன், துச்சாதனன் போன்ற துரோகிகளும் வேறு வேறு உருவங்களில் எம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். திரௌபதிகள் துகிலுரியப்படு கின்றார்கள். அபிமன்யு போன்ற சிறுவர்கள் கொல்லப்படுகின்றார்கள்.

மகாபாரதம் புகட்டிய பாடத்தை மனிதன் உணராததால்தான் இன்றும் நாம் அச்சத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். எமது வாழ்க்கை மகத்தானது!

நாம் ஒவ்வொருவருமே வாழ்கையின் உச்சத்தை தொடவே போராடுகின்றோம். அப்படியாயின் அந்த வெற்றிக்காக நாம் சம்பாதிக்க வேண்டியது பெரியோர்களின் ஆசியையே அல்லவா? நீங்கள் நல்லவர்களாக ஒழுக்க சீலர்களாக அறத்தை கடைப்பிடிப்பவர்களாக , மற்றவர்களுக்கு உதவுபவர்களாக வாழ்வதொன்றே... உங்கள் வாழ்க்கையின் வெற்றிக்கான ஆரம்ப படிகள். உங்கள் பெற்றோரும் உற்றாரும் சுற்றத்தவரும் உங்களுக்கு ஆசி வழங்குபவர்களாக இருந்தால் உங்கள் வாழ்க்கையில் தோல்வி என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

'நல்லாரை காண்பதுவும் நன்றே, நலன் மிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே, நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே, அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே' என்று ஔவையார் கூறிச்சென்றார். அதில் நல்லார் சொல் என்பது எமது நன்மையை இட்டு அவர் கூறும் நல்லாசிகள் என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று எம்மில் பலர் எப்படி வாழ்கின்றார்கள்? மற்றவர்களின் நலனில் எவ்வித அக்கறையும் இல்லை. இன்னும் சொல்லப்போனால். மற்றவர்கள் எம்மைக்காட்டிலும் முன்னேறிவிடக்கூடாது என்ற பொறாமை உணர்வு. பிறரை தூற்றிக்கதைத்தல், கெடுதல் விளைவித்தல், இந்த மனப்பாங்குகளுடன் எவராவது வாழ்ந்தால் அவருக்கு யாராவது ஆசி வழங்குவார்களா? இவை தோல்விக்கான படிகளன்றி வேறு எதுவும் இல்லையல்லவா?

எம்மில் பலருக்கு மேலான உத்தியோகமும். வருவாயை அள்ளி வழங்கும் தொழில் வாய்ப்பும் வெளிநாட்டு பலனும் கிட்டிவிட்டால போதும். எவரையுமே கணக்கெடுக்க மாட்டார்கள். அவர்களது பிள்ளைகளும் பல சந்தர்ப்பங்களில் பெற்றோரையே பின்பற்ற பழக்கப்பட்டுவிடுகிறார்கள். உற்றாரையும் உறவினரையும் உதாசீனம் செய்யும் மனபாங்கு ஏற்பட்டு விடுகின்றது. தம்மை சார்ந்தவர்களது ஆசி பற்றி அவர்கள் கவலை கொள்வதில்லை.

அப்பாவிகளான உறவினர்களின் மனம் நோவடைகின்றது. அவர்கள் சாபமிடாவிட்டாலும் கூட அவர்களது கவலை தோய்ந்த மன உணர்வு தமக்கு பாதிப்பை உண்டுபண்ணும் என்பதை அவர்கள்

உணர்வதில்லை. சற்று சிந்தித்துப்பார்த்தால் புரியும். எந்தனையோ பேரின் வாழ்வில் அவர்கள் பல இன்னல்களையும் இடர்களையும் சந்திக்க நேர்வதுண்டு. அதற்கு எல்லாம் காரணம் அவர்களால் பாதிப்புக்குள்ளான பலரின் சாபம் என்பதை அவர்கள் உணர்வதில்லை. பிராப்தம் காரணமாக பலருக்கு தண்டனைகள் கிட்டுவதுண்டு. அது கூட முற்பிறப்பில் பிறரது சாபத்திற்கு உள்ளானதன் காரணம் என்றே கொள்ளவேண்டும்.

'குற்றமிலனாய் குடிசெய்து வாழ்வானைச் - சுற்றமாய் சுற்றும் உலகு' என்று வள்ளுவர் கூறியதன் பொருளை நோக்க வேண்டும். குற்றம் என்பது அறம் சார்ந்த நீதிக்கு மறுதலையான செயல்களை குறிக்கும். அவற்றை தவிர்த்து நடப்பவனை உலகத்தார் சூழ்வர் என்பது பொருள்.

சமூக நோக்கு உடையவர்க்கு தெய்வமும் வலிந்து கட்டிக்கொண்டு வந்து உதவி செய்யும். கடவுள் எப்போதும் நல்லவர்கள் பக்கமே நிற்கின்றார். அதை உணர்ந்து நாம் நல்லவர்களுடன் எப்போதும் சினேகம் செய்து கொள்ள வேண்டும். அப்போது அவர்களது ஆசி மட்டுமன்றி நேரடி உதவிகளும் எமக்கு கிட்டும்.

எம்மை காட்டிலும் உயர்ந்தவர்களை நாம் கனம் பண்ணுவதை போல எமக்கு இணையானவர்களையும் எமக்கு கீழ்பட்டவர்களையும் கௌரவித்து நடக்க வேண்டும்.

எமக்கு கீழ் பணிபுரிபவர்களை நாம் மதித்து நடக்கும் போது அவர்களுக்கு எம்மேலான அன்பு அதிகரிக்கின்றது. அந்த நேர்மையான ஏழை மனங்களின் ஆசி எம்மையும் எமது பிள்ளைகளையும் கூட சிகரத்திற்கு உயர்த்திவிடும்.

அமெரிக்கா, கனடா, போன்ற நாடுகளில் எம்மவர் உயர்ந்த சம்பளத்திற்காக கடினமான தொழில்களையும் புரிகின்றார்கள். அதற்காக வெள்ளையர்கள் ஒரு போதும் அவர்களை குறைத்து மதிப்பிடுவதோ அவமதிப்பதோ இல்லை. இன்னும் சொல்லப்போனால் அந்நாடுகளில் பிறந்து உயர்கல்வியை மேற்கொள்ளும் எமது செல்வங்கள் பற்றி ஆச்சரியமடையவே செய்கின்றனர். அவர்களது பெற்றோர்களை மெச்சவும் செய்கின்றார்கள். எனவேதான் புலம்

பெயர்ந்தோர் எந்த தொழிலையும் செய்து தமது மழலைசெல்வங்களை உயர்நிலைக்கு கொண்டுவருகின்றார்கள. அது எப்போப்பட்ட ஆசியின் பாற்பட்டது என்பதை சற்றே சிந்தியுங்கள்.

ஆய கலைகள் அறுபத்தினான்காகும். அக்கலைகளை எம்முன்னோர் போற்றி பாதுகாத்து வளர்த்தனர். குரு சிஷ்ய பரம்பரையில் வளர்க்கப்பட்ட ஒவ்வோர் கலையிலும் தேர்ச்சி பெறுவதற்கு சிஷ்யர்கள் குருவின்கீழ் தேர்ச்சி பெறுவது அவசியம்.. கலைகள் மேடைகளிலும் சின்னத்திரைகளிலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கலையை குருவுக்கு பணிந்தே கற்றுக்கொள்ள வேண்டும். குருவின் ஆசியில்லாமல் எந்தக்கலையிலும் சாதிக்கமுடியாது!.

நாட்டிய அரங்கேற்றங்களையும் சங்கீதம் சார்ந்த அரங்கேற்றங்களையும் பார்க்க கொடுத்துவைத்தால் நீங்கள் அசந்துபோய்விடுவீர்கள். பெற்றோர் தமது பிள்ளை தான் கற்றகல்வியில் குருவின் ஆசியை பெற வேண்டுமென்பதற்காக குருவுக்கு பொன்னாடை போர்த்தியும் தெட்சணை வழங்கியும் கௌரவிக்கின்றார்கள். அரங்கேற்றம் செய்யும் பிள்ளை குருவின் ஆசியை வேண்டி பாதம் பணிந்து வணங்கிய பின்னரே தான் கற்ற கலையை மேடையில் சமர்ப்பணம் செய்கின்றது. அரங்கேற்றம் வெற்றி பெற வேண்டுமென்பதற்காக குரு நிகழ்ச்சி முடியும் வரைக்கும் அப்பிள்ளைக்கு வழங்கும் ஆசியும் ஒத்துழைப்புமே கலைக்கு மட்டுமன்றி சபையோர்க்கும் நிறைவை தருகின்றது.

சின்னத்திரையில் 'சுப்பர் சிங்கர்', 'சன் சிங்கர்' ஆகிய நிகழ்ச்சிகளை உலகில் உள்ள இலட்சக்கணக்கான மக்கள் அதுவும் அவர்கள் எம்மொழி பேசுபவர்களாக இருந்தாலும் தவறாது பார்த்து இரசிக்கின்றார்கள். ஐந்து வயது குழந்தை முதல் இளைஞர்கள் யுவதிகள் அனைவரும் பங்கு பற்றும் போட்டி நிகழ்ச்சி அது. அந்த நிகழ்ச்சியின் வெற்றிக்கு காரணமே போட்டியாளர்களின் திறமையும் பணிவும் என்றுதான் கூறவேண்டும். எந்தவயதான போட்டியாளர்க ளானாலும்சரி குரு ஸ்தானத்தில் உள்ள மத்தியஸ்தர்களின் ஆசியை பெறுவதற்காக அவர்களது பாதம் பணிகிறார்கள

கலைகள் ஏன் வீழ்ச்சியடையவில்லை என்றால் அவை சான்றோரின் ஆசியை தொடர்ந்து பெறுவதனால்தான்.


இனி சாபம் பற்றி பார்ப்போம். நீங்கள் ஒருபோதும் தீயவர்களின் நட்பில் சிக்கி கொள்ள கூடாது. அறத்துக்கு புறம்பாக கொலை , கொள்ளை , பாலியல் இம்சை ஆகிய கொடுமைகளில் ஈடுபடுவோர் தொகை இன்று சமூகத்தில் அதிகரித்துள்ளது. தாம் செய்யும் அடாவடித்தனங்களை இட்டு மற்றவர்களுக்கும் ஆசை காட்டி அவர்களையும் அவற்றில் பங்கு கொள்ள செய்யும் கயவர்கள் பற்றி விழிப்பாக இருக்க வேண்டும். புதினம் பார்க்க சென்று மாட்டிக்கொண்ட பலர் இருக்கின்றார்கள். ஒரு குற்றச்செயலை செய்யாவிட்டாலும் கூட அதனை தடுக்காது ஒதுங்கியிருப்பது கூட குற்றமே ஆகும். தமது பொருளை, உயிரை, பெண் பிள்ளைகளின் மரியாதையை பறிகொடுத்தவர்களதும். உறவினர்களதும் சாபம் சும்மா விட்டுவைக்குமா?

பாலியல் இம்சையால் பாதிக்கப்பட்ட பெண்கள் சிலராக இருக்க... விளக்க மறியலில் இருப்போரின் தொகையையும் சிறைத்தண்டனை, மரணதண்டனை பெறுவோரின் தொகையையும் கூட்டிக் கணக்கிட்டுபாருங்கள் அப்போ புரியும் சாபத்தின் வலிமை!

விவாகம் செய்வதையும் பொருள் சம்பாதிப்பதையும் எந்த சமூகமும் தடை செய்யவில்லை. கௌரவமாக ஒரு தொழிலை செய்து ஒரு பெண்ணை மணந்து அவளது பெற்றோரினதும் உறவினரதும் ஆசியை பெற்று உயர்ந்த வாழ்கையில் ஈடுபடுவதை விட்டு அனைவரது சாபத்திற்கும்... தண்டனைகளுக்கும் உள்ளாவதால் என்ன பயன்?

குருஷேஸ்திரத்தில் கண்ணன் தர்மம் காத்தது போன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இன்றைய சமூகத்திலும் அவதார புருஷர்கள் நியாயவான்களாக இருந்து நிச்சயம் தர்மம் காப்பார்கள் என்பதை மனத்தில் இருத்தி வாழ்வோமாக!.

மலைமுரசு வாரமலர் :- 09.01.2016 15.01.2016



22

கொலையும் தற்கொலையும்

இலட்சக்கணக்கான உயிரினங்கள் இப்பூலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவை தமது இருப்பை தக்க வைப்பதற்காக தொடர்ந்து வாழ்வுக்கான போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளன. இந்த போட்டி உலகில் தம்மை தக்க வைக்க தவறும் உயிரினங்கள் ஒன்றில் அழிந்து விடுகின்றன... அன்றேல் அருகி காணப்படுகின்றன. அதனால் தான் எமது அரசாங்கம் கூட யானை, மான்,மயில் உட்பட பல காட்டு மிருகங்களையும் பறவைகளையும் வேட்டையாடுவதையும் கொல்வதையும் தடை செய்துள்ளது. அதே சமயம் மிருகங்கள் எவையும் தமது உணவுக்காக அன்றி பிற மிருகங்களை வேட்டையாடுவதில்லை. இன்னும் நாம் மிருகங்கள் எவையும் தற்கொலை செய்வதாக அறிந்ததும் இல்லை.!

உயிரினங்களிலேயே மிகவும் மேம்பாடு படைத்தது மனித இனம்தான். எமது உடல் அமைப்பு, பல் முதற்கொண்டு குடல் வரை எம்மை ஒரு தாவர பட்சணியாகவே அடையாளம் காட்டுகின்றது. சிங்கத்திற்கோ புலிக்கோ போன்ற வேட்டைப் பற்கள் எமக்கு கிடையவே கிடையாது. மிருகங்களினுடைய குடல் பச்சை மாமிசத்தையும் இரத்தத்தையும் செமிபாடடைய செய்யும் வகையில் அமைந்துள்ளது. எமது பற்களால் பச்சை மாமிசத்தை கிழிக்க முடியாது. குடல் போன்ற செமிபாட்டு உறுப்புக்கள் அவற்றை ஏற்கவும் மாட்டா. ஆனால் நாம் என்ன செய்கின்றோம்? செயற்கையாக இறைச்சியை பதப்படுத்தி உண்ணுகின்றோம். எம்மை நம்பி வாழும் பிராணிகளை கொன்று உண்பது எப்பேர்ப்பட்ட பரிதாபம் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இன்னும் சத்வ குணம் படைத்த எம்மில் ஓர் பிரிவினர் மாமிசத்தை மறுத்து உயிர்வாழ்கின்றனர். பதிலாக ரஜோ, தமஸ் ஆகிய குணங்களை உடையவர்கள் தமது உயிரை பேணுவதற்கும் உடலை வளர்ப்பதற்கும் மாமிச பட்சணிகளாக மாறி இரைகளை கொன்று உண்கின்றார்கள்.

இவை யாவற்றிற்கும் அப்பால் இந்தப் பூவுலகில் வாழும் பொருட்டு இறைவன் அல்லது ஏதோ ஒரு சக்தி மனிதனுக்கு வழங்கிய உயிரை அவன் இன்று மிலேச்சத்தனமாக இரண்டு வழிகளில் அழித்து வருவது மிகவும் மனம் வருந்தத்தக்கதாகும். அவற்றில் ஒன்று கொலை , மற்றையது தற்கொலை!

முன்னாட்களில் அபூர்வமாக நடந்த கொலைகள் இப்போ பல்கி பெருகியுள்ளன. எம் முன்னாலேயே கொலைச்சம்பவங்கள் நடந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படியில்லாவிட்டாலும் இன்று 'சி.சி.ரி.வி' கமராவில் பல கொலைச்சம்பவங்கள் ஆதார பூர்வமாக பதியப்பட்டு இணையத்தில் உலா வருகின்றன.

நடைபெறும் ஒவ்வொரு கொலைகளுக்குமே ஏதோ ஒரு அடிப்படை காரணம் இருக்கவே செய்கின்றன. திட்டமிடாமலும் கைபிழைபாடாகவும் கூட கொலைகள் நடந்து விடுகின்றன. நோக்கமில்லாமலும் பிறரை பயமுறுத்தவுமென எடுக்கும் ஒரு நடவடிக்கை கொலையில் முடிந்து விடுகின்றது. இதனைத்தான் ' கைமோசக்கொலை' என்று சட்டம் கூறுகின்றது.

அனேகமான கொலைகள் குடும்ப சச்சரவுகள் காரணமாக நடந்தேறி விடுகின்றன. பரம்பரை பரம்பரையாக நல்ல உறவை பேணிவரும் சொந்தங்களிடையே உண்டாகும் உட்பூசல்கள் மற்றும் புதிய தலைமுறையினர் மூத்தோரை மதிக்காத தன்மைகள் குடும்பங்க ளிடையே விரிசலை உண்டு பண்ணி விடுகின்றது. அந்த விரிசலே ஈற்றில் கொலைக்கு காரணமாக அமைந்து விடுகின்றது!

வாய்த்தர்க்கம் முற்றுவதால் பல கொலைகள் நடந்தேறிவிடுகின்றன. ' யாகாவாராயினும் நாகாக்க காவாகால் சோகாப்பர் சொல்லிழுக் குபட்டு' என்பது திருக்குறள். அண்மையில் 'யாகாவாராயினும் நாகாக்க' என்று ஒரு திரைப்படம் வெளிவந்தது. நான்கு நண்பர்கள் தங்கள் கற்கை இறுதியில் ஆறுமாத காலத்தை சுதந்திரமாக கழிக்க திட்டமிடுகிறார்கள். அவர்களில் ஒருவன் தனது வாயால் வம்மை விலைக்கு வாங்குகின்றான். மற்ற நண்பர்கள் முயன்றும் தடுத்தும் அவன் கேட்கவில்லை. அதனால் அவர்கள் மீது ஒரு கொலைக்குற்றம் விழுகின்றது. அதிலிருந்து அவர்கள் மீள்வதற்கு

எடுக்கும் முயற்சிகள் பல வன்செயல்களுக்கும் அடிபிடி சண்டைகளுக்கும் காரணமாகின்றது.

அடுத்து, குடியும் போதையும் பல கொலைகளுக்கு காரணமாக உள்ளன. போதை , மனிதனின் சீரிய சிந்தனைக்கு தடையாக அமைந்துவிடுகின்றது. எது சரி... எது தவறு என்பதை புரிந்து கொள்ள முடியாத நிலை உருவாகின்றது. மற்றவர்களது புத்திமதியை ஏற்கவும் மனம் இடம் கொடுப்பதில்லை ஒரு கொலைச்சம்பவம் இடம்பெற்றால் குற்றவாளிகள் குடிபோதையில் இருந்ததாகவே விசாரணைகள் வெளிப்படுத்துகின்றன.

இனி, குடிபோதை ஒரு மனிதனின் தலைக்கேறியதும் அவனது பலவீனங்கள் செயல் உருப்பெறுகின்றன. அண்மையில் நடந்தேறிய வித்யா வல்லுறவும் கொலையும் மற்றும் சிறுமி சேயா வல்லுறவும் கொலையும் போன்றவை வெறி தலைக்கேறிய நிலையில் நடத்தப்பட்டவையே. வித்யா வழக்கு விசாரணைகள், குற்றவாளிகள் மூன்று நாட்கள் கேரளா கஞ்சா பாவித்த நிலையில் இருந்தார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன.

தாம்பத்திய துரோகங்கள் பல கொலைகளுக்கு காரணமாக இருந்துள்ளன. கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் துரோகம் செய்வதால் ஒருவர் மீது மற்றவருக்கு தீராத பகை உண்டாகின்றது. அதன் நிமித்தமாக பழிவாங்கும் உணர்வுகள். மேலோங்குவதுடன் தத்தம் இஷ்டங்களை நிறைவேற்றிக்கொள்ளும் திட்டங்களும் உருவாகின்றன. தத்தமக்கு சாதகமானவர்களது உதவியுடனோ ஒப்பந்த அடிப்படையில் பணத்தை கொடுத்தோ கொலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமது நாட்டின் தென்பகுதியில் உள்ள கிராம புறங்களில் படிப்பறிவற்ற குடும்பங்களில் இப்படியான சம்பவங்கள் அதிகளவில் நடந்தேறியுள்ளமையை பத்திரிகைகள் வாயிலாக அறியலாம்.

சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் எம்மக்களின் மனத்தில் நன்கு வேரூன்றி உள்ளன. அதனால் தமது பிள்ளைகள் தமது அந்தஸ்துக்கு குறைந்த இடத்தில் காதல் செய்தால் அல்லது விவாகம் முடித்தால் எதிர் தரப்பினரை பழிவாங்கும் உணர்வு விஸ்வரூபம் எடுக்கின்றது.

இந்தியாவில் இதனை முன்னிட்ட கொலைகள் நடந்தேறிக்கொண்டி ருக்கின்றன. அண்மையில் ஒரு தந்தை, தனது மகளை விவாகம் செய்த தலித் இளைஞனை நான்கு உறவு பையன்களை வைத்து பட்ட பகலில் ஜன திரளின் மத்தியில் வாளால் வெட்டி கொலை செய்த சம்பவம் தமிழகத்தில் இடம்பெற்றது.

இன்னும்.. பணகொடுக்கல் வாங்கல், திருட்டு சம்பவங்கள் காதலில் உண்டாகும் போட்டிகள், இன, மத குரோத நடவடிக்கைகள் பல கொலைகளுக்கு காரணமாய் அமைகின்றன.

மறு வளமாக தற்கொலைகளும் மனித உயிர்களை ஏராளமாக பறிப்பது கவலையளிப்பதாக உள்ளது.

தற்கொலைகளுக்கு பிரதான காரணம் என்று குறிப்பிடக்கூடியது காதல் விவகாரம் தான். காதல் தோல்வியை ஏற்கும் மனோ பாவம் எமது இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் அருகி வருகின்றது. எனவே அவர்கள் தற்கொலையை தெரிவுசெய்கின்றார்கள். அண்மையில் தெலுங்கு தொலைக்காட்சியான ஜெமினி மியூசிக்கில் நிகழ்ச்சி தொகுப்பாளரான அழகிய இளம் பெண் நிரோஷா புதுவிதமான முறையில் தற்கொலை செய்துள்ளார். அச்செய்தி இணையத்தில் கீழ் குறிப்பிடப்படும் தலைப்பில் வெளியானது.

'கனடாவில் இருந்து காதலர் கதற கதற ' ஸ்கைப்பில் தற் கொலையை 'லைவ்' (Live) செய்த தெலுங்கு 'டி.வி' தொகுப்பாளினி நிரோஷா!'

மனம் எப்படி பதைபதைக்கின்றது என்று பாருங்கள். காதலருக்கே அந்த நிலைமை என்றால் அன்பையும் பாசத்தையும் கலந்தூட்டி வளர்த்த பெற்றோரது நிலை எப்படி இருக்கும்! பிள்ளைகள் அவசரப்படாது சற்று சிந்திக்க வேண்டும்.

அண்மையில் சாய் பிரசாத் என்னும் சின்னத்திரை நடிகர் தற்கொலையை தெரிவுசெய்துள்ளார். அவர் முன்னர் ஒரு பெண்ணை திருமணம் செய்திருந்த நிலையில் மற்றொரு பெண்ணை காதலித்து கைப்பிடித்திருந்தார். தனது சாவிற்கு மனைவி காரணமல்ல என்று

தனது கடிதத்தில் எழுதியிருந்தால் கூட குடும்ப பிணக்கு அவரை மிகவும் வேதனையடைய செய்திருந்தது என்பதை புரிந்து கொள்ள முடிந்துள்ளது.

பலர் தீராத நோய்காரணமாக தற்கொலை செய்கின்றார்கள். நோய் குணமானபாடும் இல்லை... வாழவும் முடியாது. அதனால் கருணைக் கொலைக்கு விண்ணப்பிப்பவர்களும் உண்டு. அனுமதி கிடைக்காத வர்கள் தற்கொலையை தெரிவுசெய்கின்றார்கள்.

பல குடும்பங்களில் வருவாய் அற்ற நிலையில் பிள்ளைகளும் அதிகம் பேர் இருப்பார்கள். கணவனுக்கும் ஏதாவது நடந்துவிட்டிருக்கும். பசியும் பட்டினியும் தான் வாழ்கை என்றாகிவிட்ட நிலையில் அக்குடும்பம் தற்கொலையை தெரிவுசெய்கின்றது. நல்லிதயம் படைத்தவர்கள் இவர்களுக்கு ஆறுதலாக இருந்து இப்படியான தற்கொலைகள் இடம் பெறாதவாறு தடுக்கவேண்டும்.

தற்கொலை செய்பவர்கள் விடயத்தில் உள்ள பரிதாபம் என்ன வென்றால் அவர்கள் இளகிய இதயமுடையவர்களாக இருக்கின் றார்கள். தாம் விரும்பும் விடயத்தை நிறைவேற்றும் திராணி அற்ற நிலையில் அவர்கள் தம்மை தாமே பழிவாங்கிக் கொள்கின்றார்கள். மற்றொரு பக்கம் பார்ப்போமாயின் அவர்களது பிடிவாதமும் அவர்களை பழிவாங்கிவிடுகின்றது. 'என் புருஷன் எனக்கு மட்டும்' தான் என்று பிடிவாதம் பிடித்த பெண்கள் பலர் தற்கொலை செய்துள்ளனர்.

தற்கொலை செய்பவர்கள் சார்பாக ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். பல சந்தர்ப்பங்களில் தாம் தற்கொலை செய்துவிடப்போவதாக விரட்டுபவர்கள் அல்லது தற்கொலை செய்ய எத்தனிப்பவர்கள் என்றோ ஒருநாள் எம்மை ஆழாத்துயரில் ஆழ்த்திவிட்டு நிஜத்திலேயே தற்கொலை செய்து கொண்டு எம்மை விட்டுப் பிரியப்போவது மட்டும் உறுதி.!

மலைமுரசு வாரமலர் - 26.03.2016 01.04.2016

23

அன்னதானமும் சிரமதானமும்.

உலகிலேயே மிகச்சிறந்ததும் வேண்டப்படுவதுமாகிய தானம் அன்னதானமாகும்! இறைவன் உலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் நேரம் தவறாது உணவு படைக்கின்றான் என்றால் அது எம்மூலமேயாகும் என கொள்ளவேண்டும். ஓரிரு வருடங்களின் முன்னர் உலகிலேயே சிறந்த புகைப்படமாக ஒரு பச்சிளம் குழந்தை பசியில் துவண்டுபோயிருக்க கழுகு ஒன்று அந்த குழந்தையை இலக்கு வைத்து அமர்ந்திருக்கும் காட்சி. இது இணையத்தில் இடம் பிடித்திருந்தது. என்ன பரிதாபம்! அந்த குழந்தைக்கு என்ன நேர்ந்திருக்கும் என்பதை யூகிக்கலாம். ஒன்றில் கழுகு அக்குழந்தையை கொன்று பசியாறியிருக்கும். அன்றேல் குழந்தை பசியிலேயே இறந்து போயிருக்கும். அது பற்றி அறியக் கிடைக்கவில்லை. ஆனால் அந்த புகைப்படத்திற்காக பரிசு பெற்றவர் பின்னர் தான் அக் குழந்தையை காப்பாற்றவில்லையே என்று எண்ணி மனநோயாளியாகிவிட்டார்!

இறைவன் எம்மை இரண்டு கைகளுடனும் இரண்டு கால்களுடனும் வல்லவர்களாகவும் நல்லவர்களாகவும் படைத்திருப்பதற்கான காரணம் பசித்திருக்கும் மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் தானம் வழங்குமாறேயாகும். உலகில் எத்தனை இனங்கள் நாடுகள் பட்டினிச் சாவை எதிர்கொண்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். அது ஒரு பக்கம் இருக்க, எம்மை சுற்றி இருக்கும் எமது இன மக்களின், உறவுகளின் பட்டினிச் சாவை பற்றி நாம் எந்த அளவுக்கு அறிந்திருக்கின்றோம் என்று சிந்தித்திருக்கின்றோமா?

எம்மை ஆளாக்கிய பெற்றோர்கள் முதுமையில் அநாதரவாக வாழ்கின்றார்கள். எமது இன விடுதலைக்காக போராடிய மாவீரர் குடும்பங்கள் படும் துன்பமும் வேதனையும் சொல்லற்கரியன. எத்தனை குழந்தைகள் பெற்றோரை இழந்து கல்வியை இழந்து உடுப்பதற்கு

ஆடையின்றி தங்குமிட வசிதியின்றி அநாதை இல்லங்களில் சரணடைந்துள்ளார்கள். எம் இனத்திற்கான போராட்டத்தில் உடல் உறுப்புக்களை இழந்து தொழில் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டும் எந்த ஒரு வருவாயும் பிறர் ஆதரவும் இன்றி தவிக்கும் விடுதலை வீரர்களது நிலைமையை எண்ணிப்பாருங்கள்.

நாம் மூன்று நேரமும் ஒழுங்காக சாப்பிடுகிறோம் அல்லவா? அப்படியாயின் எமக்கு ஒரு கடமை இருக்கின்றது. அது பசித்திருப் போருக்கு அன்னதானம் வழங்குவதேயாகும்.!

தொண்டமானாறு சந்நிதி முருகன் கோவில் பற்றி அறியாதவர்கள் எவரும் இருக்க முடியாது. அங்கு தினமும் அன்னதானம் வழங்குகிறார்கள். சந்நிதி முருகனை அன்னதான முருகன் என்று பக்தர்கள் அன்புடன் அழைக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் பல பிரதேசங்களிலிருந்தும் நல்லிதயம் படைத்தவர்கள் அன்னதானம் கொடுக்கும் சகல ஆயத்தங்களுடனும் இச் சந்நிதானத்திற்கு குடும்ப சமேதரர்களாக வருகை தந்து தாமே சமைத்து உணவு பரிமாறுகின்றார்கள். பலர் தமது விருப்பம் நிறைவேற நேர்த்திக்கடன் வைத்து அது நிறைவேறியதும் அன்னதானம் கொடுத்து தமது வேண்டுதலை நிறைவேற்றுகின்றார்கள்.

நாம் ஒன்றும் அவ்வளவு தொலைதூரம் சென்று அன்னதானம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. எமது பிரதேசங்களிலேயே பல பிரசித்தி பெற்ற கோயில்கள் இருக்கவே செய்யும். அவற்றிற்கென மடங்களும் இருக்கும். மனம் மட்டும் இருந்தால் போதும். சிறிதளவு பணத்துடன் எமது முயற்சியும் சேர்ந்தால் பலரது பசியை போக்க முடியும்.

சிறுவர் இல்லங்களும் முதியோர் இல்லங்களும் இப்போ மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இருந்தாலும் பல பொதுமக்கள் பிறந்தநாள் விழா, சிரார்த்ததின நிகழ்வுகளை இந்த இல்லங்களில் வாழ்வோருடன் இணைந்து கொண்டாடுகின்றார்கள். வெளிநாடுகளில் இருந்து சில சமூக சிந்தனை வாதிகள் தமது உறவினர்கள் மூலம் அநாதை இல்லங்களில்

உள்ளோருக்கு மதிய உணவு இரவுச்சாப்பாடு என ஒழுங்கு செய்கின்றார்கள். அந்த உறவினர்கள் நேரடியாக சமைத்துப்போடவும் பங்குகொள்ளவும் செய்கின்றார்கள்.

உள்நாட்டில் உள்ள சில மகளிர் ஒன்று சேர்ந்து தாமே பணம் போட்டு உணவுப்பொருட்களை வாங்கி சமைத்து பசியால் துன்புறும் ஏழை மக்களை தேடிப்பிடித்து உணவு பரிமாறுகின்றார்கள். அவர்களுக்கு அது மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் ஆத்ம திருப்தியையும் அளிக்கின்றது.அண்மையில் முகநூலில் அப்படி ஒரு செய்தியையும் புகைப்படத்தையும் பார்க்கக்கூடியதாக இருந்தது...

சில குடும்பத்தவர்கள் தமக்கு சமைக்கும் உணவை அதிகமாக தயாரித்து தமது தேவைக்கு மேலதிகமான அனைத்தையும் பொதி செய்து வீதிகளில் இரந்து திரியும் ஏழைகளுக்கு பரிமாறுகின்றார்கள்.

இந்நாட்களில் பல குடும்பத்தினர் மேலதிக உணவுவகைகளை குளிரூட்டியில் பாதுகாத்து தமது அடுத்த நாட்தேவைகளுக்கு பயன் படுத்துகின்றார்கள். அது கவலையளிப்பதாகும். இந்நேர சாப்பாட்டிற்கே மக்கள் துன்புறும் போது நாம் எதிர்காலத்துக்கு சேமிப்பதென்பது ஒரு பதுக்கல் நடவடிக்கை என்றே எடுக்க வேண்டும்.

சில நாடுகளில் வீதியோரங்களில் பொது குளிரூட்டிகளை வைத்துள்ளார்கள். மேலதிக உணவுகளை அவற்றில் வைக்கலாம். உணவு இன்றி கஷ்டப்படுவோர் அவற்றை பயன்படுத்தலாம்.

உயிரினம் அனைத்துமே இயங்குவதற்கு காரணமாக இருப்பது உணவேயாகும். அந்த அடிப்படைத்தேவையை நிறைவேற்றிகொள்ள முடியாது பல மக்கள் துயருறுகின்றார்கள். அந்த துன்பத்தை துடைக்கும் கடன் எமக்கு உண்டு.

ஆரோக்கியமான வாழ்விற்கு உணவு எவ்வளவு அவசியமோ அதே போன்று நோயற்ற வாழ்விற்கு சுகாதாரம் அத்தியாவசியமாகும். எமது இல்லத்தை சுத்தமாக வைத்திருப்பதை நாம் எமது பொறுப்பாக எடுத்துக்கொள்கின்றோம். ஆனால் எமது சூழல் எப்பாடுபட்டு போனாலும் கவலை கொள்வதில்லை. அனேகமானோர் செய்யும்

பெரும் தவறு தமது வீட்டுக்கழிவுகளை எடுத்துச்சென்று அண்மையில் உள்ள பொது இடத்தில் கொட்டுவதாகும். மச்சம் மாமிசம் கழுவும் தண்ணீரை பலர் வடிகாலில் ஊற்றிவிடுவார்கள். வீடுகளும் நெருக்கமாக உள்ள பகுதிகளில் அவை தேங்கி நின்று நாற்றம் எடுக்கும். வீட்டில் வாசனை தரும் பூமரங்களை நாட்டுபவர்கள் வாசலில் மீன்தலையையும் மாமிச எலும்புகளையும் போட்டுவைப்பதால். நாய், காகம் போன்றவற்றின் அட்டகாசமும் சேர்ந்து ஆரோக்கியத்திற்கு பெரும் குந்தகமாக அமைந்துவிடுகின்றது.

சுகாதார பரிசோதகர்கள் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் வீடு வீடாக சென்று சுகாதார கேடான விடயங்களுக்கு தண்டம் விதிப்பதுடன் நீதி மன்றங்களில் வழக்கு தாக்கல் செய்கின்றார்கள். 'டெங்கு' நோய்க்கு மருந்து கிடையாது. அதனால் தான் அதற்கு காரணமான நுளம்பை பரவ விடாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. குடியிருப்புக்களில் அவை கட்டுப்பாட்டுக்குள் இருக்கலாம். ஆனால் பொது இடங்களில் நாம்தான் முன்வந்து சிரமதான அடிப்படையில் எமது சூழலை பாதுகாக்க வேண்டும்.

பாடசாலை மாணவர்களின் பெற்றோர் தவணை முறையில் சிரமதானத்திற்கு அழைக்கப்படுகின்றார்கள். 'டெங்கு' மாத்திரமல்ல... மலேரியா, யானைக்கால் போன்ற பல நோய்கள் நுளம்பினால் பரவுகின்றன. அதே நோய்கள் பிள்ளைகளுக்கு ஏற்பட்டு வைத்திய சாலையில் இருப்பதை காட்டிலும் சிரமதானம் மூலம் நோய்க்கான காரணியை அழித்துவிடுவது இலகுவல்லவா? அதனால்தான் பெற்றோரே தமது வேலைகளை ஒதுக்கிவைத்துவிட்டு முன்வந்து சிரமதான பணியில் ஈடுபடுகின்றார்கள்.

அதே போன்று பிள்ளைகள் அதிகமான நேரத்தை விளையாட்டு மைதானத்தில் செலவிடுகின்றார்கள். பாடசாலை ரியூசன் என்று ஓய்வு ஒழிச்சல் இல்லாத பிள்ளைகள் மைதானத்திற்கு வந்தவுடன் துடுப்பையும் பந்தையும் எடுத்துக்கொண்டு விளையாட்டில் குதித்துவிடுகின்றார்கள். மைதானத்தை சுற்றி புற்களும் பூண்டுகளும் காடும் இருக்கும். அவற்றை பெற்றோராகிய நாம் தான் சிரமதானம் மூலம் சுத்தப்படுத்தவேண்டும்.

வெற்றுக் காணிகள் யாருடைய கண்காணிப்பும் இன்றி காடாக காட்சிதரும். அயலவர்கள் தமது நன்மை கருதி சிரமதானம் மூலம் சுத்தம் செய்வது நல்லது.

நாம் எல்லோரும் கூடும் இடம் கோவில். மனதால் கடவுளிடம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என ஆராதிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். கோயில் வீதியை பக்தர்களாகிய நாம் சிரமதானம் மூலம் சுத்தம் செய்வது நேரடியான பயனை தருமல்லவா? பட்டுவேட்டி , பட்டுசேலை கட்டிக்கொண்டு அழகாக கோயிலுக்கு போவது ஒரு புறமிருக்கட்டும் எமது ஆரோகியத்தையும் நாம் பேண வேண்டு மல்லவா?

சிரமதானம் செய்வதையிட்டு நாம் வெட்கமடைய ஒன்றுமில்லை. மயானங்களில் சாதாரணமாகவே காடு மண்டி இருக்கும். கால் வைக்கமுடியாதபடி முட்செடிகள் வளர்ந்திருக்கும். மாதத்திற்கு ஒருவரோ இருவரோ எமக்கு தெரிந்தவர் அல்லது உறவினர் இறக்க கூடும். நாமும் மயானத்திற்கு செல்லவேண்டி இருக்கும். பொதுமக்கள் நாம்தான் சிரமதானம் மூலம் மயானத்தை சுத்திகரிக்கவேண்டும்.

வயோதிபர் இல்லங்களில் வாழ்வது எமது உறவுகள் என்று சொல்லக் கூச்சப்பட்டாலும் அவர்களே எம்மை ஆளாக்கிய மனிதர்கள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். வயோதிபர் இல்லங்களில் சேவை நோக்குடன் பணி புரிவர்கள் அரிதாகவே இருப்பர். நாளை எமக்கும் இந்த நிலை வரலாம் என்பதை புரிந்து கொண்டு எம்மால் இயன்ற நேரங்களில் எமது உறவுகளுக்கு சிரமதான பணி செய்ய வேண்டும்.அவர்களை குளிப்பாட்டி உடைமாற்றி உணவு ஊட்டி விடுவோமாயின் அவர்கள் மகிழ்ந்து போவார்கள்!

சேவை செய்வதைக்காட்டிலும் உலகில் வேறு என்ன புண்ணிய காரியம் இருக்கின்றது... நாம் கடவுளை நம்புபவர்கள்தாம். அதேசமயம் நாம் ஏழைகளுக்கு அன்னதானமும் சிரமதானமும் புரிபவர்களாக இருந்தால் அவர்கள் எம்மை கடவுளுக்கு நிகராக வைத்துப் போற்றுவர்!

மலைமுரசு வாரமலர் – 02.04.2016 08.04.2016

24

மாதரும் மன ஓர்மமும்.

இன்று நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றியும் பாலியல் வல்லுறவுகள் குறித்தும் பொலிசாராலும் பொதுமக்களாலும் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. தீர்ப்புகளும் மிகவும் காரசாரமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. ஆனாலும் குற்றச்செயல்களோ குறைந்தபாடாக இல்லை! இதில் பாதிக்கப்பட்ட வர்களாக ஐந்து வயது சிறுமி முதல் ஐம்பது வயதை கடந்த மெல்லியலாளர் வரை உள்ளோரை குறிப்பிடலாம். அதே சமயம் இந்த குற்ற செயல்களை புரிபவர்களாக பதின்ம வயது சிறுவர் முதல் இளைஞர்கள், நடுத்தர வயதினர், விவாகம் புரிந்தோர் முதியோர் என்று பட்டியல் நீண்டு கொண்டு போகின்றது.

நீதிமன்றங்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ,பாலியல் அத்துமீறல்கள் கொலைகள் ஆகியவற்றை புரிவோரை தடுப்பு காவலில் வைத்து விசாரிக்கின்றன. ஆயுள் தண்டனை என்றும் மரண தண்டனை என்றும் தீர்ப்புக்கள் வழங்குகின்றனர். ஊடகங்கள் அதிலும் தொலைக்காட்சி, இணையம் போன்றன சம்பந்தப்பட்ட வர்களின் படங்களையும் வீடியோக்களையும் ஒளிபரப்பி நாறடிக் கின்றன. இவற்றை பார்ப்பவர்களுக்கு நெஞ்சில் கிலி உண்டாக வேண்டும். ஆனால் அதுதான் கிடையாது...

பதிலுக்கு மேலும் மேலும் சிறுமிகளையும் பாடசாலை மாணவிகளையும் இளம் யுவதிகளையும் கடத்திச்சென்று அவர்களை சீரழிப்பதும் கொலைசெய்வதும் என்று குற்றச்செயல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அப்படியென்றால் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படும் சம்பவங்கள் அபூர்வமாகவும் தப்பித்துக்கொள்வோர் தொகை அதிகமாகவும் இருக்கின்றது என்று முடிவெடுக்க வேண்டியுள்ளதா? நாமும் எமது இச்சையை தீர்த்த

பின்னர் ஏதோ ஒரு வழியில் தப்பித்துக் கொள்ள முடியாமலா போய்விடப்போகின்றது என்கின்ற நம்பிக்கைதான் பலரை மீண்டும் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுத்துகின்றது போலும்!

இந்த நிலையை போராட்ட காலத்துடன் சற்று உற்றுப்பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். பெண்கள் சுதந்திரமாக சுற்றித்திரிந்தார்கள். போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்டார்கள். அச்சம் , மடம் , நாணம், பயிர்ப்பு ஆகிய குணாம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் தமது பலத்தை மேம்படுத்திக்கொண்டார்கள். பிரச்சனைகளையும் ஆபத்துக்களையும் எதிர்கொள்ள தயாராக இருந்தார்கள். காதல், விவாகம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மேலான ஒரு கொள்கை மீது சுதந்திர வேட்கை மீது பற்றுக் கொண்டு களத்தில் இறங்கினார்கள். சக ஆண் போராளிகள் அவர்களை மதித்தது மட்டுமன்றி உறுதுணையாகவும் இருந்தார்கள். காமபசி கொண்டவர்கள் கூடஅச்சம் கொண்டவர்களாக பெண்களுக்கு உரிய மரியாதை அளித்தார்கள். தாம் மின்கம்பங்களில் கட்டப்பட்டு தண்டிக்கப்படலாம் என்ற அச்சம் காடையர்களுக்கு இருந்தது. அதனால் வலலுறவு என்ற பேச்சுக்கே இடமிருக்கவில்லை!

இந்த நிலையை வெளிநாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் அங்கு ஆண் பெண் பாலாருக்கு திறந்த பாலியல் சுதந்திரம் காணப்படுவ தொன்றே பாலியல் வல்லுறவு சம்பவங்கள் தவிர்க்கப்படுவதற்கு காரணமாக இருக்கின்றது. பாடசாலையில் படிக்கும் போதே மாணவ மாணவிகள கருத்தடை சாதனங்களை பயன்படுத்தவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றார்கள். ஒரு ஆணோ பெண்ணோ விவாகம் செய்யாமலே கணவன் மனைவியாக வாழ்ந்து பார்க்கிறார்கள். அந்த வாழ்க்கையில் திருப்தி இல்லாவிட்டால் தெரிந்தெடுத்த துணைவியை கைகழுவிவிட்டு புதிய துணையை தேடிக்கொள்ள முடியும். இனி விவாகரத்து என்பது எமது நாட்டில், கலாச்சாரத்தில் போல் கடுமையானதல்ல.

எமது அண்டை நாடான இந்தியா அப்படி ஒரு கலாச்சாரத்தை கடைப்பிடிக்காவிட்டாலும் கூட அங்கு காம பசிக்கு வடிகாலாக சிகப்பு விளக்கு பகுதிகள் போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிலையங்கள்

சுதந்திரமாக இயங்குகின்றன. இன்னும் சொல்லப்போனால் ஏழ்மை காரணமாக பல பெண்கள் தாமாகவே இரவில் தெருவிற்கு வந்து தம்மை விற்கின்றார்கள். மலேசியா, சிங்கப்பூர் போன்ற அதி நாகரீக வளர்ச்சி கண்ட நாடுகளில் பெண்கள் காட்சி அறைகளில் வாடிக்கையாளர்களுக்காக காத்திருக்கின்றார்கள். 'நான் அழகானவள். என்னிடம் வாருங்கள்' என்று சந்தைப் பொருள்களை கூவி விற்பது போல தம்மை விற்கின்றார்கள். அங்கெல்லாம் வல்லுறவை அடுத்த கோணத்தில்தான் நோக்கவேண்டியுள்ளது!

இந்திய தமிழ் சினிமா படங்களை அவதானித்தால் ஒரு உண்மையை புரிந்துகொள்ள முடியும். அப்படங்களில் கதாநாயகன் ஒரு பெண்ணை காதலிப்பான்: வில்லன் அவளை அடைய முயற்சிப்பான். இதுவே பிரதான கதையோட்டமாக இருக்கும். அல்லாமல் எந்த இளைஞனாவது பெண்களை கடத்திச்சென்று பாலியல் வல்லுறவில் ஈடுபடுவது போன்று கதைகள் அமைவதில்லை. அதற்கு காரணம் அங்கு பாலியல் காரணங்களுக்காக பெண்களை அடைந்து கொள்வதில் சிரமம் எதுவும் இல்லை! பணம் மட்டும் இருந்தால் போதுமானது.

இலங்கையை எடுத்துக்கொண்டால் தலைநகரிலும் வேறு பிரதேசங்களிலும் 'மஸாச்' நிலையங்கள் அமைந்துள்ளன. இவற்றில் கிராமபுற இளம் பெண்களும் வெளிநாட்டு பெண்களும் பணிபுரிகின்றார்கள். இந்த நிலையங்கள் தாம் அமைக்கப்பட்ட நோக்கத்திற்கு அப்பாலும் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதால் பல நேரங்களில் பொலிஸாரின் சுற்றிவளைப்பிற்கு உட்படுகின்றன. அதற்கு அப்பால் சுற்றுலா பயணிகள் நலனை முன்னிட்டு அமைக்கபட்டுள்ள பல விடுதிகள் விவாகமாகாத பல இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் உயர்ந்த வாடகையில் அறைகளை வழங்குகின்றன. யுத்த பாதிப்புக் குள்ளான கிளிநொச்சி , யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் மிகுந்த செல்வாக்குடன் அமைக்கப்பட்டுள்ள விடுதிகளில் சிங்கள பெண்களும் தமிழ் பெண்களும் பணி நிமித்தம் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் செய்யும் சேவைக்கு ஏற்ப நாட்சம்பளங்களும் குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

எப்படிப்பார்தாலும் இலங்கையை பொறுத்தவரை பாலியல் வல்லுறவு களை தடுப்பதற்கு சட்டம், ஒழுங்கு, தண்டனை ஆகியவற்றிற்கு அப்பால் மேலே விபரிக்கப்பட்ட காரணிகளும் கூட கைகொடுக்க வில்லை. ஒரு வேளை அந்த இடங்கள் அதிக பணசெலவை உண்டுபண்ணுவதாக இருக்கலாம் என்று எண்ணுவதற்கும் இடமில்லை. அண்மையில் சுவிஸில் இருந்து விடுமுறையில் வந்த ஒரு நபர் பாலியல் வல்லுறவு சம்பவத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் நினைத்திருந்தால் பணத்தை தூக்கியெறிந்து இன்பம் துயத்திருக்கலாம். விடுமுறை முடிவில் சுவிஸிற்கும் திரும்பியிருக்கலாம். அவர் அப்படி செய்யவில்லை. இங்குதான் போதைவஸ்து எப்படி பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு தூபமிடுகின்றதென சிந்திக்க வேண்டியுள்ளது.

எமது கலாச்சாரம் ஒரு வகையில் இளைஞர்களை கெடுத்து வைத்திருக்கின்றது. ஒரு நிகழ்ச்சியில்... வைபவத்தில் சிறிதளவு மது அருந்தமாட்டார்கள். ஆனால் மறைவில் போத்தல்களை காலி செய்துவிடுவார்கள். அதே போன்று விபச்சார விடுதிகளுக்கு போவது பெரும் அவமானம் என கருதும் இளைஞர்கள் எவருக்கும் தெரியவாராது என்ற நம்பிக்கையில் நண்பர்களுடன் இணைந்து பாலியல் வல்லுறவு புரிவதற்கு முன்வருவர்.தம்மை காட்டிக்கொடுக்க மாட்டார் என்று எவர் மீது நம்பிக்கை வைக்கிறார்களோ அவர்களாலேயே தாம் காட்டிக்கொடுக்கப்படப் போவதை அவர் அறிந்திலர்!

டெல்லியில் இரவு நேர பயணத்தின்போது ஒரு மாணவிமேல் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வல்லுறவில் பலர் சம்மந்தப்பட்டனர். அதே சமயம் ஒரு பதின்ம வயது சிறுவனும் அச்சம்பவத்துடன் தொடர்பு கொண்டுள்ளான். பல குற்றச்செயல்கள் சம்பவிக்கும் போது அவை எவருக்கும் தெரியவராது என்ற நம்பிக்கையில் தான் நடந்தேறுகின்றன் ஆனால் இறைவனின் நியதி எந்த ஒரு குற்றவாளியும் ஏதோ ஒரு தடயத்தை விட்டே செல்கின்றான். மேற் குறிப்பிட்ட சம்பவத்தில் தொடர்புபட்ட அனைவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. சிறுவனின் வயதை கருத்தில் கொண்டு அவனுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது.

எந்த ஒரு பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு தவறாக வழி காட்டமாட்டார். ஒவ்வொரு தந்தையும் தம் ஆண்பிள்ளைகளுக்கு பிற பெண்பிள்ளைகளுடன் நடந்து கொள்ளவேண்டிய முறை பற்றி கட்டாயமாக எடுத்துரைக்கவே செய்திருப்பார்.அன்னை அதற்கும் மேலாக புத்திமதிகளை உரைத்திருப்பார்

எமது சமயம் காமத்தை எப்படி கட்டுப்படுத்துவது என்பது பற்றி கற்றுத்தந்துள்ளது. உப்பு , காரம், புளி போன்றவை காம ஆசையை தூண்டுவன. அவற்றை தவிர்க்க வேண்டும். யோகா எமது உடலை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அதிக துணை புரிகின்றது. தியானம் எமது மனதை கட்டுப்படுத்துகின்றது. முனிவர்களும் , ரிஷிகளும் பிரமச்சரியத்தை காத்து எமக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றாகள்.

எமது நாட்டில் இன்று நடைமுறையில் உள்ள சட்டம், ஒழுங்கு தண்டனைகளால் பாலியல் வல்லுறவுகள் குறைவடையவில்லை. பெண்கள் மீதான அத்துமீறல்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. அதே போன்று பாலியல் சுதந்திரம் , கட்டுப்பாடான கலாச்சாரம் , மத பிரச்சாரம் ஆகியவை கூட பெண்கள் மீதான வன்முறையை முடிவுக்கு கொண்டுவரவில்லை.

சொல்லப்போனால் சில சம்பவங்களை நோக்கும்போது பெண்கள், கடவுளது ஆதரவும் இன்றி அநாதரவான நிலையில் உள்ளார்கள் என்றே கருத வேண்டியுள்ளது.

இந் நிலையில் யுத்தம் இன்று முடிவடைந்தாலும். யுத்தகால போராளிகளின் மன ஓர்மத்துடனும் ஐக்கியத்துடனும் பெண்கள் சமூகத்தை எதிர்கொள்வதொன்றே அவர்கள் மீதான வன்முறைகளுக்கு தீர்வாக அமையும்!

மலைமுரசு வாரமலர் - 09.04.2016 15.04.2016

25

சமூக நோக்கு.

எம்மில் பலரிடம் அருகிக்காணப்படும் ஒரு மனப்பாங்கு சமூகம் பற்றிய சிந்தனை அல்லது நோக்கு. நாம் கவலைப்படுவதெல்லாம் பெற்றோர் - பிள்ளைகள் , கணவன் மனைவி , சகோதர சகோதரி என்கின்ற எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகின்றது. ஊர் உலகம் பற்றிய சிந்தனை அறவே கிடையாது.

உண்மையில் சமூக நோக்குடன் வாழ்ந்தவர்களே பெரும் தலைவர்களாக உருவாகியிருக்கின்றார்கள். மனித குல வரலாற்றில் சரித்திரம் படைத்த ஒவ்வொருவருமே சமூக நோக்கை முன்னிறுத்தி வாழ்ந்தவர்களே . அவர்கள் தம்மை பற்றியோ தமது பெற்றோர் மனைவி பிள்ளைகள் பற்றியோ கவலைப்பட்டதில்லை. அவர்களுடைய சிந்தனை முழுவதும் நலிவடைந்த சமூகத்தை பற்றியதாகவே இருந்தது. .

எம்மில் அதிகம் பேர் என்ன செய்கின்றோம்? எமது முழு சிந்தனையும் எம்மை பற்றியதாகவே இருக்கும். அதன் பின்னர் மனைவி பிள்ளைகள். இந்நாட்களில் பலர் பெற்றோரைக்கூட வயோதிபர் இல்லங்களில் சேர்த்துவிட்டு. ஹாயாக இருக்க துணிந்து விட்டார்கள். காலையில் எழுந்ததும் முன்பெல்லாம் புதினப்பத்திரிகை படிப்பது போல இப்போ பலர் முகநூலில்தான் துயிலெழுந்து விழிக்கின்றார்கள். 'வாட்ஸ் அப்', 'ருவிட்டர்', 'யூரியூப்' ஆகியவற்றில் ஆர்வம் வந்து விட்டது!

சொல்லப்போனால் புதினங்களை அறிவதில் தான் எமது ஆர்வம் அதிகரித்துள்ளது. எங்கே கொள்ளை சம்பவங்கள் நடந்துள்ளன? சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்களா? பொதுமக்களுக்கு காயம் ஏதும் ஏற்பட்டதா? இவைபற்றி அறிவதிலேயே எமக்கு நாட்டம் அதிகம் இருக்கும். எமது அயல் வீட்டில்தான் கொள்ளை நடந்திருக்கவும் கூடும்.

பெண்கள் பிள்ளைகள் கூக்குரல் இட்டு அழுது குளறியிருப்பார்கள். நாம் எமது வீட்டில் மின்விளக்கு ஏதாவது எரிந்துகொண்டிருந்தால் கூட அதனையும் அணைத்துவிட்டு குழந்தைகள் பிள்ளைகள் யாராவது இருந்தால் அவர்களை வெருட்டி அழுது குரல் காட்டவேண்டாம் என்று எச்சரித்தும் விட்டு பாதுகாப்பாக இருந்து விடுவோம்!அயல் வீட்டுக்காரனுக்கு எது நடந்தால் எமக்கென்ன என்கின்ற மனோபாவம்!

இனி , பாலியல் வல்லுறவு சம்மந்தப்பட்ட செய்திகள் படங்களை தவிர்த்து யாராவது முகநூல் பார்க்கின்றார்களா? அச்சம்பவங்களை பெயருக்கு மற்றவர்கள் முன் சாடுவதை தவிர எதிர்த்து நடவடிக்கையில் இறங்கும் தீரம் கிடையாது. எங்கே... சமபந்தப்பட்ட பெண்ணின் பெற்றோரை சந்தித்து நீதிமன்ற விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க யாராவது தயாரா? இல்லை ! ஆனால் நீதி மன்ற விசாரணைகள் பற்றி முகநூலில் தொடர்ந்து வரும் செய்திகளை வாசிக்க தவறுவதில்லை!

இனி அரச அதிகாரிகள் பலர் மக்களின் சேவையை முன்னிட்டு சம்பளம் வழங்கி நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வகையில் பொலிசார் , நீதிவான்கள் , சட்டத்தரணிகள் , ஆகியோரின் சேவைகள் மிக மிக அத்தியாவசியமானது. சம்பளத்திற்காக அல்லாமல் சமூக நோக்குடன் பணிபுரிபவர்களால்தான் பாதிப்புக்குள்ளானோருக்கு அதிகளவு சேவை செய்ய முடியும். .

சமூக நோக்குடன் சேவையில் ஈடுபடும் பொலிஸாரால் தான் குற்ற செயல்கள் நடைபெறாமல் தடுக்க முடியும். பொலிஸ் நிலைய பதிவேடுகள் எங்கெங்கு எவ்வகையான குற்றச் சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பதை விலாவாரியாக வெளிப்படுத்தும். அப்பிரதேசங்களை பொலிசார் தமது கண்காணிப்பின் கீழ் வைத்திருக்க வேண்டும். இரவு நேரங்களில் நடந்தும் துவிச்சக்கர வண்டிகளிலும் வாகனங்களிலும் ரோந்து போக வேண்டும். இரவு பத்து மணிக்கு பின்னரும் அதிகாலை நான்கு மணிக்கு முன்னருமான நேரத்தில் பயணிக்கும் வாகனங்களை மறித்து சோதனையிட வேண்டும்.

பொலிஸாருக்கு ஒரு இடத்தில் களவு , சண்டை, ஆட்கடத்தல் நிகழ்வது பற்றி தொலைபேசி மூலம் அழைப்பு வந்தால் காலம்

தாழ்த்தாது அந்த இடங்களை சுற்றிவளைக்க வேண்டும். அப்படி செய்தால் நாளாவட்டத்தில் குற்ற செயல்களில் ஈடுபடுவோர் பயந்து ஒதுங்குவர்.

குற்றவாளிகள் எப்போதும் தமக்கு சார்பாக பொலிஸாரைத் திருப்புவதற்கு அரசியல் செல்வாக்கை பயன்படுத்த முனைவர். அதே போன்று பணத்தை அள்ளி வீசவும் முன் வருவர். உண்மையான சமூக நோக்கு உள்ள பொலிசார் அவற்றிற்கெல்லாம் அடிபணிய மாட்டார்.

அடுத்து நீதிவான்கள் நடுவு நிலைமையுடனும் வழக்கை நீடிக்க விடாமலும் விசாரணைகளுக்கான திகதிகளை முன்வைக்கவேண்டும். பொலிசார் குற்ற செயல்களுக்கான தடயங்களை விரைந்து சமர்ப்பிக்கின்றார்களா என்பதை அவதானிக்க வேண்டும். அண்மையில் கொடுரமாக நடந்தேறிய ஒரு வல்லுறவுச் சம்பவம் சார்ந்த மரபணு பரிசோதனை அறிக்கை ஒரு வருட காலம் முற்றுப்பெற்ற நிலையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. இது தொடர்பாக பொலிசாரை மட்டும் விசாரித்துக் கொண்டிருக்காமல் மரபணு பரிசோதனை நடாத்தும் நிறுவனத்துடனும் நேரடியாக தொடர்பு கொண்டு அறிக்கையை பெறவேண்டியது கட்டாயமல்லவா? இந்த விடயத்தில் நீதிவான்களுக்கு முழு அதிகாரம் இருக்கும் என்றே மக்கள் நம்புவர்.!

அடுத்து சட்டத்தரணிகள் தாம் வாதாட பொறுப்பெடுக்கும் வழக்குகளை சமூக நோக்குடன் அவதானித்து பாரம் எடுப்பது நல்லது. குற்றவாளிகள் எப்போதும் தாம் தப்புவதற்காக பெருமளவான பணத்தை வழங்க முன்வருவார். சட்டத்தரணிகள் உண்மையை வெளிக்கொணர்வதற்காக வழக்காளி பக்கமும் எதிராளி தரப்பிலும் வாதாடுவதில் தப்பு இல்லை. அதிலும் கட்டாயம் சமூக நோக்கு இருக்க வேண்டும். ஒரு குற்றச் செயலுக்கு பொது மக்களின் கண்கண்ட சாட்சியம் வெளிப்படையாக இருக்கும்போது, எதிராளி தரப்பில் வாதாடும் சில சட்டத்தரணிகள் பாதிப்புக்குள்ளானோரின் துன்ப துயரங்களை பொருட்படுத்தாது பொய் ஆதாரங்களையும் தடயங்களையும் முன்வைத்து வழக்கை உடைப்பதானது சமூக நோக்கற்ற செயல் என்றே கருத வேண்டும்.

இனி சமூகத்திற்கு அதிக அளவில் சேவையாற்ற கூடியவர்கள். அரசியல் வாதிகள் ஆவர். பல நாடுகளில் தன்னலமற்ற அரசியல் வாதிகள் மக்களுக்கும் நாட்டுக்கும் பெரும் சேவையாற்றி பெயர் பெற்றிருக்கின்றார்கள். எமது நாட்டில் அரசியல் வாதிகள் மக்களால் தெரிவுசெய்யப்படுகின்றார்கள். அரசியல் வாதிகளுக்கு என்று கல்வித்தரம் எதுவும் விதிக்கப்படவில்லை. அவர்கள் சமூக நோக்கு உடையவர்களா என்பதை தீர்மானிக்கும் சரியான சக்தி எதுவும் கிடையாது. எமது நாட்டின் மக்களில் பெரும்பான்மையானோர் குறைந்த கல்வியறிவுடன் காணப்படுகின்றார்கள். அவர்களை மதம் மொழி என்று பூச்சாண்டி காட்டி எவர் சார்பாகவும் எக்கட்சியின் பொருட்டும் திசை திருப்ப முடியும்...!பணம் மது ஆகியவற்றிற்கு விலை போகின்றவர்களும் பல பேர் இருக்கவே செய்கின்றனர். இக்காரணிகளே எம் நாட்டில் சமூக நோக்குடனான அரசியல்வாதிகள் தோன்றாமைக்கு காரணங்களாகும்.

அண்மையில் மூன்றாம் உலக மகாயுத்தம் ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கின்றதா என்று இணையத்தில் தேடிப்பார்த்தேன்... மதம் சார்ந்த கோஷங்களே மற்றொரு உலக மகா யுத்தத்திற்கு தூபமிடப் போதுமானது என கருத்துரைக்கப்பட்டிருந்தது.

எமது நாட்டிலும் சமூக நோக்கு அப்படித்தான் மதம் காரணமாக பாழ்பட்டுக்கிடக்கின்றது.

பெரும்பான்மையான அரசியல் வாதிகள் பணம் சம்பாதிப்பதை நோக்கமாக கொண்டே பாராளுமன்றத்திற்கு வந்திருக்கின்றார்கள். அமைச்சு பதவிகளுக்கு அடிபடுகின்றார்கள். 2016 மாசி 07ம் திகதியன்று புதிய அரசாங்கத்தின் கீழ் நிதி குற்ற புலனாய்பு பிரிவு அமைக்கபட்டுள்ளது.பல முன்னாள் அரசியல் வாதிகள் நிதி சார்ந்த மோசடிகளை முன்னிட்டு இங்கு விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவது இணையத்திலும் பத்திரிக்கைகளிலும் பரபரப்பு செய்தியாக பிரசுரமாகின்றது. பல நாடுகளில் உள்ள வங்கிகளில் அவர்கள் பணம் வைப்பு செய்துள்ளமை வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

இனி அரசியல் வாதிகளுக்கு மேலதிகமாக பல அரசியல் கட்சிகள் எம்நாட்டில் இருக்கின்றன. அவற்றினது சமூக நோக்கு பெரும்

கவலையளிப்பதாகவே உள்ளது.பெரும்பான்மையான கட்சிகள் சிறுபான்மை இனங்களை நசுக்கும் நோக்கையே தமது இலட்சியமாக கொண்டுள்ளன.

அமெரிக்க அரசியலை சற்று எடுத்து நோக்குங்கள். அங்கு ஒரு அரசியல் கட்சி மக்களின் சமூக நோக்கு மீது நம்பிக்கை வைத்து பராக் ஓபாமா என்ற கறுப்பு இனத்தவரை தமது ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தியது. அமெரிக்க மக்களும் பரந்த சமூக நோக்குடன் , ஜனாதிபதியாக வருவதற்கு அவருக்குள்ள தகுதியை கருத்தில் கொண்டு வாக்களித்தனர்.அவரும் வெற்றி பெற்றார்! இன்று அமெரிக்காவை துக்கி எறிந்துவிட்டு அரசியல் நடத்தும் தைரியம் உலகில் முன்னணி வகிக்கும் எந்த நாட்டுக்கும் கிடையாது. அமெரிக்கா என்கின்ற ஜனநாயக நாடு அவரது தலைமைத்துவத்தின் கீழ் வெற்றி நடை போடுகின்றது!

சமூக நோக்கு என்பதன் பலம் எப்படியானது என்பதை எமது அரசியல் வாதிகள் என்று உணர்வார்களோ அன்றுதான் எமது நாட்டுக்கு விடிவு கிட்டும்!

மலைமுரசு வாரமலர் - 16.04.2016 22.04.2016

26

ஜனனம் திட்டமிடப்பட்டதா ? விபத்தா ?

மக்கள் உட்பட உயிரினங்கள் உருவானது நன்கு திட்டமிடப்பட்ட ஒரு செயலா... அல்லது விபத்தா? விஞ்ஞானிகளுக்கு கூட அதுபற்றிய உண்மை முடிவெடுக்க முடியாத ஒரு புதிராகவே இருந்து வருகின்றது. விண்வெளியை நோக்கிய அவர்களது நீண்ட பயணத்தில் பிற கோள்களில் அவர்களால் கால் பதிக்க முடிந்திருக்கின்றது. அல்லது ஆய்வு ஓடங்களை தரையிறக்க முடிந்திருக்கின்றது. ஆனால் முன்னர் குறிப்பிட்ட ஐயத்தை தீர்ப்பதற்கான எந்த துப்பும் கிடைக்க வில்லை.

உயிரினத்தின் தோற்றம் நன்கு திட்டமிடப்பட்ட செயல் என கருதின் எல்லாமே நிறைவாக (perfect) இருக்க வேண்டும். ஒரு குறையும் இருக்கக் கூடாது. உயிரினத்தின் தோற்றம் ஒரு விபத்து என கருதின் எல்லாமே இதுவரையில் தலைகீழாக போய் அழிந்திருக்கும்!

சிந்தித்துப்பார்த்தால் உயிரினத்தின் தோற்றம் சவால்களுடன் கூடிய நன்கு திட்டமிடப்பட்ட செயல் என்றே கருத வேண்டும் போல் உள்ளது!

மனிதன் உட்பட உயிரினம் எதிர்கொள்ளும் முதலாவதும் மிகப் பெரியதுமான சவால் பசி! எத்தனை நாடுகள்... எத்தனை சமூகங்கள்.... எத்தனை மனிதர்கள்... பெண்கள்... குழந்தைகள் பட்டினியால் இறக்கின்றார்கள். சுவாசிப்பதற்கு காற்று இல்லையாயின் உயிரினங்கள் நீடிக்க முடியாது என்பதை கணக்கிட்டு காற்று மண்டலத்தையே அமைத்த சக்தி.... குடிக்க நீரில்லையாயின் உடலே கருகிவிடும் என்பதை உணர்ந்து உலகின் மூன்றின் இரண்டு பகுதியை நீருக்காக ஒதுக்கிய சக்தி... ஏன் பசிக்கு மட்டும் போதுமானதும் இலகுவில் கிடைக்கக்கூடியதுமான உணவை வழங்கும் ஏற்பாட்டை செய்யவில்லை?

. அது வெறுமனே ஒரு சாவல்தான்! கருவில் உள்ள குழந்தை பத்துமாத நிறைவில் பிறக்கும்போது அதன் பசிக்கு தாயின் மார்பில் பாலை முன்கூட்டியே வைத்த சக்தியின் ஆற்றல் பற்றி என்ன கூறுவது... இங்கு இரு விடயங்களை நோக்க வேண்டியுள்ளது. ஒன்று உயிரினம் கருவில் உருவாவது. மற்றது அதற்கான உணவு. இரண்டுமே நன்கு திட்டமிடப்பட்டிருக்கின்றது. என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.!

காற்றையும் நீரையும் போல உணவும் தொடர்ந்து இலகுவாக கிடைப்பதாக இருக்குமானால் உயிரினம் எந்த செயற்பாடும் இல்லாமல் அனைத்து பிரசாதங்களையும் எதிர்பார்த்து ஒதுங்கியிருந்துவிடும். ஏதோ ஒரு தேவையை அது நீராகவோ காற்றாகவோ உணவாகவோ இருந்தால் மட்டுமே உயிரினம் அந்த ஏதோ ஒன்றுக்காகவே சுறுசுறுப்பாக செயற்படதொடங்கும்.

அப்படிப்பார்க்கும் போது நீர் , நிலம் , தீ , காற்று , ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களை அடிப்படையாக கொண்டு மனித முயற்சியினால் தேடக்கூடிய உணவின் அவசியம் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்ட ஒரு செயலேயாகும். பஞ்ச பூதங்கள் என்ற பெயரில் அனைத்து வளங்களும் தரப்பட்டுள்ளன. நாற்றுக்களும் விதைகளும் விருட்சங்களும் ஏற்கனவே உள்ளன. மனிதனின் சிறு முயற்சி போதும் போதிய உணவை உற்பத்தி செய்ய.

அமெரிக்காவில் அதிக அளவில் கோதுமை பயிர்செய்யப்படுகின்றது. சீனா , இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் அரிசி அதிக அளவில் பயிர்செய்யப்படுகின்றது.

அந்நாட்களில் உலக நாகரீகம் நதியோரங்களில் அமைந்ததற்கு முதற்காரணம் உணவை முன்னிட்ட கரிசனையே. மனிதனின் வயிற்று பசி நீக்கப்பட்டதும் அவன் கட்டிடக்கலை, வடிகாலமைப்பு, வீதி , கலை , ஆகிய பிரதான துறைகளில் கவனத்தை செலுத்தினான். சுகாதாரம் பேணப்பட்டது. சிந்து நாகரீகம் போன்றவை அப்படித்தான் வரலாற்றில் இடம் பிடித்தன.

சிந்தித்துப்பார்த்தால் உயிரினங்களுக்கு பசி ஒரு குறைபாடு அல்ல. சரியான முயற்சியெடுத்தால் பசியால் எவரும் வாடவோ உயிர் துறக்கவோ நேரிடாது.

எமது தவறான நடவடிக்கை தான் எமக்கான உணவு தட்டுப்பாட்டுக்கான காரணமாக அமைந்துவிடுகின்றது. அரசாங்க உத்தியோகம் அனைவரையும் ஈர்க்கும் ஒரு துறையாக அமைந்து விடுகின்றது. சம்பள பணத்தை எடுத்து பல தேவைகளுக்கும் செலவு செய்ய வேண்டியிருப்பதால் குடும்ப அங்கத்தவர்களுக்கு சத்துணவு இல்லாமல் போய்விடுகின்றது. அரச உத்தியோகத்தில் இருந்த படி வீட்டுத்தோட்டத்தை செய்தால் அது இந்த பிரச்சனைக்கு தீர்வாக அமையும். உயிரினத்தை படைத்த சக்தி எப்படி திட்டமிட்டிருக்கிறது என்பதை சரியாக புரிந்து கொண்டு நாமும் வாழவேண்டும்.

உணவுப்பொருட்கள் விரயமாவதை தடுக்க வேண்டும். எமது உணவு பண்டகசாலைகளில் பெருமளவு சேதமடைவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த நெல் அறுவடையின் போது அரசினால் மக்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பெருந்தொகை நெல் ஆலைகளுக்கு பாரம் கொடுக்கப்படாமல் நீண்ட நாட்கள் பண்டகசாலைகளில் தேங்கி பழுதுற்றன. ஈற்றில் அவை கோழித்தீனுக்காக விற்பனை செய்யப்பட்டன.

உயிரினத்தின் தோற்றம் திட்டமிடப்பட்ட செயலா அல்லது விபத்தா என்று சிந்திக்கையில் பசிக்கு அடுத்தபடியாக உள்ள சவால் உடல் சார்ந்த நோய்கள் என்று கருதவேண்டியுள்ளது.

சில குழந்தைகள் கருவிலேயே குறைபாடுகளை கொண்டு பிறக்கின்றன. அதே சமயம் குழந்தை பூரண ஆரோக்கியத்துடன் பிறந்தாலும் கூட அதன் பின்னரும் நோய்நொடிகளுக்கு ஆளாகும் சந்தர்ப்பம் நிறையவே இருக்கின்றது. இதனை என்னவென்று சொல்வது.

பிரபஞ்சம் என்பது பிரமாண்டம். அதை படைத்தசக்தி ஐயத்திற்கிடமான உடலை ஏன் தரவேண்டும். ஆதிகாலத்தில் நாம் முழு ஆரோக்கியத்துடன் இருந்தோமா? பின்னர் நாமே தான் எமது சுகவாழ்வை கெடுத்துக்கொண்டோமா.... ரிஷிகள் பற்றியும் ஞானிகள்

பற்றியும் சிந்தித்துப்பார்த்தால் சில உண்மைகள் புரிகின்றன. அவர்கள் யோகா மூலம் தமது உடலாரோக்கியத்தை பேணினார்கள். பல விரதங்களை அனுஷ்டித்தார்கள் பிரமச்சரியம் காத்தார்கள். உணவு வகைகளில மிகுந்த கட்டுப்பாட்டை பேணினார்கள். உடலில் தோன்றக்கூடிய அசௌகரியங்களை போக்குவதற்கு பல மூலிகைகளை அறிந்து வைத்திருந்தார்கள் . அவர்களை கேட்டால் இந்த உயிர் வாழ்க்கை நன்கு திட்டமிடப்பட்ட செயல் என்றே கூறுவார்கள்.

ரிஷிகளும் ஞானிகளும் குகைகளில் வாழ்ந்தார்கள். நாம் அஸ்பெஸ்டர் சீற் பூட்டிய ஆடம்பர வீடுகளில் வாழ்கின்றோம். அது புற்று நோய் வருவதற்கு காரணியாக உள்ளது. என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். குகைகளில் இயற்கை சூழல் இருந்தது. சூரிய வெப்பம் 40^0 செல்சியத்தை தாண்டினாலும் தோற்றாது. இக்கட்டுரை எழுதப்பட்டிருக்கும் இன்றைய தினம் வெப்பம் 41^0 செல்சியசாக உணரப்படுகின்றது. பதினைந்திற்கு மேற்பட்டோர் அதிக வெப்பம் காரணமாக உயிரிழந்து விட்டனர். எமது வீடுகள் அமைந்திருக்கும் முறை வெப்பத்திற்கு தாக்கு பிடிக்க கூடியதாக இல்லை. இரும்பு கம்பிகள் வைத்து கொங்கிறீற் போடப்பட்ட கூரைகள் வெப்பத்தை எப்படி உறிஞ்சி வெளிவிடும் என்பதை பாருங்கள்.

நாம் இப்போ வீடுகளில் அலுவலகங்களில் குளிரூட்டிய அறைகளில் வாழ பழகிவிட்டோம். அது ஆரோக்கியத்திற்கு உகந்தது அல்ல. குளிரூட்டிய அறையை விட்டு வெளியே வரும்போது தீடீரென காலநிலை மாறுவது கேடல்லவா?

ரிஷிகள் உடலை பராமரிக்கும் முறைகள் பற்றி நன்கு அறிந்திருந்தார்கள். யோகா மூலம் கட்டை விரல் முதல் சிரசுவரையான உறுப்புகளை கட்டுப்படுத்த அவர்களால் முடிந்தது. விஞ்ஞானம் வளர்ச்சியடையாத அக்காலத்திலேயே அனைத்து உறுப்புக்களையும் அவை செயற்படும் முறைபற்றியும் அவற்றின் பயன்பாடு பற்றியும் அறிந்திருந்தார்கள். இதயம், நுரையீரல் கல்லீரல், சிறுநீரகம். சிறு குடல் . பெருங்குடல், சதையி போன்ற உள்ளுறுப்புக்களை யோக

பயிற்சி மூலம் நன்கு பேணினார்கள். அதன்மூலம் நோய் நொடியின்றி வாழ்ந்தார்கள்.

இன்று நாம் எமது உடம்பிற்கு எந்த பயிற்சியையும் கொடுப்பதில்லை. அதனால் இதயம் சார்ந்த நோய்கள் பெருகிவிட்டன. இரத்த அழுத்தம். இரத்த நாளங்களில் கொழுப்பு படிதல், மாரடைப்பு , இளைஞர்களுக்கும் ஏற்பட்டு விடுகின்றது. உடல் எடை அதிகரிப்பதனால் சதையியின் செயற்பாடு தடைப்படுகின்றது. அதனால் நீரிழிவு நோய் ஏற்படுகின்றது. ரிஷிகளின் காலத்தில் இரத்த நாளங்களில் உள்ள கொழுப்பை கரைப்பதற்கு 'அற்றோலிப்" போன்ற குளிசைகள் இருக்கவில்லை நீரிழிவை கட்டுப்படுத்துவதற்கு 'இன்சுலின்' போன்ற ஊசி வாயிலாக உட்செலுத்தப்படும் மருந்து வகைகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

ரிஷிகள் தமது உடலை தாமே பராமரித்தார்கள். நாம் இன்று என்ன செய்கின்றோம். மருத்துவரை நாடி ஓடுகிறோம். பலர் குடும்ப வைத்தியர்களை வைத்திருக்கின்றார்கள். இன்னும் பலர் மாதாந்தம் கிளினிக் குகளுக்கு தவறாது செல்கின்றார்கள். அங்கு கொடுக்கும் மருந்து வகைகளை தினமும் மூன்று வேளையும் அருந்தினால் தான் அவர்களால் நடமாடவே முடியும்.

ரிஷிகள் எமது உடலில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களுக்கு பரிகாரமாக மூலிகைகளை கண்டுபிடித்து வைத்திருக்கின்றார்கள். எம்மை படைத்த சக்தியே மூலிகைகளையும் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளது என கொள்ளவேண்டும்.

சுக பிரசவத்திற்கு எந்த சக்தி திட்டமிட்டதோ அதே சக்திதான் உயிரினத்தை திட்டமிட்டு படைத்தது என கொள்வதில் எந்த தவறும் இல்லை!

மலைமுரசு வாரமலர் - 23.04.2016 29.04.2016

27

"என் வழி தனி வழி"

தமிழ் நாட்டில் ஒரு நட்சத்திரநடிகர் 'என்வழி தனி வழி' என்கின்ற 'பஞ்ச் டயலக்கை' பேசிப்பேசியே கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்து விட்டார். இன்னும் சம்பாதித்துக்கொண்டே இருக்கிறார். இந்த 'பஞ்ச்' டயலக்கில் அப்படி என்னதான் மந்திரம் பொதிந்திருக்கின்றது என்பதை நாமும் சற்று சிந்தித்தால் ஏதாவது பலன் கிட்டலாமல்லவா....? சரி பார்ப்போம்.

உண்மையில் ஒருவன் தன்மீது வைக்கும் நம்பிக்கைதான் அவனது ஆளுமைக்கு அத்திவாரமாக இருக்கின்றது. அவன் அழகில்லாதவனாக இருக்கலாம், கருமை நிறம் உடையவனாக இருக்கலாம். அவனது தன்நம்பிக்கை ஒன்றே அவனை மற்றவர்களிடம் இருந்து வேறுபடுத்தி காட்டிவிடும். என்னால் முடியும், எனக்கு பிறர் துணை தேவையில்லை என்ற அவனது திடசங்கற்பம் காரணமாக பெரும் கூட்டமே அவனைச்சுற்றி இருக்கின்றது. அதுவே அவனது வெற்றிக்கு காரணமாகியும் விடுகின்றது. இப்பொழுது உங்களுக்கு புரிந்திருக்க வேண்டும். அந்த நடிகர். 'என்வழி தனி வழி' என்று கூறுவதன் மூலம் தான் தன்னுடைய காலில் நிற்பவன் என்றும் எவரது உதவியையும் துணையையும் நம்பியிருப்பவன் அல்ல என்றும் வேண்டுமாயின் தன்னால் பிறருக்கு உதவி செய்ய முடியும் என்றும் தன்னை தனது ஆளுமையை வெளிக்காட்டுகின்றார்.

பதிலுக்கு நாம் என்ன செய்கின்றோம்? எப்போதும் பிறர் எமக்கு உதவி செய்யமாட்டார்களா என்று எண்ணி பரிதவித்துக் கொண்டிருக்கின்றோம். யாராவது உறவினர் ஒருவர் பண வசதியுடன் இருந்தால் போதும். அது எமது கண்களை குத்துகின்றது. அவன் எனது சகோதரனாயிற்றே. மச்சானாயிற்றே. எனக்கு ஏன் உதவிசெய்ய கூடாது என்று ஏங்குகின்றோம். அத்துடன் உதவி கிட்டும் வரை காத்திருப்பதில்லை. சென்று பண உதவியோ, பொருளுதவியோ

கேட்கிறோம். கொடுத்தால் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவது. கொடுக்காவிட்டால் அநாவசிய கோபம் கொள்வது. இனி பெற்ற உதவியை திரும்ப அடைப்பதில்லை அதனால் பகைப்படுவது. சற்று சிந்தியுங்கள். எமது ஆளுமை எப்படி விருத்தியாகும்?

இனி எமது தூரத்து உறவுக்காரராயினும் பரவாயில்லை. வெளிநாட்டில் இருந்தால் போதும். அவரது உறவுமுறையை பெரிப்பித்து காட்டுவது. ஈற்றில் உதவி கேட்பது. உள்நாட்டில் எதிர்பார்க்கும் உதவியை விட அதிக அளவில் நம்பிக்கை வைப்பது. சகோதரியின் விவாகம். பிள்ளையின் பூ புனித நீராட்டு விழா என்று காரணம் காட்டுவது. ஆயிரக்கணக்கான டொலர்களில் கொடுக்காவிட்டால் குறைப்படுவது. இப்படியெல்லாம் நடந்துகொள்வதை இட்டு உண்மையில் நாம் வெட்கப்படவேண்டும். அவரவர்களுக்கு அவரவர் சோலி நுற்றுக்கணக்கில் இருக்கும். அவர்களது பிள்ளைகளது படிப்பு, வேலைவாய்ப்பு, வைபவங்கள் என்று பொறுப்புக்கள் இருக்கும். இனி இரவு பகல் என்று கஷ்டப்பட்டு உழைத்தால்தான் உண்டு! எமது பொறுப்புக்களையும் உங்கள் தலையில் போடுங்கள் என்று கேட்பது எப்படி நியாயமாகும்?

எம்மால் முடியாதென்றால் என்ன அர்த்தம்? எம்மை வயோதிபம் நெருங்கிவிட்டதா? நாம் நோய்வாய் பட்டுவிட்டோமா?

உண்மையில் தாழ்வுசிக்கல் தான் எம்மை அப்படியெல்லாம் எண்ணவும் செய்யவும் தூண்டுகின்றது. எமது காலில் நிற்க எமக்கு தைரியம் இல்லை.

இனி எம்மில் அனேகர் ஆன்மீகம் பற்றிய சரியான தெளிவு காரணமாக கோவில்களுக்கு சென்று பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றார்களென்று இல்லை. மன உறுதி இல்லாத காரணத்தினாலேயே அவர்கள் தெய்வத்திடம் சென்று முறையிடுகிறார்கள். கற்பூர சட்டி எடுப்பது. அடி அழிப்பது. அங்க பிரதிஷ்டை செய்வது. அலகு குத்தி காவடி எடுப்பது. விரதங்கள் அனுஷ்டிப்பது எல்லாமே இறைவன் நமக்கு துணை நிற்பான் என்ற நம்பிக்கை நிமித்தமானவையே. விதிவிலக்காக உண்மையான பக்தர்களும் அனேகர் உண்டு.

தமது பொறுப்புக்களை தம்மால் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை பிரதானமானது. அதுவே காரிய சித்திக்கு வழிவகுக்கும் அதை விடுத்து பிறரிடம் உதவிகேட்பது போல இறைவனிடமும் நமக்கு பணம் கொடு பதவியை தா, சொத்துக்களை தா, என்று கேட்டு அவனுக்கே அதற்காக லஞ்சம் கொடுப்பது போல நேர்த்திக்கடன் வைப்பதெல்லாம் எவ்வளவு தூரம் தவறு என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

அடுத்து இன்று பலர் தம்மை நம்பாமல் சோதிடர்மேல் நம்பிக்கை வைக்கின்றார்கள். அவர்களிடம் சென்று தமது நாள் நட்சத்திரம் எப்படி இருக்கின்றது? நன்மைகள் கைகூடுமா ? உத்தியோக பலன் உண்டா? வெளிநாடு செல்ல வாய்ப்புண்டா? விவாகம் எப்போ? என்றெல்லாம் வினாவுகின்றார்கள். தன்நம்பிக்கை இல்லாத காரணத்தால் தான் அவர்கள் சோதிடர்களின் துணையை நாடிச்செல்கின்றார்கள். இந்த உண்மையை சோதிடர் புரிந்து கொள்ள அதிகளவு நேரம் எடுக்காது. விண்வெளி ஆய்வாளர்களால் மேற்கொள்ளக்கூடிய கிரகங்கள் பற்றிய நகர்வை சோதிடர் பஞ்சாங்கத்தை வைத்து வெறும் கடதாசியில் கணித்துவிட்டு பலன்களையும் பரிகாரங்களையும் கூறுவார். சோதிடர்கள் கூறுவதையெல்லாம் அவர்கள் முழுக்க முழுக்க நம்புகின்றார்கள். சாந்தி செய்ய வேண்டும், கழிப்பு கழிக்க வேண்டும், தட்சணை வைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கெல்லாம் உடன்படுகின்றார்கள். சோதிடர்கள் வாய்த்தது தாயம் என்பது போல தமக்கு அவசியமான பொருட்களை எல்லாம் அவர்களிடம் இருந்து வசூலிப்பதில் தமது கைவரிசையை காட்டுவர்.

சிலர் தாம் நினைத்த காரியம் நிறைவேறவேண்டுமென திடசங்கற்பம் பூண்டால் அதற்காக பலகோடி ரூபா செலவானாலும் பரவாயில்லை என்று கூறி சோதிடர்களுக்கு பின்னாலேயே திரிவார்கள். சோதிடர்களும் அவர்களது மனவுறுதியற்ற தன்மையினை உணர்ந்துகொண்டு அந்த காரியத்தை எத்திகதியில் செய்யவேண்டும். அதற்காக பெரும் செலவில் செய்யவேண்டிய தாயத்துக்களை அணிந்து கொள்வதன் அவசியம். அதனால் பெறப்படும் சித்திகள் என்னென்ன எந்தெந்த கோவில்களுக்கு சென்று என்னென்ன பூஜைகள் யாகங்கள் செய்ய

வேண்டும் மற்றவர்களை வசீகரிக்க செய்யவேண்டிய ஏற்பாடுகள் எவை என்றெல்லாம் பெரிய பட்டியலிட்டு பெரும் பண செலவிற்கு ஏற்பாடு செய்வார். ஓரிரு மாதங்கள் இப்படியே இழுபட்டுக்கொண்டு போகும். சோதிடரும் அதைசெய்ய வேண்டு இதை செய்ய வேண்டும் என்று கூறி பண வசூல் செய்து தான் கோடீஸ்வரராகிவிடுவார். ஈற்றில் நிலைமை தலைகீழாக போய்விடும்! அதைத்தான் நாம் நம்நாட்டில் அண்மையில் நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதி தேர்தலில் நேரடியாகவே கண்டோமே!

காந்தி அடிகளும் ஆபிரகாம்லிங்கனும் தம்மை தாமே நம்பினார்கள். அதனால் தான் அவர்கள் மக்கள் தலைவர்களாகவும் உலக நாயகர்களாகவும் உயர்ந்தார்கள் தம்மை நம்பாத மனவுறுதியற்ற தலைவர்களை மக்கள் மதிப்பார்களா? நேசிப்பார்களா?

இராமகிருஷ்ண பரமஹம்சர் , விவேகானந்தர், ஆதிசங்கரர், இரமணமகரிஷி போன்றோரின் ஆளுமையை ஒரு கணம் எண்ணிப்பாருங்கள்.

தம்மால் முடியும் என்ற நம்பிக்கையுடன் உழைத்த எத்தனையோ விஞ்ஞானிகள் பல கண்டுபிடிப்புக்களை மக்களுக்கு வழங்கியுள்ளார்கள். அது அவர்களது மனவுறுதியின் வெளிப்பாடாகும்.

மற்றவர்களின் துணையில் தங்கியிருக்காமல் நாம் எமது காலில் தலைநிமிர்ந்து நிற்போமாயின் எம்மிடம் மறைந்திருக்கும் ஆளுமை மற்றவர்களுக்கு புலப்படத்தொடங்கும். அதுவே வெற்றிக்கும் வழிவகுக்கும். இப்போ நாமும் எமது வழி தனி வழி என்ற கோஷத்துடன் அடியெடுத்துவைக்க தாயராகுவோமா?

மலைமுரசு வாரமலர் - 24.01.2015 30.01.2015

28

"உயர்வும் தாழ்வும்"

இப்போதெல்லாம் தொலைக்காட்சியானது அனைத்து வீடுகளிலும் சர்வ சாதாரணமாக இருக்கின்ற ஒரு பொழுதுபோக்கு சாதனம். கைப்பேசி பற்றி உள்ள குற்றச் சாட்டுக்கள் அளவிற்கு இல்லாவிட்டாலும் கூட தொலைக்காட்சியை எமது மாணவ செல்வங்களும் இளைஞர்களும் பயன்படுத்தும் விதத்தில் அதன் மீதும் சிறுசிறு குற்றச்சாட்டுக்கள் எழத்தான் செய்கின்றன.

தொலைக்காட்சியில் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப் படுகின்றன. அவற்றில் எமது குழந்தைகள் பார்த்து பயன்படக்கூடிய நிகழ்ச்சிகளை தெரிவு செய்து அவர்களை ஊக்குவிக்க வேண்டியது பெற்றோர்களின் பொறுப்பாகும்.

'ஸ்ரார் விஜய்' தொலைக்காட்சி ஒளிபரப்பில் ஞாயிறு இரவு 9.00 மணிக்கு 'நீயா? நானா?' என்ற ஒரு நிகழ்ச்சி 'கோபி நாத்' அவர்களால் தொகுத்து வழங்கப்படுகின்றது. இரு சாராரை அழைத்து பல்வேறுபட்ட விடயங்களின் சார்புநிலை கருத்துக்களையும் எதிர்நிலை கருத்துக்களையும் மோதவிட்டு அலசி ஆராயும் சுவாரசியமானதொரு நிகழ்ச்சி இது.

சில தினங்கள் முன்னராக அடக்கமாக இருத்தலும் முன்னிலைப்ப டுத்தலும் என்ற தலைப்பில் கருத்துக்கள் கோரப்பட்டு இருசாரார் தமது விவாதத்தை சிறப்புறச்செய்தனர்.

சிலர் அலுவலகங்களிலும் பொது இடங்களிலும் அடக்கமாக இருப்பதே ஒருவர் மீது மதிப்பை உண்டு பண்ணும். அவர் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும். அவரது உயர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று வாதிட்டனர்.

மறுசாரார், அதெல்லாம் முன்னாட்களில் பொருத்தமாக இருக்கலாம்..... இந்நாட்களில் நாம் அடக்கமாக இருந்தால் எம்மை எவரும் கணக்கிலேயே எடுக்கமாட்டார்கள்... எமது உயர்ச்சி அதனால் பாதிப்புக்கு உள்ளாகும்... மேலும் எமது திறமைகளை நாமே முன்வந்து வெளிப்படுத்தாவிட்டால் யார்தான் அதனை தேடிக்கண்டு பிடித்து எமக்கு சந்தர்ப்பம் வழங்கப் போகின்றார்கள் என்று வாதிட்டனர்.

இந்த இரு கருத்துக்களுக்கும் நடுநிலையாக நாம் எமது திறமைகளை கல்வியின் மூலம் வளர்த்துக்கொண்டு நல்லதொரு பதவியை அடைந்து அடக்கமாக பணி புரியலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

இனி, நாம் எம்மை எடுத்துக்கொண்டாலும் எந்த விடயத்திலும் ஒரு சமநிலையை பேணினால்தான் எமக்கு வெற்றி கிட்டும். சந்தோஷம், துக்கம் இரண்டுமே எதிர் எதிரான நிலைகள். நாம் அதிக அளவு சந்தோஷத்தில் மூழ்கினாலும் செயலிழப்போம். அதிகளவு துன்பத்தில் மூழ்கினாலும் வாழ்க்கையில் துவண்டு விடுவோம். இரண்டு நிலை யிலும் நிதானமாக இருக்க முடிந்தவர்களுக்கே இந்த வாழ்க்கை உரித்தானதாகின்றது.

அதீத நம்பிக்கையும், நம்பிக்கையீனமும் கூட இரு துருவங்களாக இருக்கின்றன. எந்த நபர் மீதும் எந்த ஒரு விடயத்தின் மீதும் அதீத நம்பிக்கை வைப்பது எம்மை பாதாளத்தில் வீழ்த்தி விடும். அதே போன்று நம்பிக்கையீனம் எமது பெற்றோர், மனைவி, பிள்ளைகள் மீது கூட சந்தேகத்தை உண்டு பண்ணி குடும்பத்தை சிதைத்து விடும்.... கடவுள் மீதான அதீத நம்பிக்கை ஒருவனை துறவறத்திற்கு இட்டுச் செல்லும்..... அதே சமயம் ஒரு சிறிய நம்பிக்கையீனமும் கூட அவனை ஆன்மீக பாதைக்குச் செல்லாதபடி தடுத்துவிடும். கடவுள் மீதான நம்பிக்கையீனத்தால்தான் நாம் எல்லோரும் சம்சார சாகரத்தில் மூழ்கி உள்ளோம். ஆன்மீகத்தின் மீதான அதீத நம்பிக்கைக்கு உதாரண புருஷர்களாக இராமகிருஷ்ணரையும் விவேகானந்தரையும் ரமண மகரிஷியையும் குறிப்பிடலாம். எமது வாழ்வில் நாம் வெற்றியாளராக திகழ வேண்டுமானால் நாம் எமது நம்பிக்கையில் ஒரு சமநிலையை பேணவேண்டும்.

இனி, இந்த சமூகத்தில் நாம் பழகும் விதத்தில் எம்மில் இரு வேறுபட்ட குணாம்சங்களை அவதானிக்கலாம்.

ஒன்றில் நாம் எம்மை மிகவும் உயர்ந்தவர்களாக எண்ணி கர்வம் கொண்டவர்களாக செயற்படுகின்றோம். அல்லது எம்மை மிகவும் தாழ்ந்தவர்களாக கணக்கிட்டு ஒதுங்கி இருக்க தலைப்படுகின்றோம்.

எம்மை உயர்ந்தவர்களாக எண்ணி காரியங்களில் வீச்சுடன் செயல்படுவதில்தான் எமது வெற்றி தங்கி உள்ளது. எமது குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் கூட எமது தன் நம்பிக்கை ஒளியூட்டும். ஏழையாக பிறந்து நாட்டுக்கு தலைமை தாங்கும் அளவுக்கு உயரச்சியடைந்த பல தலைவர்கள் எமக்கு முன்னோடி களாக இருக்கின்றனர். அவர்கள் எமக்கு விட்டுச்சென்ற அறிவுரைகள் எம்மால் பின்பற்றப்பட வேண்டியவை. சமூக கண்ணோட்டத்துடனான சேவைகளை நாம் மனத்தில் இருத்தி செயல்பட வேண்டும். கண்டு பிடிப்புக்கள் அனைத்துக்குமே காரணமாக இருப்பது தனி மனித நம்பிக்கையேயல்லவா...!

ஆனால் அதீத நம்பிக்கை அடுத்தவளமாக என்ன செய்கின்றது. அகங்காரத்தையும் கர்வத்தையும் கொண்டுவருகின்றது. குடும்பத்தில் நான்தான் மூத்தவன். அலுவலகத்தில் நான்தான் பெரியவன், அரசியலில் நான் தான் ராஜா என்றெல்லாம் எண்ண வைக்கின்றது. அதனால் தம்பி தங்கைகளின் எதிர்ப்புக்கு உள்ளாவது. அலுவலகத்தில் சக உத்தியோகத்தர்களின் பகைமையை சம்பா திப்பது. சக அரசியல்வாதிகளின் எதிர்புணர்விற்கு உள்ளாவது. அதனால் பதவியே பறிபோகும் அளவிற்கு தன்னை இட்டுச்செல்வது! அண்மையில் தமிழகத்திலும் இலங்கையிலும் இரு பெரும் அரசியல்வாதிகளின் வீழ்ச்சி எம்கண்முன்னாலேயே நேர்ந்தது. அவர்கள் இட்டதே சட்டமென்ற நிலை இருந்தது. இருவருமே கோடிக்கணக்கில் சம்பாதித்தார்கள். தம்மைச் சுற்றி தமக்கு வேண்டியவர்களையெல்லாம். அணி சேர்த்துக்கொண்டார்கள். இருவருமே தமது உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மக்கள் முன் அவர்களை தலையில் தூக்கிவைத்து கொண்டாடினார்கள். சர்வதேச ஊடகவியலாளரே அவர்களின் திடீர்வீழ்ச்சியை நம்ப முடியாதவர்களாக திணறினர்.

அடுத்து தாழ்வு மனப்பான்மையை எடுத்தால் அதுவே ஒருவனது வீழ்ச்சிக்கு காரணமாக இருக்கின்றது. என்னால் இயலாது... எனக்கு திறமை இல்லை.... நான் எதற்கும் தகுதியற்றவன் என்ற எண்ணம் அவனை மட்டுமன்றி அவனது குடும்பத்தையும் சமூகத்தையும் நாட்டையும் கூட வீழ்ச்சியை நோக்கி செலுத்திவிடும்.

அவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு பற்றுக்கோடு இருக்காது. ஊதாரித்தனமே மிகுந்திருக்கும். எந்த சம்பாத்தியமும் இல்லாமல் பெற்றோர்களின் சேமிப்பை கேளிக்கைகளிலும் சூதிலும் பெண்ணிலும் செலவிடுபவர்கள் அவர்களே. ஒரு குடும்பம் குட்டிச்சுவராகின்றது என்றால் அதற்கு காரணம் வேறு எவராகவும் இருக்க முடியாது. கல்வியைப் பற்றிய சிந்தனையே அவர்களிடம் இருக்காது. தாழ்வுச்சிக்கல் காரணமாக எவரையும் சந்திப்பதையும் எந்த முன்னேற்றகரமான செயற்பாடுகளில் கால் பதிப்பதையும் தவிர்த்துக்கொள்வர். உயர்வும், தாழ்வும் பிறர்தரவாரா என்பதே உண்மை!

மற்றவர்களுடன் ஒப்பிட்டே எம்மை நாம் உயர்ந்தவர்கள் என்று எண்ணுகின்றோம். அதே போன்றே எம்மை மற்றவர்களுடன் ஒப்பிட்டு தாழ்ந்தவர்கள் என்று எண்ணுகின்றோம். ஒன்றில் நாம் உயர்ந்தவர்கள் என்று கர்வம் கொள்கின்றோம். அன்றேல் தாழ்வு சிக்கலுக்கு உட்படுகின்றோம். அங்கேயே தவறு நிகழ்கின்றது.

எப்போதும் நாம் எந்த விடயத்திலும் ஒரு சமநிலையை பேணமுடிந்தால் தான் வாழ்க்கையில் அமைதி, நிம்மதி, வெற்றி ஆகியன கிட்டும்.

அப்படியான ஒரு சமநிலையை பேணுவதற்கு நாம் சில தீர்மானங்களை எடுக்க வேண்டும். மற்றவர்களுடன் அன்பாக பழக வேண்டும். அவர்களை மதிக்க வேண்டும். இனிமையாக பேச வேண்டும். பிறருக்கு உதவிசெய்யும் மனப்பாங்கை வளர்க்க வேண்டும்.

எங்கே தீர்மானம் எடுத்துவிட்டீர்களா? அப்படியாயின் இனி வெற்றி உங்கள் கையில்தான்!

29

" விஞ்ஞானம் எதனைத் தேடுகின்றது "

வெளிப்பார்வைக்கு விஞ்ஞானம் வசதிகளை தேடுவது போல தோற்றமளிக்கின்றது. அது உண்மையல்ல! பதிலுக்கு விஞ்ஞானம் உலகில் விடுவிக்கப்படாதிருக்கும் புதிர்களுக்கான விடையையே தேடுகின்றது.

முதலில் இந்த பிரபஞ்சத்தை நோக்குவோமாயின் அதன் தோற்றம், பொருண்மை, விஷ்தீரணம், பற்றி கற்பனை பண்ணிக்கூட பார்க்க முடியவில்லை. எத்தனை இலட்சம் விண்மீன்கள், கோள்கள், உபகோள்கள், தூம கேதுக்கள் இந்த பிரபஞ்சத்தில் நகர்ந்துகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பிரபஞ்சத்தை தாங்கிநிற்கும் அண்டவெளியை சிறிது எண்ணிப்பாருங்கள். கற்பனையிலாவது அதற்கு ஒரு எல்லையை வகுக்கக்கூடியதாக இருக்கின்றதா? விரிந்து கொண்டே போகும் பிரபஞ்சத்தையே எம்மால் கற்பனை பண்ணமுடியும். அப்படி இல்லை என ஒரு எல்லையை வைத்தால் கூட எமது மனம் அதற்கு அப்பால்? என்று கேட்டு அதன் எல்லையை தாண்டி குதிக்கும். இனி காலத்தை எடுங்கள். அதற்கும் கூட எல்லை இல்லை. இறந்தகாலத்தை எண்ணினால் அது முடிவற்று நீண்டு செல்கின்றது. அதே போல் எதிர்காலத்தை எண்ணினால் அதுவும் ஒரு தரிப்பிடம் இல்லை.

இனி இப்பிரபஞ்சம் எப்படி தோன்றியது? இதன் சீருஷ்டிகர்த்தா யார்? உயிரினம் எப்படி தோன்றியது? அப்படி தோன்றிய உயிரினம் சொகுசாக வாழமுடியாமைக்கான காரணம் என்ன? மனித வாழ்வு குறுகியதோர் காலத்தில் ஏன் முடிகின்றது?

இன்னும் சிந்தித்தால். இந்த அகண்ட பிரபஞ்சத்தில் நாம் வாழும் பூமி தவிர்ந்த உயிரினம் வாழும் வேறு கிரகங்கள் இருக்கின்றனவா? அல்லது நாம் மட்டும் இப்பிரபஞ்சத்தில் தனித்து அநாதைகளாக விடப்பட்டுள்ளோமா?

கோள்களும் பிறவும் தமக்கான பாதையில் ஒருநிமிடம் கூட தரிக்காமல் வேகத்துடன் விரைந்துகொண்டிருக்கின்றனவே.... அதற்கான சக்தி எங்கிருந்து கிடைக்கின்றது. மொத்தத்தில் சிருஷ்டியின் நோக்கம் என்ன? இவற்றைத்தான் விஞ்ஞானம் தேடுகின்றது. நாம் வாழும் பூமியை அண்மித்த கோள்களில் உயிரினம் இருக்கின்றதா? என்பதை நாசா சல்லடை போட்டு தேடுகின்றது. நிலவில் மனிதன் காலடி பதித்து அரைநூற்றாண்டு காலமளவில் ஆகின்றது. நாசா முதல் இந்தியாவரை பல நாடுகள் செவ்வாய் கிரகத்தை நுணுகி ஆராய்ந்து வருகின்றன. செவ்வாய் கிரகத்தில் நீர் இருந்ததற்கான ஆதாரங்கள் எட்டுகின்றன. இந்த ஆராய்ச்சிகள் மற்றொரு கிரகத்தில் மனிதன் குடியேறி வசிக்ககூடிய சாத்தியக் கூறுகளையும் அலசி ஆராய்கின்றன. இந்த பிரபஞ்சமோ மிக மிக விசாலமானது. மனிதனின் வாழ்நாளோ குறுகியது. அதைக் காட்டிலும் மனிதன் உயிர்வாழ்வதற்கு பிராணவாயுவும் நீரும் ஆகாரமும் தொடர்ச்சியாக தேவைப்படுகின்றது. எமது சூரியக் குடும்பத்திற்கு அப்பால் இருக்கக் கூடிய எந்த ஒரு கோளிலாவது உயரினம் இருந்தால் கூட அந்த கோளை நெருங்குவதற்கு பாதகமான காரணிகளே மேலே கூறப்பட்டன. அதைக் காட்டிலும் நாம் பயணம் செய்ய முயற்சிக்கும் விண்வெளி விமானத்துக்கான எரி பொருளை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் எடுத்துச் செல்ல முடியாது. எனவே எல்லையற்ற இந்த பிரபஞ்சத்தில் ஏதாவது ஒரு கோளில் எம்மைவிட நாகரீகம் படைத்த சமூகம் வாழ்ந்து கொண்டிருந்தால் கூட அவர்களை நெருங்கும் ஆற்றல் எம்மிடம் இல்லை. எனவே அவர்களிடமிருந்து , நாம் இப்போ தெரிந்து கொண்டிருக்கும் அறிவைக்காட்டிலும் மேலதிகமாக எதையும் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு நிராகரிக்கப்படுகின்றது.

இருப்பினும் விஞ்ஞானிகள் பூலோகத்தில் எமது இருப்பைப்பற்றி இப்பிரபஞ்சத்தில் எங்காவது வாழ்ந்து கொண்டிருக்ககூடிய மிகவும் நாகரீகம் படைத்த உயிரினத்துக்கு எட்டக்கூடியவாறு தொடர்ந்து

செய்திகளை அனுப்பிக்கொண்டிருக்கின்றார்கள். அதேசமயம் தொலை தூரத்தில் வாழ்பவர்களிடமிருந்து எமக்கு ஏதாவது 'சிக்னல்' கிடைக்கின்றதா என்பதையும் விழிப்புடன் அவதானிக்கின்றார்கள். அதே போன்று வான்வெளியில் தொலைதூரத்துக்கு பயணம் செய்வதற்கு எமக்கு தடையாக உள்ள காரணிகள் இல்லாத அல்லது வெற்றிகொள்ளகூடிய ஒரு நாகரீகம் மிக்க உயிரினம் முடிந்தால் ஒரு நாள் எமது கோளில் தடத்தை பதிக்க கூடியதாகவும் இருக்கலாம். அப்படி நேருமாயின் அன்று மனித இனமானது பதில் காண முடியாதுள்ள பல புதிர்களுக்கு விடை காண்பதன் மூலம் தன் வாழ்கை பயணத்தில் ஒரு நீண்ட இராட்சத தடத்தை பதிக்ககூடியதாகவும் இருக்கலாம்!

இதனை ஒரு உதாரணம் மூலம் விளக்கமுயல்வோம். இங்கு நாமும் பிரபஞ்சமும் மூன்று அளவுக்கூற்றுக்குள் உட்பட்டிருக்கின்றோம். எமது அறிவின் பிராகாரம் காணுபவை எல்லாம் நீளத்தையும் அகலத்தையும் உயரத்தையும் கொண்டு அமைந்துள்ளன. நாம் வேற்று கோள் ஒன்றுக்கு செல்கின்றோம். அங்கு வாழும் மக்கள் இரு அளவுக்கூறுக்குள் வாழ்பவர்கள். அதாவது நீளம் அகலம் ஆகிய இரண்டு அளவுக் கூறே அங்கு உள்ளது. அங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் இருஅளவுக்கூறுக்கு உட்பட்டவர்கள் சிறையில் இருந்து தப்பிக்க முடியாது. ஆனால் நாம் அந்த மனிதனை சிறையிலிருந்து மீட்க வேண்டுமாயின் மேலால் கையை விட்டு எடுத்து விடலாம்.

அதேபோன்று அந்த இரு அளவுக்கூற்று மனிதனுக்கு ஒரு சத்திர சிகிச்சையை மேற்கொள்ள வேண்டி உள்ளது. அவனுக்கு எந்த ஒரு காயமும் ஏற்படாமல் நாம் மேலால் கையை வைத்து அந்த பாதிக்கப்பட்ட உறுப்பை சீர் செய்ய முடியும். அது அந்த இரு அளவுக்கூற்று மனிதனுக்கு மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும். அவன் எங்களுக்கு தனது நன்றியறிதலையும் தெரிவிப்பான்.
எம் மீது பொருத்தி பார்த்த இந்த உதாரணத்தை மறுபக்கமாக பார்ப்போம். வேற்று கிரகத்தில் இருந்து மூன்று அளவுக்கூறுக்கு பதிலாக நான்கு அளவுக்கூறுகளுக்கு உட்பட்ட ஜீவராசிகள் எமது

பூலோகத்துக்கு வருகின்றார்கள். எமது சிறைகளில் பல கைதிகள் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் வெளியே வரவேண்டி யிருந்தால் சிறை அதிகாரி கதவை திறந்து விடவேண்டும். ஆனால் வருகை தந்திருக்கும நான்கு அளவுக்கூற்று ஜீவராசிகளால் கதவை திறக்காமலே கைதிகளை வெளியே எடுத்து தப்பித்து செல்ல அனுமதிக்கமுடியும்.

அதே போன்று எம்மில் எவருக்காவது சத்திரசிகிச்சை செய்ய வேண்டி உள்ளதாக கருதுவோம். அந்த நாலு அளவுக்கூற்று ஜீவராசி எமது உடலைக் காயப்படுத்தாமலே உள்ளுறுப்பை சீர்செய்து விடலாம். நாமும் அவனை பாராட்டி நன்றி தெரிவிப்போம்!

எமது விஞ்ஞானிகள் இலேசுப்பட்டவர்கள் அல்ல... இறைவன் சிருஷ்டியில் பூலோகம் தவிர்ந்த பிற கோள் ஒன்றிலாவது உயிரினம் இல்லாவிடாலும் கூட நாமாயினும் எமது பிற கோள் ஒன்றில் மனிதனை குடியேற்றுவோம் என்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். ஒரு சமயம் விபத்தொன்றில் பூலோகம் முற்றாக அழிந்தாலும் மனித இனம் மற்றொரு கோளில் வாழ்ந்துகொண்டிருக்குமல்லவா?

சரி... அவையனைத்தையும் தான் விடுவோம். மனிதனுக்கு மறுபிறப்பு என்பதுண்டா என்ற கேள்விக்கு இதுவரை அதாரபூர்வமான விடையை எந்த விஞ்ஞானியிலாவது உறுதியாக கூற முடிந்ததா? இல்லவே இல்லை! உலகில் இரகசியங்களாக பேணப்படுவனவற்றை விடுவிக்க முடியாதிருப்பதுதான் இந்த பிரபஞ்சத்தின் நீட்ச்சிக்கு அத்திவாரமாக உள்ளது. மறு பிறப்பு உண்டு என்று உறுதிசெய்யப்பட்டால் மனிதன் சும்மா இருப்பானா? வயோதிபம் என்பது கூட இயற்கை எமக்கு வழங்கியுள்ள ஒரு சுவாரசியமான வாழ்கை அனுபவம் என்பதை மறந்து மறு பிறப்புக்காக எதையும் செய்ய துணிவான்.

இவையெல்லாம் பிரபஞ்சத்தின் புதிர்கள். இப்புதிர்களை விடுவிக்கும் முயற்சியில் இதுவரை விஞ்ஞானம் எவ்வளவு தூரம் வெற்றியீட்டியுள்ளது என்பது கேள்விக்குறிதான்!

30

உல்லாசமும் மகிழ்ச்சியும்

இப் பகுதியில் சுகமும், ஆனந்தமும் என்ற தலைப்பிலான ஒரு கட்டுரை முன்னரே எழுதப்பட்டது. சுகம் என்பது ஞானேந்திரியங்கள் மற்றும் கர்மேந்திரியங்களின் துணையுடன் கிடைக்கப்பெறுவன என்றும், ஆனந்தம் என்பது ஒரு உயர்ந்த நிலை என்றும் ஏறக்குறைய குறுக்கீடற்ற நிம்மதியையும் பரமானந்தத்தையும் ஆன்மா அனுபவிக்கும் நிலையே ஆனந்தம் என்றும் உரைக்கப்பட்டது.

இந் நாட்களில் இவையெல்லாம் பற்றி யார் கவலை கொண்டார்கள் என்று ஒரு சாரார் எண்ணுவதால் உல்லாசமும் மகிழ்ச்சியும் என்ற தலைப்பில் இக் கட்டுரை ஆராய்கின்றது.

மனித உணர்வுகளுக்கு தீனி போடுவதில் உல்லாசம் முதன்மையான இடத்தைப் பிடிக்கின்றது. பச்சிளம் குழந்தை ஒன்று தாயின் மடியில் படுத்தபடி அவளது முகத்தை பார்த்து சிரிப்பதும் கை,கால்களை போட்டு அடிப்பதுமாக உல்லாசம் அனுபவிக்கின்றது. அந்த உல்லாசத்தை தவிர அதற்கு மகிழ்ச்சி அளிப்பது வேறொன்றுமில்லை.

வளர்ந்து சிறுவனானதும் நண்பர்களுடன் இணைந்து ஓடியாடி விளையாடுவது, கண்டுபிடி கண்டுபிடி விளையாடுவது என்று அவனது உல்லாசம் வேறு திசையில் மாறுபடுகின்றது.

அவனே மாணவ பருவத்தை எய்தும் போது கொழும்பு, கண்டி, நுவரெலியா போன்ற இடங்களுக்கு சுற்றுலா செல்வதில் பெரும் உல்லாசத்தை காண்கின்றான். துடுப்பாட்டம், உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் அவனுக்கு உல்லாசம் அளிக்கின்றன.

இந்த இடத்தில் ஓர் உண்மையை கூறிவிட்டு அப்பால் செல்லலாம். உல்லாசம் என்பது நாம் ஒரு காரியத்தில் ஈடுபடும்போது ஏற்படும்

மன எழுச்சியாகும். இன்று மக்கள் அனைவருமே இந்த உல்லாசத்தை நாடியே அல்லாடுகின்றனர்.

அனேகமான குடும்ப பெண்கள் தொலைக்காட்சி 'சீரியல்கள்' பார்ப்பதில் உல்லாசம் பெறுகின்றார்கள். இளைஞர் சமுதாயம் 'பேஸ்புக்', 'ருவிட்டர்' ஆகியவற்றினூடாக நண்பர்கள் நண்பிகளுடன் 'சற்' (Chat) பண்ணுவதில் உல்லாசம் அடைகின்றார்கள். வயதுக்கு வந்த இளைஞர்கள் யுவதிகள் தமது மனம் கவர்ந்த துணைவரை தெரிவு செய்து கொண்டு கடற்கரை, 'சினிமா', 'ஹோட்டல்' என்று சுதந்திரமாக பறந்து திரிவதில் உல்லாசத்தை காண்கின்றார்கள். பெற்றோர்களின் சரியான கட்டுப்பாட்டுக்குள் இல்லாத பிள்ளைகள் போதைவஸ்து பாவனை மூலம் உல்லாசபுரியில் நடமாடுகின்றார்கள்.

பணம் மட்டும் இருந்து விட்டால் இந்த உலகில் உல்லாசத்தின் கதவுகள் அகலவே திறந்து கிடக்கின்றது. நீங்கள் விரும்பிய நாடுகளுக்கு விமானத்தில் பறக்கலாம். நவீன வசதிகள் கொண்ட ஹோட்டல்களில் நீங்கள் விரும்பும் நாட்கள் தங்கி வேண்டிய வசதிகளை அனுபவிக்கவும் விரும்பிய விரும்பியவற்றை பெறவுமான பொதிகள் (Packages) தயார் நிலையில் உள்ளன. பணம் மட்டும் செலுத்தினால் போதும் உல்லாசம் உங்கள் காலடிக்கு வந்துவிடும். பொறுப்புக்கூறல் என்று எதுவுமே கிடையா!.

எமது நாட்டுக்கு வரும் உல்லாசப்பிரயாணிகள் பல 'மில்லியன் டொலர்களை' செலவு செய்கின்றார்கள். கடற்கரைகளில் அவர்கள் கூட்டம் கூட்டமாக சுற்றித்திரிவதும் 'சன்பார்த்' எடுப்பதும் பெண்கள் 'சிகரெட்டும்' கையுமாக மது அருந்துவதும் எல்லாமே உல்லாசம்தான்!

உல்லாசம் என்பது எமது பசிக்கும் உணர்சிகளுக்கும் போடப்படும் தீனி மட்டுமல்ல. எமது துன்பங்கள் கவலைகளை மறக்கவும் அது கைகொடுக்கின்றது.

இனி மகிழ்ச்சி என்றால் என்ன? இது உல்லாசத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்று பார்ப்போம்.

இளம் யுவதியொன்றின் பரத நாட்டிய நிகழ்ச்சி ஒன்றினை பார்க்கின்றோம். அதைப் பார்ப்பது உல்லாசமாக இருக்கின்றது. பார்த்து முடித்த பின்னர் ஓரிரு நாட்கள் கடந்த பின்னரும் அந் நிகழ்ச்சி எமக்கு நிறைவை தருகின்றது. அது தான் மகிழ்ச்சி. எண்ண எண்ண மனம் குதூகலிக்கின்றது.

இன்னமும் கூறப்போனால் எமக்கு யார் யார் மேல் அதிகம் பிரயமுள்ளதோ அவர்களை நினைக்கையில் மகிழ்ச்சி உண்டாகும். அதற்காக நாம் எந்த ஒரு செலவையும் செய்ய வேண்டியதில்லை.

எமது தாய் எம்மை தாலாட்டி சீராட்டி வளர்த்ததை, எமக்கு நல்வழிகாட்டி கல்வி புகட்டி ஆளாக்கியதை, நோய்வாய்பட்டபோது அருகிலிருந்து பராமரித்ததை, எண்ணும் ஒவ்வொரு தடவையும் எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகின்றது.

மனைவியானவள் எம் மீது சொரியும் அன்பு, எமக்காக அவள் செய்யும் சேவைகள், குடும்பம் பிள்ளைகள் என்று அவள் காட்டும் பரிவு, அவள் மேல் நாம் கோபம் கொண்டாலும் அவற்றை பொருட்படுத்தாமல் மன்னிக்கும் சுபாவம், இவையெல்லாம் எமக்கு மகிழ்ச்சியை தருவனவே.

எமது பிள்ளைகள் எமது சொற்கேட்டு நடப்பதும், படிப்பில் ஆர்வம் காட்டி முன்னேறுவதும், நல்ல தொழிலில் அமர்வதும், பெற்றோருடன் இணைந்து சிறந்த துணையை தேடிக்கொள்வதும், நினைக்க நினைக்க மகிழ்ச்சியூட்டுவன அல்லவா?

அவை மட்டுமன்றி எமது வாழ்க்கையில் பல சம்பவங்கள் நடந்தேறுகின்றன. விவாகம், பூப்புனித நீராட்டு விழா, வீடு குடிபுகுதல், பட்டமளிப்பு விழாக்கள் என்று அவை பலதரப்படும். அனைத்தையும் நாம் படம் பிடிக்கின்றோம். 'வீடியோ' செய்கின்றோம். எக்காலத்தில் அவற்றை பார்த்தாலும் மகிழ்ச்சி உண்டாகின்றதல்லவா?

இனி அடுத்த கட்டத்திற்கு நகர்வோம். பல செல்வந்தர்களை ஏன் சினிமா நட்சத்திரங்களையும் எடுத்து நோக்குவோம். அவர்கள் ஆடம்பரமாகவும், உல்லாசமாகவும் வாழ்வது போன்றே எமது

கண்களுக்கு தோன்றும். எமக்கும் அப்படிப்பட்ட வாழ்க்கை கிட்டாதா? என எமக்கு தோன்றும். ஆனால் உண்மையில் அவர்கள் ஏன் ஆடம்பரத்திலும் உல்லாசத்திலும் தம்மை அதிகளவு ஈடுபடுத்துகின்றார்கள் என்று பார்த்தால் நாம் திகைப்படைய வேண்டியதாகவே இருக்கும்.

குடும்ப சிக்கல்கள், பொருளாதார வீழ்ச்சி, மனத்தளர்ச்சி, மனைவி பிள்ளைகளின் தவறான நடத்தைகள் போன்ற பாதிப்புகள் பலரை உல்லாசத்தை நோக்கி செலுத்துகின்றது. இதனால் மதுப்பழக்கம், பிற பெண்கள் உடனான உறவு, போதைவஸ்து பாவனை, போன்றவற்றுக்கு அவர்கள் ஆளாகின்றார்கள். தனிமை அவர்களை மேலும் வாட்டுகின்றது.

சிலர் விவாகம் உல்லாசத்திற்கு தடை என்றும் குழந்தைகள் பிறந்தால் விரும்பிய விரும்பியபடி நடக்க இயலாது என்றும் எண்ணி தமது இளமை பராயத்தை தவறான வழிகளில் வீணடித்து விடுகிறார்கள். முதுமையில் அவர்கள் மனத்தளர்ச்சிக்கு உள்ளாகுவதுடன் வாழ்க்கைக்கு மிக மிக அவசியமான மகிழ்ச்சியையும் நிம்மதியையும் இழக்கின்றார்கள்.

உண்மையில் உல்லாசம் உண்மையான மகிழ்ச்சியை தராது. அதுவும் தவறான வழியில் எவர் எவர் உல்லாசம் அனுபவிக்க முற்படுகின்றார்களோ அவர்கள் இந் நாட்களில் தண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களே அதிகமாக உள்ளன. மது, போதைப்பொருள், 'சிகரெட்', போன்றவற்றின் பாவனை நிமித்தமான நுரையீரல் புற்று, தவறான நடத்தை காரணமான 'எயிட்ஸ்' ஆகிய நோய்கள் இவர்களை இலகுவில் தாக்குகின்றன.

எமது வாழ்வை நாம் ஆயிரம் காலத்துப் பயிர் என்று கொள்ள வேண்டும். எவர் ஒருவர் மகிழ்ச்சியுடன் வாழ்கிறாரோ அவர் நீண்ட ஆயுளைக் கொண்டவராக இருக்கின்றார். எனவே உல்லாசம் உல்லாசம் என்று எம்மை நாம் அழித்து கொள்ளாமல் ஒழுக்க சீலர்களாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். எமது மனம் தான் எமது வாழ்க்கையின் ஜீவன். அதனை நாம் மகிழ்ச்சி என்கின்ற பொக்கிஷத்தால் நிரப்ப வேண்டும்.

உண்மையான மகிழ்ச்சி எப்படி உண்டாகின்றது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்தால் அது எமக்கும் பிறருக்கும் நன்மையை உண்டு பண்ணும்.

யேசு கிறிஸ்து, புத்தர், மகாத்மா காந்தி போன்ற மகான்கள் மக்களுக்கு எப்படி மகிழ்ச்சியுடன் வாழ்வது என்பதை உணர்த்திச் சென்றுள்ளார்கள்.

மகிழ்ச்சி என்பது பொது நலத்திலும், பிறருக்கு சேவை செய்வதிலும் பிறர் மேல் அன்பு செலுத்துவதிலுமே உண்டாகின்றது.

நாமும் அவ் வழியில் நடப்போமாயின் எம் வாழ்வு மகிழ்ச்சியில் பூத்துக் குலுங்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை!

மலைமுரசு வாரமலர் - 21.02.2015 27.02.2015

ஆசிரியரின் பிற நூல்கள்

1. ஸ்திரீ இலட்சணம்
   சிறுகதைத் தொகுப்பு - 2002

2. தொடரும் தலைமுறைகள்
   தினமுரசு சிறுகதைகள் தொகுப்பு - 2003

3. மீண்டும் வசந்தம்
   நாவல் - 2004

4. இந்திரர்கள் நாடும் அகலிகைகள்
   சிறுகதைத் தொகுப்பு - 2006

வலி தெற்கு பிரதேச சபை
பொதுசன நூலகம்

இப்புத்தகம் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். குறித்த தவணைக்குள் கொடுக்கப்படாத புத்தகம் ஒவ்வொன்றுக்கும் நாள் ஒன்றுக்கு குற்றப்பணமாக ரூபா 1.00 அறவிடப்படும்.

17/12/14 = 475		
31/12 (475)		

பகுப்பு எண்	சேர்வு இல
894.8114	12237

அன்பு நெஞ்சங்களே!

மனிதனது வாழ்க்கை, அனுபவத்தில் பூரணத்துவமடைகின்றது! அனுபவம்தான் ஞானம் ஆகும். ஞானம் கைகூடிவிட்டால் வேறெதுவும் வேண்டியதில்லை. இறைவத்துவம் குறிக்கோளாக இருந்து விட்டால் அனைத்தும் ஆனந்தமயமே! அந்த உண்மையை அறியாமல் தான் மனித குலமே அல்லாடுகின்றது. நாடுகள் யுத்த பேரிகையை முழங்குகின்றன. பயங்கரவாதம் அரசோச்சுகின்றது.... புத்தரும் யேசுவும் விவேகானந்தரும் மக்களின் நலனுக்காக தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள்.

நாம் ஒவ்வொருவருமே எமது அனுபவங்களை பிறருடன் பகிர்ந்துகொள்வதிலும் பிறரது அனுபவங்களை அறிந்து கொள்வதிலும் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். காதலர்கள் தமது அனுபவங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்கின்றார்கள்.... கணவன் மனைவி மனம் திறந்து பேசுவதன் மூலம் இல்வாழ்வில் தம்மை இறுக பிணைத்துக்கொள்கின்றார்கள்!

இன்று முகநூலை திறந்தால் அது அனுபவ பகிர்தலின் மூலம் நிறைந்து கிடக்கின்றது. பயனாளிகள் தமது அனுபவங்களை சுருக்கமாகவும் சுவையான தாகவும் பகிர்ந்து கொள்கின்றார்கள். மேலும் சிலர் தாம் சஞ்சிகைகளிலும் வாரமலர்களிலும் படித்து மகிழ்ந்தவற்றை மற்ற பயனாளிகளுக்கு அறியத் தருகின்றார்கள். தாம் அறிந்த விடயங்களை மற்றவர்களுடன் பகிர்தலின் மூலம் அன்பும் அறிவும் நட்பும் பெருகுகின்றது.

உலகம் உய்ய வேண்டுமாயின் ஒவ்வொருவரினதும் மனம் அகலத்திறக்க வேண்டும். முதிர்ந்த கள்ளங்கபடமற்ற அனுபவங்கள் மனிதர்களை இலகுவில் பற்றிக்கொள்கின்றன. வாழ்கையின் தேவையும் அதுவே!
அன்பு வாசகர்களே!

உண்மை, சத்தியம், நேர்மை வழி நான் பயணித்த எழுபது வருடகால வாழ்கை நெறியை தயவுடனும் வெட்ட வெளிச்சமாகவும் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். இந் நூல் மலைமுரசிலும் வீரகேசரியிலும் பிரசுரமான முப்பது கட்டுரைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. எனது முகநூல் நண்பர்களுக்கு இவற்றில் சிலவற்றை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கலாம்.

யுவதிகளும் இல்லத்தரசிகளும் புது யுகத்துக்குள் காலடி எடுத்து வைப்பதற்கும் மாணவர்கள் தமது அறிவாற்றலை வளர்த்துக்கொள்வதற்கும் இளைஞர்கள் தமது நடத்தையையும் ஆற்றலையும் மேம்படுத்துவதற்கும் இக்கட்டுரைகள் நிச்சயம் வழியமைக்கும்!

தொலைபேசி இல : 026-2224706
0719392190

கலாபூஷணம் வீ.என்.சந்திரகாந்தி.
572A, ஏகாம்பரம் வீதி
திருக்கோணமலை.

ISBN 978-955-98979-0-3



ART 0776566173